விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 15 புதன்கிழமை (01.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 317

# புதிய அரசியலமைப்பின் மூலம் இனப்பிரச்சினை தீர்க்கப்படும்


## சர்வதேச சமூகம் நம்பும் வகையில் அரசியல் தீர்வும் அவசியமானது

### அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பு உருவாக்குவதன் ஊடாக இலங்கையின் பாரிய பிரச்சினையாக காணப்படும் இனப் பிரச்சினை தீர்க்கப்படுவதோடு சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் எனவும் சர்வதேச சமூகத்தினர் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்தக் கூடிய ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என நீதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

(04ஆம் பக்கம் பார்க்க)



### யாழ்.மடத்தடியில்
## வாள்களுடன் நின்ற 4 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மடத்தடி வீதியில் வாள்களுடன் நின்ற 4 இளைஞர்கள் நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் யாழ்ப்பாணப் 23

### பால் புரக்கேறியதில்
## 11 நாட்களேயான ஆண்குழந்தை பலி

(யாழ்ப்பாணம்)

பால் புரக்கேறியதில் 11 நாட்களேயான ஆண் குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று புதுக்குடியிருப்பில் இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு மந்துவில் 3 ஆம் வட்டாரத்தில் வசிக் 23

## வடக்கில் மாவீரர் நாளையொட்டி தெற்கில் குழப்பமடையத் தேவையில்லை

### சுதந்திரக்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னிப்போரில் உயிர்நீத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளை நினைவுகூரும் மாவீரர் நாளை தாயகப் பகுதிகளிலுள்ள மக்கள் அனுஷ்டிப்பதையிட்டு தெற்கிலுள்ள மக்கள் குழப்பமடையத் தேவையில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

சமஷ்டி தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்கினால் அதனை வைத்துக் கொண்டு புலம்பெயர்ந்த பிரிவினைவாத சக்திகள் வேறுவிதங் 23

### மகளை காப்பாற்ற முற்பட்ட போது
## மின்சாரம் தாக்கியதில் குடும்பப் பெண் உயிரிழப்பு

(கரணவாய்)

மின்சாரத்தாக்குதலுக்கு இலக்கான மகளைக் காப்பாற்ற முயன்ற தாய் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சோகச்சம்பவம் வடமராட்சி தும்பளைப் பகுதியில் நேற்று 23



## கைக்குண்டொன்று நந்தாவிலில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள காணியொன்றிலிருந்து நேற்று வெடிக்கக் கூடிய நிலையில் கைவிடப்பட்ட கைக்குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

பொலிஸாரின் 119 அவசர அழைப்புக்கு கிடைக்கப்பெற்ற 23

## பெற்றோல், டீசல் விலை குறைவடையும்!

(கொழும்பு)

பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் மிகவிரைவில் குறைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக பெற்றோலிய வளத்துறை அமைச்சில் நேற்றைய தினம் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. 23

## தமிழரசுக்கட்சியின் நிலைப்பாட்டால் கட்சி ஆதரவாளர்கள் கடும் அதிருப்தி

### ஒன்று கூடி ஆராய்வதற்கும் ஆயத்தம்

(யாழ்ப்பாணம்)

இடைக்கால வரைபு தொடர்பில் இலங்கை தமிழரசுக்கட்சி தமிழ் மக்களுக்கு ஆபத்தைத்தரக் கூடிய வகையில் கருத்துரைப்பதால், அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் அதிருப்தி கொண்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெளத்த மதத்திற்கு முன்னுரிமை என இடைக்கால வரைபில் குறித்துரைக்கப்பட்ட விடயத்தில் தமிழரசுக்கட்சி உடன்படுவதாக அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகள் அமைந்துள்ளதாலேயே அக்கட்சியின் மூத்த உறுப்பினர்களும், ஆதர 02

## வழுக்கி விழுந்த குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தரொருவர் நேற்று வழுக்கி விழுந்த நிலையில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நேற்றையதினம் யாழ்.போதனா வைத்திய 23

### மீனவர்களுக்கு எச்சரிக்கை
## கடும் காற்று வீசும் கடல் கொந்தளிக்கும்

(கொழும்பு)

தற்போது நிலவும் சீரற்ற கால நிலையால் நாட்டின் மேற்கு மற்றும் வடமேற்குக் கரையோரப் பகுதிகளில் கடும் காற்று வீசும் என்றும், இதனால் அப்பகுதிகளில் கடல் கொந்தளிப்பாகக் காணப 23

## சமஷ்டியை கைவிட்டது தமிழ்த் தலைவர்களின் தவறே

### சிறிநேசன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

அந்தக் காலத்தில் ஐக்கிய இலங்கைக்குள் வாழ முடியும் என தெரிவித்து சமஷ்டியை கைவிட்டது தான் தமிழ்த் தலைவர்கள் 23

### ஆயுத முனையில்
## சினிமாப் பாணியில் வடமராட்சியில் கொள்ளை

(கரணவாய்)

கூரிய ஆயுதங்கள், கொட்டன்களுடன் முகத்தை கறுப்புத் துணியினால் கட்டிக்கொண்டு கரவெட்டிப் பகுதியிலுள்ள இரண்டு வீடுகளுக்குள் புகுந்த கொள்ளைக் கோஷ்டியினர் சிறுவர்களை பணயமாக வைத்து சினிமா பாணி 23

## வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டி தீர்வே தமிழரின் விருப்பம்

### நாடாளுமன்றில் சிறீதரன்

(கொழும்பு)

தமிழ் மக்களுடைய எண்ணங்களை பிரதி பலிக்காத தீர்வை மத்திய அரசு முன்வைக்குமானால் கட்டலோனியா போன்ற பிரகடங்களை தமிழ் மக்களும் முன் வைக்க தயாராகிவிடுவார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். 23

### அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக
## கொட்டும் மழையில் பல்கலை மாணவர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி உறுதியளித்தது போன்று அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகளை மீளவும் அநுராதபுரம் நீதிமன்றிலிருந்து வவுனியா மேல்நீதிமன்றுக்கு மாற்றுமாறு கோரி யாழ். பல்கலை 23



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழரசுக்கட்சியின்...

வாளர்களும் அதிருப்தி அடைந் துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந் நிலையில் தமிழரசுக் கட்சியின் அதிருப்தியாளர்கள் விரைவில் ஒன்று கூடி தமிழரசுக் கட்சியின் சமகாலப் போக்குக் குறித்து ஆராய்வதுடன் தமது அடுத்தகட்ட நடவடிக்கை என்னவாக இருக்க வேண்டும் என்பது பற்றியும் தீர் மானிக்கவுள்ளதாக தகவல்கள் கசிந துள்ளன.

இதேவேளை இலங்கை தமிழர சுக் கட்சியின் அதிருப்தியாளர்கள் ஒன்று கூடி கட்சியின் ஆதரவாளர் களைத் திரட்டி கட்சியின் செயறபாட் டில் இருக்கக் கூடிய ஐயுறவுகளை வெளிப்படுத்தும் பட்சத்தில் அது தமிழரசுக் கட்சிக்குப் பலத்த சவாலாக இருக்கும் என பெயர் குறிப்பிட விரும்பாத அரசியல் ஆய் வாளர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார். (எ)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் ஆசிரியை

**திருமதி ரஞ்சினி நரேந்திரன்**

(Dip in Edu, B.A, Trd.Primary)



அவர்கள் 2017.10.28 அன்று மாகாண நிலை நல்லாசிரியர் விருதான "குரு பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றமையை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை (F-229)

## மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்



மாகாண நிலை நல்லதிபர் விருது-2017
"குரு பிரதீபா பிரபா"

**செல்வி சரவணமுத்து சந்திரவதனி**

28.10.2017 அன்று யா/இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விருது வழங்கும் வைபவத்தில் நல்லதிபராக விருது பெற்ற எமது பாடசாலை அதிபரை பாராட்டுவதுடன் மேலும் பல விருதுகளை பெற வாழ்த்தி நிற்கின்றோம்

வாழ்த்துவோர்:-
ஆசிரியர்கள், மாணவர்கள்
கிளி/பரந்தன் அ.த.க. பாடசாலை (F-288)



ஒருவரின் இருதயத்தை இன்னொருவருக்கு மாற்றியமைத்ததன் மூலம் இலங்கை மருத்துவ வரலாற்றில் சரித்திரம் படைத்த மருத்துவ நிபுணர்குழுவின் பிரதம மருத்துவ நிபுணர் குமாரதாசன் ஞானகாந்தனிடம் ஒரு தன்மைக் கோட்பாடு கொண்ட ஆங்கில சட்டத்தத்துவத்தை இரு தன்மைக் கோட்பாடாக மாற்றியமைத்த ஆய்வு நிறுவல் பொதியினை சட்ட ஆய்வாளர் நீர்வையூர் இரா. சோதிநாதன் கையளிப்பதனை படத்தில் காணலாம். (1195)


WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
நாடுங்கள்
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-222)



Architectural CAD Centre[Jaffna-Vavuniya-Colombo]
[Personal-Group-Visiting Classes]
2D-Drawing 3D-Modeling
Auto CAD
Lecturer By Mr.K.N Mugunthan(D/A)
Cert.in Auto CAD(2D Drawing&3D Modeling)
University of Peratheniya.
Cert.in Auto CAD(Advance 3D Modeling)
University of Moratuwa.
Cert.in Auto CAD(2D Drawing&3D Modeling)
Open University of Sri Lanka.
Cert.in Auto CAD(2D-&3D)(1stClass)
University of Colombo.
Link: 077-5116320 071-8617972
[Civil & Mechanical]
(1202)



## பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர் உள்ளகம், வெளியகம் (இருபாலாரும்)
- பொது சனத் தொடர்பாளர் (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை)
- ஒப்பு நோக்குநர் (இருபாலாரும்)
- கணனி தமிழ் ரைப்பிங் (இருபாலாரும்)

**குறிப்பு:-**

க.பொ.த உயர்தரத்தில் சித்தியும் 25 வயதிற்கு மேற்பட்டவர்களும். முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படுவதுடன் யாழ்ப்பாண நகர மையத்தில் இருந்து அண்மித்த இடத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் 06.11.2017 திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு நேரில் வரவும்.

**வலம்புரி**
**பொது முகாமையாளர்**
**இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொடர்பு:-0215671532**



NSB

## பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 01/06/2016 முதல் 30/09/2016 வரை அடகுவைக்கப்பட்டு இன்று வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 11/11/2017 தொடக்கம் 25/11/2017 வரையான காலப்பகுதியில் அந்தந்த கிளைகளிலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்

| | கிளை | பகிரங்க ஏலம் நடைபெறவுள்ள திகதி |
|---|---|---|
| 01 | சங்கானை | 11/11/2017 |
| 02 | யாழ்ப்பாணம் | |
| 03 | மானிப்பாய் | |
| 04 | திருநெல்வேலி | |
| 05 | காரைநகர் | 18/11/2017 |
| 06 | கிளிநொச்சி | |
| 07 | மல்லாவி | |
| 08 | சாவகச்சேரி | 19/11/2017 |
| 09 | ஊர்காவற்றுறை | |
| 10 | கோப்பாய் | |
| 11 | முல்லைத்தீவு | |
| 12 | நெல்லியடி | |
| 13 | பருத்தித்துறை | |
| 14 | வங்காலை | |
| 15 | அச்சுவேலி | 25/11/2017 |
| 16 | சுன்னாகம் | |
| 17 | யாழ்ப்பாணம் 2ம் கிளை | |
| 18 | கொடிகாமம் | |

ஏலத்தை ஒத்தி வைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

வட பிராந்திய முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி
(1196)

# புதிய அரசியலமைப்பை உருவாக்குவதில் இழுத்தடித்தால் மீண்டும் பொறியில் சிக்க நேரிடும்

## இலங்கைக்கு மேற்குலக இராஜதந்திரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

புதிய அரசமைப்பை உருவாக்குவதிலும் தேர்தலை நடத்துவதிலும் இலங்கை அரசு தொடர்ந்தும் உறுதியற்ற போக்கைக் கடைப்பிடித்து இழுத்தடிப்புச் செய்தால் சர்வதேசத்தின் பொறிக்குள் மீண்டும் சிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று கொழும்பிலுள்ள மேற்குலக இராஜதந்திரிகள், வெளிவிவகார அமைச்சுக்கு இராஜதந்திர மட்டத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சர்வதேச களத்தில் நல்லாட்சி அரசுக்கு கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் முக்கிய பாத்திரத்தை வகித்த இராஜதந்திரிகளே இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருப்பதானது, அரசின் கொள்கை வகுப்பாளர்களையும், ஆலோசகர்களையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளதாக கூறப்படுகிறது.

ஜனநாயகத்தின் முக்கிய கருப்பொருளாக தேர்தலே கருதப்படுகின்றது. எனவே, அது உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அது உரிமை மீறலாகவே பார்க்கப்படும். அத்துடன், ஆட்சிக்கு வந்த ஓராண்டுக்குள் புதிய அரசமைப்பு கொண்டு வரப்படும் என்று நல்லாட்சி அரசு உறுதியளித்திருந்தது. பொறுப்புக்கூறலும் வெளிப்படுத்தப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவை ஒன்றும் இன்னும் நடைபெறவில்லை. அரசின் செயன்முறையானது அதே பாணியில் பயணிக்குமானால் மீண்டும் நெருக்கடிதான் ஏற்படும் என்று மேற்குலக இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசானது, மேற்குலக நாடுகளுடன் சிறந்த நட்புறவைப் பேணவில்லை. இதனால், சர்வதேச மட்டத்தில் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் பெரும் தலையிடி கொடுத்தன. பொறுப்புக்கூறும் கடப்பாட்டை வெளிப்படுத்தல், தேர்தலை நடத்தல் உள்ளிட்ட விடயங்களில் அசமந்தப்போக்கைக் கடைப்பிடித்து வந்ததாலேயே மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு எதிராக ஜெனிவா கூட்டத்தொடரில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன், சில நாடுகளும் பொருளாதார மட்டத்திலான தடைகளை விதிக்கத் தயாராகின. இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகளும் மட்டுப்படுத்தப்பட்டன. ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கும், பொறுப்புக் கூறுவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அதற்கான தீர்வுப்பொதியாக புதிய அரசமைப்பு அமையும் என்றும் மைத்திரி, ரணில் தலைமையிலான தேசிய அரசு உறுதியளித்திருந்தது.

இதையடுத்து இலங்கை மீதான பிடியை சர்வதேசம் தளர்த்திக்கொண்டு நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடித்தது. இலங்கை மீதான சில தடைகளும் நீக்கப்பட்டன. ஆனால், வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசு முன்னேற்றம் காட்டவில்லை. ஈராண்டுகள் கடந்தும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டிருந்த வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட வில்லை.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த வெளிநாட்டுப் பிரமுகர்களும், ஐ.நா. அறிக்கையாளர்களும் இந்த விடயத்தைப் பகிரங்கமாகவே குறிப்பிட்டிருந்தனர். அத்துடன், புதிய அரசமைப்புக்கு எதிர்ப்புகள் வலுத் துள்ளன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இலங்கை அரசு இனியும் ஆமை வேகத்தில் பயணிக்குமானால் சர்வதேச நாடுகள் வழங்கி வரும் பொருளாதார. அரசியல் ரீதியான ஒத்துழைப்புக்களை இழக்க நேரிடும் என்றும், நேரடி வெளிநாட்டு முதலீட்டிலும், சுற்றுலாத்துறையிலும் தாக்கங்கள் ஏற்படக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தமக்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுகின்றது என்றும், வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சின் சார்பில் மேற்படி இராஜதந்திரிகளுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. (இ-7)

# அரசியல் யாப்பு குழுவின் அறிக்கையில் அனைத்து முதலமைச்சர்களின் அனுபவங்களும் உள்ளடக்கம்



(கொழும்பு)

பிளவுபடாத மற்றும் பிரிக்க முடியாத நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாத்து அரசியல் யாப்பு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள், வடக்கு மற்றும் தெற்கிலுள்ள அனைத்து முதலமைச்சர்களின் அனுபவங்கள் இந்த ஆலோசனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசியல் யாப்பின் நடவடிக்கை குழுவின் அறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தின் போது பாராளு மன்றத்தில் நேற்று உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெற்றிகரமான மற்றும் வலுவான நாட்டின் தேவையான புதிய அரசியல் யாப்பை நாட்டுக்கு வழங்கும் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, முஸ் லிம் காங்கிரஸ், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, எதிர்க்கட்சியில் உள்ள மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை கம் யூனிஸ்ட் கட்சி இதற்கு பங்களிப்பு செய்துவருகின்றமை முக்கியமான நிகழ்வென்று அவர் சுட்டிக்காட்டினார்.

அரசியல் யாப்பில் மாற்றத்தை மேற்கொள்ளும் ஆற்றல் மத்திக்கு இல்லை ஆயினும் அரசியல் பேரவைக்கு அதிகாரம் இருக்கும் பொழுது அதனை ஒற்றை ஆட்சி எண்ணக்கருவாக ஏற்றுக்கொள்ள முடியும் என்று உயர் நீதிமன்றம் உறுதிசெய்திருப்பதாகவும் ஜயம்பதி விக்கிரமரத்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

# அசாதாரண நிலை காரணமாக யாழ்.பல்கலைக்கழக கற்றல் நடவடிக்கைகள் இடைநிறுத்தம்

## துணைவேந்தர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

துணைவேந்தருடன் பீடாதிபதிகள் நேற்று தற்போதைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பிரதான வளாகத்தில் தோன்றியுள்ள அசாதாரண நிலைமையை ஆராய்ந்தனர்.

அதன்படி கலைப்பீடம், விஞ்ஞானபீடம் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் ஆகிய பீட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் உடனடியாக அமுலுக்குவரும் வகையில் இடைநிறுத்தப்படுவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம்எல்லா மாணவர்களுக்கும் உட்புகுவதற்குத் தடை விதிக்கப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்படுகின்றது.

. விடுதியில் தங்கியுள்ள மேற்படி பீட மாணவர்கள் 01.11.2017 பி.ப.4 இற்கு முன்பதாக விடுதிகளில் இருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள் என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் அறிவித்துள்ளார். (இ-7)

# வடமராட்சியில் நேற்று அதிகாலை இரண்டு வீடுகளில் பாரிய திருட்டு

## ஆயுதங்களுடன் நுழைந்தவர்கள் அட்டகாசம்

(கரணவாய்)

வடமராட்சி பகுதியிலுள்ள வீடுகளுக்குள் சினிமா பாணியில் நுழைந்த 10 பேர் கொண்ட திருட்டு கும்பல் ஒன்று விநோத முறையில் பல இலட்சம் பெறுமதியான பொருட்களைத் திருடி சென்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வடமராட்சி துன்னாலை குமரன் குளப் பகுதியில் அமைந்துள்ள வீட்டிற்கு நேற்று அதிகாலை ஒரு மணியளவில் 10 க்கும் மேற்பட்ட நபர்கள் புகைக்கூடு வழியாக உள்நுழைந்துள்ளனர். தமது முகத்தை கறுப்புத் துணிகளால் கட்டியவாறு கத்தி, பொல்லுடன் உள்நுழைந்த இவர்கள், வீட்டில் இருந்தவர்களை ஒரு அறைக்குள் வைத்து பூட்டிவிட்டு ஒன்றரை வயதுக் குழந்தையை மட்டும் கையில் வைத்திருந்துள்ளனர். யாராவது சத்தமிட்டால் குழந்தையைக் கொன்று விடுவோம் எனவும் மிரட்டியுள்ளனர்.

பின்னர், வீட்டு மேசையில் இருந்த தொலைபேசியை எறிந்து உடைத்ததுடன் வீடு முழுவதும் சோதனை செய்து 25000 ரூபாய் பணம், ஒரு சோடி காப்பு, தாலிக்கொடி, மோதிரம், சங்கிலி உட்பட பணம் சேமித்து வைத்திருந்த உண்டியலையும் திருடிச் சென்றுள்ளனர்.

அங்கிருந்து சென்ற திருடர்கள், மத்தொனி என்ற இடத்தில் உள்ள வீட்டுக்குள் நுழைந்து, தாம் திருடி வந்த உண்டியலை அங்கு வைத்துவிட்டு அந்த வீட்டில் இருந்த வேறு பொருட்களை திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் வீட்டு உரிமையாளர்கள், நெல்லியடி பொலிஸாரிடம் முறையிட்டனர். பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (இ-9-60)

# புலிகளை தாக்கிய பந்துலவிற்கு அமைச்சர் விஜயகலா தக்கபதிலடி

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் தலைவர்கள் பலரை கொன்றொழித்து முக்கிய இடங்களுக்கும் விடுதலைப் புலிகள் குண்டுவைத்தனர் என பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்த கருத்திற்கு இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தக்க பதிலடி கொடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வில் முன்





வைக்கப்பட்ட இக் குற்றச்சாட்டையடுத்து எழுந்த விஜயகலா முள்ளிவாய்க்காலில் மக்களை கொன்றுகுவித்தது யாரென்ற கேள்வியை எழுப்பினார்.

அத்தோடு தீர்வு விடயத்தில் பல காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கையில் அதனை குழப்பும் வகையில் செயற்பட வேண்டாம் என்றும் விஜயகலா எச்சரித்துள்ளார். (இ)

# புதிய கடற்படைத் தளபதி ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமெவன் ரணசிங்க நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தார்.

தனது பதவியின் பொறுப்புக்களை கையேற்றதன் பின்னர் புதிய கடற்படைத் தளபதியாக உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியை சந்தித்ததுடன், சம்பிரதாயபூர்வ நினைவுப் பரிசில்களும் இதன்போது பரிமாறிக் கொள்ளப்பட்டன. (இ-7)



## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

# பொலிஸார் அதிரடி; மூவர் கைது

(மல்லாவி )

கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப்பிரிவுப் பொலிஸாரின் விசேட சுற்றிவளைப்புக்களின் போது,

சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் கைப்பற்றப்பட்டு நிர்மூலமாக்கப்பட்ட சம்பவமும் மற்றும் அரியவகை ஆமை ஒன்றை இறைச்சிக்காக கொண்டு சென்ற நபர் கைதானதுடன், அனுமதிப் பத்திரம் இன்றி அரச சாராயத்தை தனது உடைமையில் வைத்திருந்த 03 குற்றச்செயல்களில் ஈடுபட்ட மூன்று சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரையான காலப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய கிளிநொச்சி/முல்லைதீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப்பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸார் கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவிலும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவிலும் விசேட சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளனர்.

இதில் முன்னதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள வட்டக்கச்சி பகுதியில் சட்டவிரோதமான முறையில் அனுமதிப் பத்திரம் இன்றி 13 போத்தல் அரச சாராயத்தை தனது உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை நேற்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் கைது செய்துள்ளனர்.

இதேவேளை நேற்று பிற்பகல் 02 மணியளவில் கிளிநொச்சி டிப்போச் சந்தியில் இருந்து இரந்தினபுரம் செல்லும் வீதியில் உள்ள பெரிய பாலத்தில் கீழ் உள்ள வாய்க்காலில் இருந்து சுமார் 15 கிலோ நிறையுடைய அரிய வகை ஆமை ஒன்றை இறைச்சியாக்கும் நோக்குடன் கொண்டு சென்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அன்றைய தினமே பிற்பகல் 2.30 மணியளவில் தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட கண்டாவளை கோரக்கன் கட்டுபகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைக்கப்பட்டு கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன படுத்திய உபகரணங்களுடன், கசிப்பு -12 லீற்றர் மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தும் கசிப்புக் கோடா 05 பரல்களில் உள்ளடங்கிய 900 லீற்றர் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதுடன்,

சம்பவ இடத்தில் இருந்து 02 சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில், சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதன் பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையமும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான 03 சந்தேக நபர்களையும் கிளிநொச்சி, தருமபுரம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

## மரண அறிவித்தல்



### கந்தையா சந்திரவர்ணன்

(ஓய்வுபெற்ற கிராமசேவையாளர் - உடுவில்)

***யாழ்ப்பாணம், உடுவிலை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சந்திரவர்ணன் நேற்று (31.10.2017) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.***

***இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.***

***அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.***

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய்.
(C-231)

தகவல்: ச. பிரசாந்தன் (மகன்) (077 685 0699)
ச.கிருசாந் (மகன்) 077 089 5692
க. காந்தி (மருமகன்) 077 949 1015

## புதிய அரசியலமை...

புதிய அரசியல் யாப்பு வகுப்பதன் மூலம் நாடு புதிய திசையை நோக்கி பயணிக்க கூடியதாக இருக்கும். அரசியல் யாப்பின் நடவடிக்கை குழுவின் அறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தின் போது பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதற்கமைவாக நாட்டு பிரஜைகள் மூலமாக பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த யுகத்தில் பாரிய பிரச்சினையில் அழகான சொற்களை புறந்தள்ளி தப்பிச் செல்லவேண்டாம்.

இலங்கையின் பாரிய பிரச்சினை இனப் பிரச்சனையாகும். சிலருக்கு இந்த பிரச்சினை இல்லை. ஓரளவுக்கு அல்லது அறிவுள்ள எந்தவொரு நபரும் இனப்பிரச்சினை இல்லை என்று சிந்திக்க முடியுமா? அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இலங்கை தேசத்தை உருவாக்குவதற்காக அரசியல் யாப்பு குறித்து பேசியுள்ளனர். நீண்டகால வரலாறு முழுவதும் தேவையாக இருந்த பல்வேறு மக்களின் கனவுகளை நனவாக்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் முன்வந்துள்ளது.

கடந்த 70 வருட காலமாக அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பு அடிப்படையில் சில மாற்றங்களே ஆகும்.

நிலையான, நீண்டகால சமாதானத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். சமத்துவமிக்க மக்கள் சமூகத்தை நாட்டில் ஏற்படுத்த வேண்டும்.

இதன்மூலம் பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்த முடியும். பிளவுபடாத வன்முறையற்ற நாடொன்றை காண்பதற்கு இவர்கள விரும்புகின்றனர். இளைஞர்கள் பலரின் உயிரை நாம் இழந்தோம். வறிய மக்களான சிங்களவர், தமிழ் இனத்தினர் துன்பப் பட்டனர். மீண்டும் அவ்வாறானதொரு வன்முறை ஏற்படுவதை நாம் விரும்பவிலலை. புதிய நாடு என்ற ரீதியில் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்பும் ஆற்றல் எமக்கு இருக்க வேண்டும்.

தற்பொழுது பல அறிக்கைகள் அரசியல் யாப்பு செயற்பாடுகளில் சேர்க்கப் பட்டுள்ளன. இவை அனைத்தும் அனைவரதும் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடாகும். பயனுள்ள கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டும.

சிறந்த அடிப்படை, நம்பிக்கை மிகுந்த அரசை கட்டியெழுப்புதல், ஸ்திரத்தன்மை, மறுசீரமைப்பான நாடொன்றை கட்டி யெழுப்புதல் வேண்டும்.

புதிய அரசியல் யாப்பு முன்னெடுப்பதன் மூலம் நாடு புதிய திசையை நோக்கி பயணிக்க முடியும். 70 வருட கால அபிவிருத்தியை நாம் அடையவில்லை. இனம், மதம், கட்சி என்ற ரீதியில் நாம் சிதறுபட்டு இருந்தோம்.

நாடு என்ற ரீதியில் எவ்வாறு முன்னோக்கி பயணிப்பது என்பது குறித்து நாம் கலந்துரையாட வேண்டும். அரசியல் யாப்பின் மூலம் சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதிசெய்யமுடியும்.

நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அரசியல் யாப்பை ஏற்படுத்துவதற்கு யார் எதிர்க்க முடியும். பொருளாதார சுபீட்சம் எமது நாட்டு மக்கள் மத்தியில் இல்லாமல் போகின்றது. மீண்டும் ஒரு யுத்தத்திற்கு செல்லவேண்டுமா? இலங்கையர் ஆகிய நாம் வளர்ச்சிகண்ட இனத்தவராக மேம்படவேண்டுமாயின் சர்வதேச சமூகத்தின் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்தக்கூடிய அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-4)


## வைத்தியம்

நோய் எதுவாயினும் தீர்வு உண்டு. தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டுப் பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடற்பருமன் குறைத்தல் (வயிறு/மார்பு/கை) அல்லது கூட்டுதல், ஆண்மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு மருந்தின்றி பக்கவிளைவின்றி அக்குபஞ்சர் சிகிச்சை வழங்கப்படும். (1041)

தொடர்பு: (ACU) Dr. Sanker | T.P: 077 035 7307


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை திருமதி கிருசாந்தினி கோபிநாத் அவர்களின் அன்பு மாமனார்

### தம்பிநாயகம் தர்மகுலசிங்கம்

அவர்கள் 29.10.2017 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்*

**அதிபர், ஆசிரியர்கள்**
யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை,
உடுவில்.

(1197)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. சிவப்பிரகாசம் ரஜனிகாந்த் அவர்கள்**

(BA. Dip in Fse, Trd, So.Sc)
**ஆசிரியர் கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை**

குருத்துவத்தின் மகத்துவத்தை
குவலயமே அறிந்து போற்றும் வண்ணம்
"குரு பிரதீபா" விருதினை 28.10.2017ல் பெற்ற
சிறப்பு மிகு எங்கள் ஆசிரியர்
சிவப்பிரகாசம் ரஜனிகாந்த் அவர்கள்
களிப்புடனே நீடு வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்க!

வாழ்த்துவோர்:-
**அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,**
**நலன்புரிச் சங்கம்**
**கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை**

(C-227)




ICBT HND QUANTITY SURVEYING

TVEC REGISTERED

» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

Accredited by RICS

BSc (Hons) Quantity Surveying

» Entry Qualifications
- HND or Equivalent Qualifications Acceptable to the University
- Progression Routes for NDT, NDES(Civil), C&G (Civil), NCT(Civil / QS)

UGC RECOGNIZED

» Duration: 1 Year

Week End Part Time Classes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector






ICBT DUAL HNDs Software Engineering + Computing

Duration 2 Years

Cardiff Metropolitan University

UGC RECOGNIZED

BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications

Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L | O/L → HND → BSc DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector

www.icbt.lk






ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

TVEC REGISTERED

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

UGC RECOGNIZED

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector

www.icbt.lk


(அ-2224)





HND IN CIVIL ENGINEERING

Entry Qualifications
- G.C.E. A/L or G.C.E. O/L + Engineering Foundation

Duration • 2 Years

TVEC REGISTERED

A/L's → HND → BSc → MSc DEGREE COMPLETION IN SRI LANKA

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

BSc (Hons) CIVIL & STRUCTURAL ENGINEERING

UGC RECOGNIZED

ICE

Entry Qualifications
- Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector

# வடக்கில் கடந்த ஒன்பது மாதங்களில் 87 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகம்

## சிறுவர் பராமரிப்பு திணைக்களம் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கடந்த ஒன்பது மாதங்களில் 87 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத் தப்பட்டுள்ளார்கள் எனவும் யாழ். மாவட்டத்திலேயே சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதாக நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள புள்ளி விபரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் அந்த புள்ளி விபரத்தில், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்டதாக யாழ்.மாவட்டத்தில் 30 சிறுவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 சிறுவர்களும், மன்னார் மாவட்டத்தில் 9 சிறுவர்களும், வவுனியா மர்வட்டத்தில் 17 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 24 சிறுவர்களுமாக மொத்தமாக 87 சிறுவர்கள் வட மாகாணத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு முயற்சி மேற்கொண்டதில் யாழ்.மாவட்டத்தில் 7 சிறுவர்களும், முல்லைத் தீவு மாவட்டத்தில் 6 சிறுவர்களும், மன்னார் மாவட்டத்தில் 6 சிறுவர்களும், வவுனியா மாவட்டத்தில் 5 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 8 சிறுவர்களுமாக மொத்தம் 32 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று உடல் ரீதியான முறைகேட்டுக்கு உட்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்டதாக யாழ்.மாவட்டத்தில் 11 சிறுவர்களும், முல்லைத் தீவு மாவட்டத்தில் 4 சிறுவர்களும் மன்னார் மாவட்டத்தில் 14 சிறுவர்களும், வவுனியா மாவட்டத்தில் 8 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 11 சிறுவர்களுமாக மொத்தம் 48 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

உள ரீதியான துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்டதாக யாழ். மாவட்டத்தில் ஒருவரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 சிறுவர்களும், மன்னார் மாவட்டத்தில் 11 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 5 சிறுவர்களுமாக மொத்தம் 24 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நடப்பாண்டில் தற்கொலைக்கு முயற்சி செய்ததாக யாழ்.மாவட்டத்தில் 3 சிறுவர்களும், மன்னார் மாவட்டத்தில் 2 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 5 சிறுவர்களுமாக மொத்தம் 10 சிறுவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

உறவினர்களால் புறக்கணிக்கப்பட்ட சிறுவர்கள் என யாழ். மாவட்டத்தில் 23 சிறுவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 சிறுவர்களும், மன்னார் மாவட்டத்தில் 6 சிறுவர்களும், வவுனியா மாவட்டத்தில் 9 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 4 சிறுவர்களுமாக மொத்தம் 53 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையிலிருந்து இடைவிலகிய சிறுவர்கள், யாழ்.மாவட்டத்தில் 23 சிறுவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 9 சிறுவர்களும், மன்னார் மாவட்டத்தில் ஒருவரும் வவுனியா மாவட்டத்தில் 9 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 17 சிறுவர்களுமாக மொத்தம் 48 சிறுவர்கள் இடை விலகியுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நடப்பாண்டில் நீதிமன்ற வழக்குகள், யாழ். மாவட்டத்தில் 832 வழக்குகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 43 வழக்குகளும், மன்னார் மாவட்டத்தில் 386 வழக்குகளும், வவுனியா மாவட்டத்தில் 478 வழக்குகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 131 வழக்குகளுமாக மொத்தம் 1870 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அந்தப் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)


## ஆடுகள் வழங்கல்



(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 7 வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து வடமாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸ் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து நல்லின ஆடுகள் பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார். (இ-60)

## வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

மந்துவில்வடக்கு ஜே/347 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட குட்மன் வீதி கடந்த 10 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாக காணப்படுவதால் இவ் வீதியால் பயணம் செய்யும் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குட்படுவதாக பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

தற்போது மழைக்காலம் ஆரம்பமாகியுள்ளது. இதனால் வீதியில் மழைநீர் தேங்கி நிற்கிறது. பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் வீதியால் பயணம் செய்ய முடியாதிருப்பதாகவும் இது விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட போது வீதியை உடனடியாக புனரமைத்து தருவதாக வாக்குறுதியளித்தனர். இருப்பினும் இதுவரை வீதி புனரமைப்புத் தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கையெடுக்கவில்லையென பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த வீதி புனரமைப்புத் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் உரிய நடவடிக்கையெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-101)

## தென்னங்கன்றுகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தென்னை பயிர்ச்செய்கை சபையினால் நெடுந்தீவு பிரதேசத்தில் தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வும் விரிவுரைகளும் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில், நெடுந்தீவு பிரதேசத்தின் 6 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பங்குபற்றினர். 1200 பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

நெடுந்தீவு தென்னை வளர்ப்பாளர்களால் ஒரு விண்ணப்பப்படிவமும் கிடைக்கவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது. குழி வெட்டுதல் கடினமாக இருப்பதாகவும் வேலி அமைத்தல் சிரமமாக இருப்பதும் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இத் திட்டங்கள் இப் பிரதேசத்திற்கு முக்கியமானவை எனவும் இது குறித்து அரசாங்க அதிபருடன் கலந்துரையாடுவதாகவும் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். மேலும் வறுமையை குறைப்பதற்கு ஒவ்வொருவரும் தென்னை வளர்த்து பயன் பெறுமாறும் அறிவுரை வழங்கினார். (இ-7)

## இராசி பலன்

01.11.2017
(ஐப்பசி 15, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
துவாதசி பிற்பகல் 3.30 மணிவரை
உத்திரட்டாதி பின்னிரவு 5.44 மணிவரை
சுபநேரம் 4.33-6.03 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை
பிரதோஷ விரதம்

வள்ளுவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| | கிரக நிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரம் | | ராகு |
| கேது | | | |
| | சனி<br>புத | சூரி<br>குரு | செவ்<br>சுக் |

**மேடம்:** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்கள் வருகையுண்டு, அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மிதுனம்:** தொழில் வளர்ச்சி கூடும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, எடுத்த காரியங்கள் கைகூடும்.

**கடகம்:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்ச்சிகளில் கலந்து மகிழ்வீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**சிம்மம்:** வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், உதவி செய்த சிலரே உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடையலாம், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**கன்னி:** குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்:** தலைமைப்பதவிகள் உங்களைத் தேடி வரலாம், சுப தகவல்கள் வந்து சேரலாம் காரிய அனுகூலமுண்டு, தொழில் வளர்ச்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி கூடும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், இளைய சகோதர வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம்.

**கும்பம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், கோரிக்கைகள் நிறைவேறும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மீனம்:** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, மாலை நேரப் பயணம் மகிழ்ச்சிதரும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

# மாணவியை வெளியேற்றியமை தொடர்பில் அதிபரிடம் 7மணித்தியாலங்கள் விசாரணை

(கொழும்பு)

கெக்கிராவையிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவி ஒருவரை கர்ப்பம் எனக் கூறி பாடசாலையை விட்டு வெளியேற்றியமை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

குறித்த விசாரணை நேற்று முன்தினம் 7 மணி நேரம் இடம்பெற்றுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு கெக்கிராவையிலுள்ள பாடசாலை ஒன்றில் தரம் 10 இல் கல்வி பயின்ற மாணவி ஒருவர் வாந்தி எடுத்தமையை கண்ணுற்ற பாடசாலை அதிபர் அவர் கர்ப்பமாக இருப்பதாக சந்தேகித்து பாடசாலையின் ஒழுக்காற்றுக் குழு ஊடாக மாணவியை விசாரித்து பாடசாலையிலிருந்து வெளியேற்றியிருந்தார்.

பின்பு மாணவிக்கு அவரின் பெற்றோர் மருத்துவ பரிசோதனையினை மேற்கொண்டபொழுது மாணவி எவ்வித தாக்கத்துக்கும் உள்ளாகவில்லை என்பதும் காலைச் சாப்பாட்டைத் தவிர்த்ததனாலேயே வாந்தி எடுத்துள்ளமையும் தெரியவந்திருந்தது.

அத்தோடு இந்தச்சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணையம் மற்றும் கல்வி அதிகாரிகளும் விசாரணைகளை மேற்கொண்டு வந்திருந்த நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தன. (இ-7)

# தமிழர்கள் வேண்டும் என்று ஆயுதம் ஏந்தவில்லை!

## வியாழேந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு




(கொழும்பு)

தமிழர்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு போராட்டங்களை நடத்தியிருந்தனர். அறவழிப் போராட்டத்தில் ஆரம்பித்து பின்னர் ஆயுதப் போராட்டத்திற்குச் சென்றதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜூலைக்குப் பின்னர் தமிழர்கள் வேண்டுமென்று ஆயுதம் ஏந்தவில்லை என்பதை மக்கள் விடுதலை முன்னணியினர் சுட்டிக்காட்டியிருந்ததையும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

புதிய அரசியல் அமைப்பின் இடைக்கால அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "ஒரு சமூகம் இன்னொரு சமூகம் மீது தனக்கு நிகராக மதிக்காமை, அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்காமை போன்ற காரணங்களினாலேயே தமிழர்கள் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இந்த நிலை மாற வேண்டும். அடுத்த தலைமுறைக்கு இதனை நாங்கள் கொண்டு செல்லக்கூடாது. அண்மையில் கேகாலையில் மண்சரிவு ஏற்பட்டிருந்தது.

இதன்போது அங்கு சென்று இரண்டு நாட்கள் தங்கியிருந்து மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தோம். இதன்போது பாடசாலை பலவற்றுக்கும் சென்றிருந்தோம்.

இவ்வாறான நிலையில் சிங்களப் பாடசாலை ஒன்றுக்குச் சென்று நான் என்னை அறிமுகப்படுத்திய போது அங்கிருந்த மாணவர்கள் என்னை வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்த்தார்கள்.

இந்நிலையில் எங்களது நிலைப்பாட்டை அந்த மாணவர்களுக்கு எடுத்துக் கூறியிருந்தேன். அதன் பின்னர் அவர்கள் எங்களை மிகவும் அன்பாக உபசரித்தார்கள்.

இவ்வாறான ஒரு நிலையே நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். அடுத்த தலைமுறையினருக்கு இனவாதத்தினையும் மதவாதத்தினையும் நாங்கள் கொண்டு செல்ல முடியாது.

இதேவேளை, நாட்டில் சிறுபான்மையின மக்களை பெரும்பான்மையின மக்கள் எந்தளவு மதிக்கின்றார்கள் என்பதைக்கொண்டே அவர்களின் மிகப்பெரிய கௌரவம் தங்கியிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் மட்டுமே இவ்வாறு நடக்கிறது

## பந்துல விசனம்



(கொழும்பு)

ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு நாடாளுமன்றத்திற்குள் செல்ல விடாமல் வீதியை மூடி வைத்திருப்பது இந்த நாட்டில் மட்டுமே நடைபெறுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றுக்கு நான் செல்ல முற்பட்டபோது என்னை உள்ளே செல்ல விடாமல் நாடாளுமன்ற நுழைவாயில் வீதி மூடப்பட்டு இருந்தது.

உலகிலேயே நாடாளுமன்ற உறுப்பினருக்கு நாடாளுமன்றத்திற்குள் செல்ல முடியாதவாறு தடை ஏற்படுத்தும் செயல் இந்த நாட்டில் மட்டுமே நடைபெறுகின்றது என பந்துல குற்றம் சுமத்தினார்.

மேலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நீண்ட காலமாக எதிர்க் கட்சியாக மட்டுமே இருந்தார்.

இதனால் ஒரு ஆளும் கட்சியாக இருந்து நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ரணிலுக்கு தெரியவில்லை எனவும் பந்துல குணவர்த்தன விமர்சித்தார். (இ-7)

# இடம்பெயர்ந்தவர்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற வேண்டும்

## நோர்வே வலியுறுத்தல்

(கொழும்பு)

யுத்தத்தால் இடம்பெயர்ந்தவர்கள் சொந்த இடங்களில் குடியேற்றப்பட வேண்டுமென நோர்வே அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் தங்களது சொந்த இடங்களில் குடியேறுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென இலங்கைக்கான நோர்வே தூதுவர் தோர்ப ஜோர்ன் காஸ்ட்டாஸ் டெர் தெரிவித்துள்ளார்.

மக்கள் தங்களது வாழ்க்கையை மீள ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறுவதற்கு உதவிகளை தொடர்ந்தும் வழங்க நோர்வே அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ-7)

# கொழும்பு பல்கலையின் கலைப்பீடம் திங்கட்கிழமை திறக்கப்பட வாய்ப்பு

(கொழும்பு)

தற்போது தற்காலிகமாக மூடப்பட்டுள்ள கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தை எதிர்வரும் திங்கட்கிழமை மீளத் திறக்க வாய்ப்புள்ளதாக தெரியவந்துள்ளது.

அண்மையில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து, கலைப்பீடத்தை தற்காலிகமாக மூட பல்கலைக்கழக நிர்வாகிகள் தீர்மானித்தனர்.

இந்த நிலையில், சம்பந்தப்பட்ட மாணவர்கள் சமரசம் செய்துகொள்ள இணங்குவதாக தெரியப்படுத்தியுள்ளனர்.

இதற்கமைய, இந்த விடயம் குறித்து ஆராய்ந்து வருவதாகவும், பெரும்பாலும் எதிர்வரும் திங்கட்கிழமை கலைப்பீடத்தை மீளத் திறக்க வாய்ப்புள்ளதாகவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் முரண்பாட்டுக்கு காரணமான மாணவர்கள் தொடர்பில் தற்போது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது. (இ-7)

# தமிழ்-முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்த சதி!

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் சகோதர நல்லுறவில் மீண்டும் விரிசலை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்கின்ற இனவாத சக்திகள் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறு ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மட்டக்களப்பு, ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சம்மேளனத்தின் புதிய தலைவர் அஷ்ஷேக் மௌலவி எம்.எல்.அப்துல் வாஜித் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தமிழ்-முஸ்லிம் சகோதர நல்லுறவைக் கட்டியெழுப்புவதில் சம்மேளனம் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுகின்றது. குறிப்பாக ஏறாவூர் பிரதேசத்தில் தமிழ் சகோதரர்கள் எவ்வித தயக்கமுமின்றி தொழில் நடவடிக்கையில் ஈடுபட முடியுமென உத்தரவாதப்படுத்துகிறோம். வாழைச்சேனையில் பேருந்து நிலையம் அமைக்கும்போது இடம்பெற்ற துர்ப்பாக்கிய சம்பவத்தினையடுத்து கிரான், கொக்குவில் மற்றும் செங்கலடி ஆகிய இடங்களிலுள்ள பொதுச்சந்தைகளில் இன முரண்பாட்டை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு முயற்சிகளை மேற்கொண்டுவரும் சந்தர்ப்பவாத சக்திகளை தோற்கடிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L சாரதி<br>தொ.இ: B/7183 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 33<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் :A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6104 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 44 செவ் 7 இல்<br>உயரம்: 171cm<br>தகைமை/தொழில் HND A/ MBA.,கணக்காளர்<br>தொ.இ: B/7184 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 21<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில் பொறியியல் விரிவுரையாளர்.<br>தொ.இ: G/6106 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: B.Com/ France<br>தொ.இ: B/7185 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 07<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Bsc/ தனியார் தொழில்<br>தொ.இ: G/6108 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை செவ்2இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில் A/L விற்பனை முகாமையாளர்<br>தொ.இ: B/7186 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 1/2<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/6110 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவனயீர்ப்பு

(குருமன்காடு)

தாயகப் பிரதேசத்தில் கையளிக்கப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடியறியும் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் நேற்று இடம்பெற்றது.



வவுனியா ஏ-9 வீதியில் கடந்த 250 நாட்களாக இடம்பெற்று வரும் தமது போராட்டத்தை அரசாங்கமோ. தமிழ் தலைமைகளோ கருத்தில் கொள்ளாத நிலை காணப்படுகின்றது. எனவே சர்வதேசமும் புலம்பெயர் சமூகமும் இதில் தலையிட்டு தமது பிள்ளைகளை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி இவ்வூர்வலத்தை நடத்தியிருந்தனர்.

வவுனியா கந்தசுவாமி கோவிலில் இருந்து ஆரம்பமாகி மணிக்கூட்டு கோபுர சந்தியை வந்தடைந்து கண்டி வீதி ஊடாகப் போராட்டம் இடம்பெற்ற இடத்தை வந்தடைந்திருந்தனர்.

அமெரிக்க. ஐரோப்பிய ஒன்றியத்தின் வருகையை எதிர்பார்த்து தர்மார் தவம் என்ற தொனிப்பொருளில் பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலத்தில் ஈடுபட்டிருந்தனர். (2-250)

## கடும் மழையையடுத்து

# பழைமை வாய்ந்த மரம் வேருடன் சரிந்து வீழ்ந்தது



(மன்னார்)

மன்னாரில் பெய்த கடும் மழையின் காரணமாக நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் பாரிய மரம் ஒன்று சரிந்து விழுந்துள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. நானாட்டான். உயிலங்குளம் பிரதான வீதியிலுள்ள வங்கி ஒன்றிற்கு முன்பாக காணப்பட்ட பழைமை வாய்ந்த மரம் ஒன்று வேருடன் சரிந்து வீதி க்குக் குறுக்காக விழுந்து ள்ளது.

சம்பவத்தின் போது, வீதியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் பகுத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளது.

இந்த நிலையில் உயி லங்குளம் பிரதான வீதியின் போக்குவரத்தை பாதிக்கும் வகையில் விழுந்து கிடப்பதாக இந்தப் பகுதி மக்கள் நானாட்டான் பிரதேச சபையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

இதன்போது விரைந்து செயற்பட்ட நானாட்டான் பிரதேச சபை செயலாளர் மற்றும் பணியாளர்கள் மரத்தை வீதியில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். பாதையின் போக்கு வரத்து செயற்பாடு உடனடியாக சீர் செய் யப்பட்டது. (2-281)

# தளபாடங்கள் வழங்கிவைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு -வட்டு வாய்க்கால் மாற்றுத் திறனாளிகளின் அமைப்பான கன்னிகா அமைப்பிற்கு வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனி னால் பணிமனை தள பாடங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியொதுக்கீடு (2017) மூலம் ரவிகரனினால் வழங்கப்பட்டது.இந் நிகழ்வானது கடந்த 29 ஆம் திகதி வட்டுவாகலில்உள்ள கன்னிகா அமைப்பினுடைய பணியிடத்தில் நடை பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் நடராசா - தசரதன், கரைதுறைப்பற்று முதியோர் சங்கத் தலைவர் சிவகுரு - கணேசமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்ட இந் நிகழ்வில், கன்னிகா அமைப்பின் தலைவர் சிங்காரம்-சூசைமுத்து மற்றும் உப தலைவர் செல்லையா - யோகேந்திரராசா ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# இளைஞர் மது ஒழிப்பு சமூக நற்பணி வேலைத்திட்டம் மாந்தையில் முன்னெடுப்பு

(பனிக்கன்குளம்)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமானது நாடளாவிய ரீதியில் NO DRUGS நாம் YOUTH எனும் தொனிப்பொருளில் போதைப்பொருள் விழிப்புணர்வு செயலமர்வு இடம்பெற்று அதனூடாக கிராமங்கள் தோறும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகிறது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக்துக் குட்பட்ட இளைஞர், யுவதிகளை தெளிவூட்டும் வேலைத்திட்டமொன்று நேற்று முன்தினம் மாந்தை கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மாந்தை கிழக்கு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அ.ஜெயாளன் தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச செயளாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி சறோஜா குகநேசதாசன், விரிவுரையாளர்கள் மற்றும் இளைஞர், யுவதிகளென பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-281)

# கேரள கஞ்சாவுடன் குடும்பஸ்தர் கைது

(குருமன்காடு)

வவுனியா பேருந்து நிலையத்தில் கேரள கஞ்சாவுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பேருந்து நிலையத்தில் வவுனியா போதைப் பொருள் தடுப்பு பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே குறித்த நபர் நேற்று கைது செய்யப் பட்டார்.

கிளிநொச்சி பகுதியில் இருந்து அநுராதபுரம். தம்புதேகம பகுதிக்குச் செல்லவிருந்த நிலையில் வவுனியா பேருந்து நிலையத்தில் நின்ற குடும்பஸ்தரின் நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த பொலிஸார் பிரஸ்தாப நபரின் கைப் பையை சோதனை செய்த போது அதில் ஒரு கிலோ கேரள கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.



இதனையடுத்து, கஞ்சா மீட்கப்பட்டதுடன். குறித்த நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். அநுராதபுரம். தம்புதேகம பகுதியைச் சேர்ந்த (வயது-38) என்ற நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். (2-250)

# ஆற்று மணல் கடத்திய டிப்பர்கள், உழவு இயந்திரங்கள் மாட்டின

(மல்லாவி)

கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப் படுத்தும் படைப்பிரிவின் பொலிஸாரின் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையின் போது சட்ட விரோதமான முறையில் ஆற்று மணலை கடத்திச் சென்ற 2 டிப்பர் வாகனங்களையும் ஒரு உழவு இயந்திரத்தையும் கைப்பற்றியுள்ளதுடன். சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப் பட்ட கசிப்பு ஒரு போத்தலை தனது உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் உட்பட மொத்தம் 4 சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இச்சம்பவம் அண்மையில் நடைபெற் றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கிளிநொச்சி - முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய கிளிநொச்சி. மாங்குளம். தருமபுரம் ஆகிய பொலிஸ் நிலையப் பிரிவுகளில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி - முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப்பிரிவின் பொலிஸார் கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பன்னாங்கண்டி கிராமத்தில் சட்ட விரோதமான முறையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த டிப்பர் வாகனத்தை கைப் பற்றியுள்ளதுடன் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

இதே போன்று, குஞ்சுப் பரந்தன் பகுதியில் இருந்து அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரத்தைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கொக்காவில் ரூபவாகினி ஒலி/ஒளி பரப்புக் கோபுரம் அமைந்துள்ள பகுதிக்கு அண்மையாக சட்டவிரோதமான முறையில் ஆற்று மணலை ஏற்றிப்பயணித்த டிப்பர் வாகனத்தை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியும் கைது செய்யப் பட்டுள்ளார்.

இந் நிலையில். தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் உள்ள தருமபுரம் பொதுச் சந்தைக்கு அண்மையாக சந்தேகத்திற்கிடமான வகையில் காணப்பட்ட நபர் ஒருவரை தடுத்து நிறுத்தி சோதனையிட்டபோது.

அவரது உடைமையில் வைத்திருந்த ஒரு போத்தல் கசிப்பை கைப்பற்றியுள்ளனர். இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் சந்தேக நபர்களையும் கிளிநொச்சி. மாங்குளம், தருமபுரம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைக்கப் பட்டுள்ளதாக கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக் கப் பட் டு ள் ளது. (2-15)




# தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம்



(முல்லைத்தீவு)

மு/ விசுவமடு மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரப் பிரிவில் கல்வி பயிலும் மாணவன் அபினதாஸ் டெரன்ஸ் ''நிமசக் நெமவும்-2017'' எனும் தேசிய மட்டப் புத்தாக்கக் கண்காட்சியில் இலத்திரனியல் பாதுகாப்புத் தலைக் கவசம் உருவாக்கி தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

விஞ்ஞான மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சினால் இலங்கைப் புத்தாக்க ஆணைக்குழுவினால் கௌரவிப்பு நிகழ்வு கடந்த மாதம் 26 ஆம் திகதி கொழும்பிலுள்ள BMICH மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது வெள்ளிப் பதக்கம், சான்றிதழ் என்பன வழங்கி வைக்கப்பட்டன. (2)

# வீதியின் அவலநிலை பாரீர்!



(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி. ஐயன்கன்குளம் ஆகிய பகுதிகளுக்கான பிரதான வீதி புனரமைக்கப்படாத நிலையில் பாரிய குண்டும் குழியுமாகக் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் பாரிய குழிகளில் நீர் தேங்கிக்காணப் படுவதுடன், வீதியால் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. ஓரளவு போக்குவரத்துச் செய்யக்கூடியதாகக் காணப்பட்ட இவ்வீதியூடாக இப்பகுதிகளில் இருக்கின்ற பெரும் வளங்களான மணல், கிரவல் மற்றும் காட்டுமரங் களை கனரக வாகனங்களில் இவ்வீதியூடாகக் கொண்டு செல்வதனால் வீதிகள் மிக மோசமாக சேதமடைகின்றன.

இந்த பிரதான வீதியை புனரமைப்பதற்கும் இங்கிருந்து வளங்களை அபகரித்துச் செல் வதைத் தடுப்பதற்கும் இதுவரை எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

## மேய்ச்சல் தரவைக்கு

# காணிகள் அடையாளப்படுத்துமிடத்து

# வேறு திணைக்களத்திற்கு சொந்தமானதாகவுள்ளது

### கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார உதவிப்பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை) கிளிநொச்சி மாவட்டத்தில் 35 ஆயிரம் வரையான கால்நடைகள் உள்ளபோதும், அவற்றுக்கான மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பயிர்ச்செய்கை காலங்களில் பண்ணையாளர்க்ள் கால்நடைகளைப் பராமரிப்பதில் சிரமங்களை எதிர்கொள்வதாக மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.கௌரிதிலகன் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள எண்பது வீதமான மக்களின் வாழ்வாதாரத் தொழிலாக விவசாயமும் கால்நடைவளர்ப்பும் காணப்படுகின்றது.

இவ்வாறு கால்நடை வளர்க்கும் பண்ணையாளர்களில் பெருமளவானோர் திறந்த வெளிமுறையிலான கால்நடை வளர்ப்பையே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது காலப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் கால்நடைகளை பராமரிப்பதில் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதாவது, கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை வயல்நிலங்களில் பராமரித்து வருகின்றனர்.

பயிர்ச்செய்கை காலங்களில் வயல் நிலங்கள் பயிரிடப்படுகின்ற நிலையில் கால்நடைகளை அவற்றில் பராமரிக்க முடியாது, பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குளங்களின் நீரேந்துப் பிரதேசங்களிலும் தாழ்நில கண்டல் பகுதிகளிலும் கால் நடைகளை பராமரித்து வருகின்றனர்.

குளங்களிலும் மற்றும் கண்டல் பகுதிகளிலும் நீர் மட்டம் உயரும் போது அங்கிருந்து கால்நடைகளை வெளியேற்றி வேறு இடங்களில் அதாவது வீதியோரங்களிலும் குடியிருப்புக்களிலும் வைத்துப் பராமரிக்கின்ற நிலை காணப்படுகின்றது.

இதனால் பயிர்ச்செய்கை காலங்களில் பண்ணையாளர்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக மாவட்ட கால்நடை உற்பத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் கௌரிதிலகனிடம் வினவியபோது, மாவட்டத்தில் 35 ஆயிரம் வரையான கால்நடைகள் இருக்கின்றன.

இவற்றுக்கான மேய்ச்சல் தரவையென்பது பாரிய பிரச்சினையாக உள்ளது. மேய்ச்சல் தரவைகளுக்கான காணிகளை அடையாளப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டு அதன் மூலம் மேய்ச்சல்தரவைகளை அமைக்க வேண்டும்.

மாவட்டத்தில் மேய்ச்சல் தரவைக்கான காணிகளை அடையாளப்படுத்துகின்ற போது அந்தக் காணிகள் வேறு திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு மேய்ச்சல் தரவைகள் அமைப்பதில் தாமதங்கள் காணப்படுவதாகவும் இதனால் பண்ணையாளர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார். (2-315)

# வவுனியா பூவரசங்குளத்தில் 3 யானைத் தந்தங்கள் மீட்பு




(குருமன்காடு)

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் மூன்று யானை தந்தங்கள் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளதுடன், அதனை வைத்திருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, பூவரசங்குளம், குருக்களூர் புதுக்குளம் பகுதியில் வைத்து விசேட அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட அதிரடிப்படையினர் 3 அடி தொடக்கம் 5 அடி வரையிலான 25 கிலோ கிராம் எடையுடைய மூன்று யானை தந்தங்களை மீட்டுள்ளதுடன், அதனை வைத்திருந்த மூவரையும் கைது செய்துள்ளனர்.




கைப்பற்றப்பட்ட யானை தந்தங்களும், கைது செய்யப்பட்ட நபர்களும் இரவு வவுனியா பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# ஆற்றின் கரையோரத்தை பாதுகாக்க கண்டல் தாவரங்கள் நடுகை



(கண்டாவளை)

முல்லைத்தீவு கொக்கிளாய் ஆற்றின் கரையோரப் பகுதிகளைப் பாதுகாக்கும் வகையில் கண்டல் தாவரங்கள் நடுகைசெய்யப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறுகடல்பகுதியான கொக்கிளாய் ஆற்றுப்பகுதியின் கரையோரப்பகுதியை பாதுகாக்கும் வகையில் சதுப்பு நிலத்தில் வளரக்கூடிய கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன.

கொக்கிளாய் புளியமுனை மற்றும் அதனையண்டிய பகுதிகளில் பெண்கள் அமைப்பின் ஊடாக மேற்படி கரையோரப்பகுதிகளை பாதுகாக்கும் வகையில் கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்படடு வருகின்றன. (2-315)

# கடைகளை அகற்றக்கோரி இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்

### பதற்றநிலை நிலவியதால் பொலிஸார் குவிப்பு



வவுனியா பள்ளிவாசல் முன்பாக சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள கடைகள் அகற்றப்பட வேண்டும் என தெரிவித்து இளைஞர்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பள்ளிவாசல் முன்பாக நேற்று திரண்ட இளைஞர்கள் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடங்களையும் அடையாளம் காட்டினர். குறித்த கட்டடங்கள் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடாக தகவல் திரட்டப்பட்டுள்ளதாகவும் அவை சட்டவிரோதமானதாக அமைக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் குறித்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

சட்டவிரோத கடைகள் மக்கள் போக்குவரத்து செய்வதற்கு இடைஞ்சலாக இருப்பதாகவும், இதனால் மக்கள் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் முன்பாக இஸ்லாமிய இளைஞர்களும் ஒன்று கூடியமையால் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பகுதியில் பதற்ற நிலைமை காணப்பட்டதால் காலை முதல் மதியம் வரை பாதுகாப்புக்காக பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா நகர சபையின் செயலாளர் ஆர்.தயாபரன் கருத்து தெரிவிக்கையில்,

குறித்த கடைகளில் 14 கடைகளுக்கு, முன்னைய நகரசபையின் நகரபிதா ஜி.ரி. லிங்கநாதனால் 1995 ஆண்டு அனுமதி வழங்கியுள்ளார்.

அத்துடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான நிலத்திலேயே இக்கடைகள் அமைந்துள்ளன. இப்பிரச்சினைக்கு நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம் வவுனியா நகரசபைக்கு இல்லை என்பதுடன், இப்பிரச்சினை தொடர்பாக ஏற்கனவே நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (2-250)

# சர்வதேச முதியோர் தினம் மன்னாரில் அனுஷ்டிப்பு




(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச முதியோர்தின நிகழ்வு சமூக சேவைகள் திணைக்களத்தின் வட மாகாண பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் தலைமையில் மன்னாரில் இடம் பெற்றது.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் மன்னார் பிரதான பாலத்தடியில் விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமானது.

குறித்த ஊர்வலத்தில் முதியோர்கள், பாடசாலை மாணவர்கள், திணைக்கள அதிகாரிகள் எனப்பலர் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கலந்து கொண்டிருந்தனர்.

ஊர்வலம் பிரதான வீதியூடாக நகர்ந்து மன்னார் நகர சபை மண்டபத்தை சென்றடைந்தது.

அங்கு முதியோர்களின் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, சர்வதேச முதியோர் தினத்தையொட்டி பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு, முதியோர்கள் மத்தியில் இடம் பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும், வெற்றிக்கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# விளைநிலம் களம்-03 உரையாடல் நவம்பர் 5இல்

கலை இலக்கியத்துறையில் காத்திரமான பங்களிப்பை ஆற்றி வருகின்ற தமிழ் மாமன்றம் "ஆற்றலுக்கும் ஆளுமைக்குமான களம்" என்ற தொனிப் பொருளில் ஆரம்பித்த "விளைநிலம்" என்ற தொடர் நிகழ்வின் மூன்றாவது களம் எதிர்வரும் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆற்றலுக்கும் ஆளுமைக்குமான களமாக மட்டும் இந் நிகழ்வு அமையாமல் சமூக அக்கறையுடன் எமது பிரச்சினைகளை விவாதத்திற்கு உட்படுத்தும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

விளை நிலம் களம் - 03 இல் "மரபுசார் - கிராமிய வழிபாட்டுமுறைகளின் தொடர்ச்சியும் சமகாலத்திய பொருத்தப்பாடும் - பொது வெளி உரையாடல்-" எனும் தொனிப் பொருளில் அமைய அவசியமான தேவையின் பொருட்டு இந்த உரையாடல் அமையவிருக்கிறது.

இந்நிகழ்வில் கலை இலக்கிய துறைசார் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழ் மாமன்றம் கேட்டுள்ளது. (2)

## பொருளாதார நெருக்கடிக்கு உடனடித் தீர்வு மிக அவசியம்

### அமைச்சர் சுசில் வலியுறுத்தல்

(கொழும்பு)

நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வொன்றைபெற்றுக் கொள்ள வேண்டும் என அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு முன் பொருளாதாரத் துறையில் ஒரு நிலையான அபிவிருத்தியைக் கொண்டு வர வேண்டும் என அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



வல்லை முனியப்பர் கோவிலுக்கு அருகிலுள்ள வெளிப்பகுதியில் "பசுமை நிழலின் கீழ் வல்லை" மரம் நடுகை நிகழ்ச்சித் திட்டம் நேற்றுக்காலை ஆரம்பமானது. கரவெட்டி பிரதேச செயலர் சிறிமோகனன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். பயன் தரும் மரக்கன்றுகள், நிழல் தரும் மரங்கள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை கொட்டும் மழையிலும் நாட்டி வைத்தனர். இந் நிகழ்ச்சியில் இராணுவத்தினரும் பங்கேற்றனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# இனவாதிகளும் அற்ப சிந்தனையாளர்களும் நாட்டிற்கு தீயிட நாம் இடமளிக்கக்கூடாது

## சு.க.அமைச்சர் டிலான் வலியுறுத்தல்

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பு ஒன்றுக்காக புதிய பிரவேசத்திற்கான பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்று நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்பின் நடவடிக்கை குழுவின் அறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தின் போது பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், இனவாதிகள் மத வாதிகள் போன்ற அற்ப சிந்தனையாளர்கள் நாட்டை தீயிடுவதற்கு இடமளிக்கக்கூடாதுஎன்று சுட்டிக்காட்டினார். இது தொடர் பில் உள்ள பிரச்சினைகளை கலந்துரையாட வேண்டும். இதனை வலுப்படுத்த வேண்டும். சமஷ்டியை தோற்கடித்த




வர்கள் அதனை கோருகின்றனர். இந்த விடயத்தில் ஒற்றையாட்சி உண்டு.

பௌத்த மதத்திற்கான உரிமை உண்டு. நடுநிலையாக சிந்தித்து நாம் செயற்பட வேண்டும். தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். கட்சியின் முனைப்பாட்டுக்காக முன்நிற்போம். நேர்மையாக செயற்படுவோம். நாட்டின் இனவாதிகள் மத வாதிகள் போன்ற அற்ப சிந்தனை கொண்டவர்களின் தீக்கு நாட்டை இரையாக்க இடம் அளிக்க முடியாது.

இது இறுதி பஸ் வண்டியாகும். முக்கிய அரசியல் கட்சி தேசிய பிரச்சனையில் காற்பந்தாட்டம் விளையாடியது. இந்த பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும். இதில் அரசியல் நன்மை பெற்றுக் கொள்ள முயற்சிப்பது எதிர்கால சந்ததியினருக்கு மேற்கொள்ளும் தீங்காகும்.

இந்த கௌரவத்தை பிரதமருக்கு பெற்று கொடுப்போம். ஒன்றிணைப்புக்கான நடவடிக்கைகளை இந்த குழு மேற்கொண்டுள்ளது. இதனால் இலங்கை வரலாற்றில் பாரிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. பிரச்சினையை தீர்ப் பதற்கு பாராளுமன்றில் இவ் வாறான சந்தர்ப்பம் கிட்டாது. இது இறுதி சந்தர்ப்பமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## புதிய பேருந்துச் சேவை



(கரணவாய்)

பருத்தித் துறையிலிருந்து குஞ்சர்கடை, கரணவாய் சோழங்கன், மண்டான் கல்லுவம் மற்றும் வட்டுக்கோட்டை ஊடாக மானிப்பாய் வரையிலான இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 753 இல.பேருந்து சேவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த பேருந்து சேவையானது பருத்தித்துறையிலிருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மானிப்பாய் பிரதான பேருந்து தரிப்பிடம் வரையும் மானிப்பாயிலிருந்து பிற்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகி பருத்தித் துறை வரை செல்லும். (இ-10-6C)

## வெள்ளத்தை வெளியேற்றுமாறு கோரிக்கை





(யாழ்ப்பாணம்)

யாழ்.இராமநாதன் வீதியின் புனரமைப்புப் பணிகள் சீராக மேற்கொள்ளப்படாமையால், தற்போது அப்பகுதியில் உள்ள வீடுகளுக்குள் மழை வெள்ளம் உட்புகுந்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வெள்ளத்தை அகற்றுவதற்கான நடவடிக்கையை உரிய தரப்பினர் விரைவில் மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.இராமநாதன் வீதி கடந்த பல காலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்தது. இந்த வருடம் பல இலட்சம் ரூபாய் நிதி இவ் வீதிக்கு ஒதுக்கப்பட்டு நவீன முறையில் புனரமைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. அதன் படி புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றன. அருகில் யாழ். பல்கலைக்கழகம் அமைந்துள்ளபடியால், இவ் வீதி நவீன முறையில் புனரமைக்கப்பட்டது.

வீதியின் மருங்கில் நடைபாதைகள் அமைக்கப்பட்டன. ஆனால் இந்தப் புனரமைப்புப் பணிகள் உரிய திட்டமிடல் இன்றி சீராக மேற்கொள்ளப்படாததால் தாழ்வான பகுதிகளில் தற்போது வெள்ளம் தேங்கி நிற்கும் நிலை காணப்படுகின்றது.

தற்போது தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால், வெள்ளம் அதிகரிப் பதற்கான சூழ்நிலை காணப்படுகிறது. வீடுகளுக்குள் உட்புகும் வெள்ளத்தை அகற்றுவதற்கான நடவடிக்கையை உரியவர்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)

## அரசியலமைப்பு தொடர்பான விவாதத்தில் நழுவிய விமல்

(கொழும்பு)

அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஆரம்பமான விவாதத்திலிருந்து விமல் வீரவன்ச தரப்பினர் நழுவிக் கொண்டுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் விமல் வீரவன்ச தரப்பில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் நிலையில் நேற்று முன்தினம் அவர்களில் ஒருவரேனும் நாடாளுமன்றத்துக்கு சமுகமளிக்கவில்லை.

அண்மையில் அரசியல்



அமைப்பு தொடர்பாக விமல் முன்வைத்திருந்த குற்றச்சாட்டுகளுக்கான பதில்களை நாடாளுமன்ற விவாதத்தின் போது பெற்றுக் கொடுக்க முடியும் என்று அரசாங்கத் தரப்பு அமைச்சர்கள் அறிவித்திருந்தனர்.

எனினும், குறித்த சந்தேகங்களுக்கான பதில்களைப் பெற விமல் வீரவன்ச தரப்பினர் அக்கறை இன்றி இருப்பதுடன் அவ்வாறு சந்தேகங்கள் தெளிவுடுத்தப்பட்டால் எதிர்வரும் நாட்களில் அரசியலமைப்பு அறிக்கை தொடர்பில் விமர்சிக்க முடியாது போகும் என்று விமல் தரப்பினர் அச்சம் கொண்டுள்ளனர்.

அதன் காரணமாகவே அவர்கள் நாடாளுமன்ற விவாதத்தை விட்டும் நழுவிக் கொண்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)



அராலி மத்தி குமுக்கன் ஒழுங்கை ஐம்பது வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

## ரஞ்சன் நீக்கம்; கித்சிறி நியமனம்





(கொழும்பு)

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஐக்கிய தேசிய கட்சியின் திவுலபிட்டிய தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த வெற்றிடத்திற்கு முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கித்சிறி மஞ்சநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# ஜி.எஸ்.பியால் இலட்சக்கணக்கான ஐரோப்பிய வர்த்தக சந்தைகளில் மீண்டும் வர்த்தக நடவடிக்கை

## நிதியமைச்சர் மங்கள மகிழ்ச்சி



(கொழும்பு)

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையின் மூலம் இலட்சக்கணக்கான ஐரோப்பிய வர்த்தகச் சந்தைகளில் மீண்டும் தமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சமகால அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக சர்வதேச வர்த்தகத்தில் முன்னெடுத்தல் என்ற தலைப்பில் கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான வர்த்தக செயலமர்வில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் உதவியுடனும் உலகவங்கியின் உதவியுடனும் இலங்கை வர்த்தகப் பேரவை மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

காலத்திற்கேற்ற வகையில் இலங்கையில் வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உதவும் வகையில் மிகவும் பொருத்தமான நேரத்தில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வரலாற்றில் வர்த்தக கேந்திர நிலையமாக விளங்கிய இலங்கை, கடந்த காலங்களில் அந்த முக்கியத்துவத்தை இழந்திருந்தது.

ஆனால் சமகால ஐக்கிய அரசாங்கம் மீண்டும் அந்த நிலையை அடைவதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் இந்தப் பாங்களிப்புடன் சம்பிரதாய வர்த்தக நிதி மற்றும் முக்கிய வர்த்தக நடவடிக்கைகள் வளர்ச்சியடையும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

இலங்கை நிதித்துறை இதில் பெரும் கவனம் செலுத்தும் என்றும் தாம் நம்புவதாக அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

# இடைக்கால அறிக்கையை ஏற்க முடியாது

## தினேஷ் எதிர்ப்பு



(கொழும்பு)

அரசமைப்புச் சபையின் வழிப்படுத்தும் குழு சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையை, நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இதனை நாம் முற்றாக எதிர்க்கிறோம் என்று ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர், புதிய அரசமைப்பில் பௌத்த சமயத்துக்கு உரிய இடம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், அவ்வாறான இடம் வழங்கப்படவில்லை. அத்துடன் மகா சங்கத்தினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினராலும் முழுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கும் இந் நேரத்தில் புதிய அரசமைப்பு தேவையா?

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் முன்வைத்த யோசனைகள் இந்த அறிக்கையில் உள்வாங்கப்படவில்லை. எமது யோசனைகள் உள்வாங்கப்படாவிட்டால், அரசமைப்புக்குழுவில் இருந்து நாங்கள் விலகுவதாக ஏற்கனவே பிரதமரிடம் தெரிவித்திருந்தோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் மாகாணங்களை இணைக்கக் கோருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்துள்ளனர். தேர்தல் காலத்தில் வழங்கிய உறுதிமொழிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

“அரசமைப்பு விவகாரத்தில் பிரதமரே குழுவின் தலைவராக இருந்து தன்னிச்சையாக செயற்பட்டுள்ளதுடன், அவரின் தேவைக்கு ஏற்றவாறு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் எழுந்தமானமாக தீர்மானங்களை மேற்கொண்டு வருகிறார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஆகியனவற்றின் யோசனைகள் ஒன்றாக இருக்கின்றன.

வடக்கு, கிழக்கை இணைக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கோருகிறார்கள். அவ்வாறு இணைத்தால் என்னாவது? அவர்களுக்குத் தனியான அதிகாரத்தை வழங்குவதற்கு வழிசமைக்கப்படுகிறதா? வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தமிழ் மக்கள் சிங்களவர்களுடன் சமாதானமாக வாழவில்லையா? அவர்கள் சுதந்திரமாக தொழில்புரியவில்லையா? மாகாணங்களை இணைப்பது ஜனநாயக விரோத, பயங்கரமான செயற்பாடு என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இது வெளிநாடுகளின் தேவைகளுக்காக அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உருவாக்கப்படுகின்ற அரசமைப் பாகும். தெளிவாகச் சொல்வதானால், புலம்பெயர் தமிழர்களுக்கும் சில வெளிநாடுகளுக்கும் தேவையான வகையில் அவர்களுடைய யோசனைகளே இந்த அறிக்கையில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் என்ற வகையில் இந்த அறிக்கையை நாம் முற்றாக நிராகரிக்கிறோம் என்பதை இந்த நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் இந்த உயர்ந்த சபைக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிவனொளிபாதமலை பிரிவதற்கு எதிரான ஆர்ப்பாட்டத்திற்கு தடை



(கொழும்பு)

சிவனொளிபாதமலைபுனித பூமியை மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிக்குள் உள்வாங்குவதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு தடையுத்தரவு மனு பெறப்பட்டுள்ளதாக கினிகத்தேன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத்தடை உத்தரவு ஹற்றன் மாவட்ட நீதிமன்றத்திலேயே வழங்கப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



மலையக மக்கள் முற்போக்கு முன்னணியின் தலைவரும் முன்னாள் அம்பகமுவ பிரதேச சபையின் உறுப்பினருமாகிய எலப்பிரிய நந்தராஜ் தலைமையில், கினிகத்தேனை நகரில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திற்கே குறித்த தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

அம்பகமுவ பிரதேச சபையை மூன்றாக பிரித்து மஸ்கெலியா, நோர்வூட் மற்றும் அம்பகமுவ என பிரிக்க நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், சிங்கள மக்கள் செறிந்து வாழும் அம்பகமுவ பிரதேச சபை பகுதியிலிருந்து தமிழ் மக்கள் அதிகம் வாழும் மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிக்கு பிரிந்து செல்வதனால் சிவனொளிபாதமலை பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்தே இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் இதுவரை காலமும் மூவின மக்களும் ஒற்றுமையுடன் இருந்து வருகின்ற நிலையில் சிவனொளிபாதமலை பிரிந்து செல்வது சமூகத்தினிடையே முரண்பாட்டை தோற்றுவிக்கும் என எலப்பிரிய நந்தராஜ் தெரிவித்தார்.

கினிகத்தேனை நகரில் நடந்த ஆர்ப்பாட்ட இடத்திற்கு வருகைதந்த கினிகத்தேன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சரத் சமரவீர, நீதிமன்றத்தினால் பெறப்பட்ட தடையுத்தரவை ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கையளித்தார்.

குறித்த மனுவின்படி, பிரதான வீதியை மறித்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்த முடியாது என்பதுடன் நகரின் வர்த்தக நடவடிக்கைக்கும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்த முடியாது எனவும், 14 நாட்களுக்கு இந்தத் தடையுத்தரவு செல்லுபடியாகும் எனவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தரவிற்கமைய பொது மக்களுக்கு இடையூறு இன்றி குறித்த ஆர்ப்பாட்டம், இரண்டு மணித்தியாலங்கள் வரை இடம் பெற்றதுடன் சிவனொளி பாதமலை பிரிவடைவதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரவுள்ளதாகவும் எலப்பிரிய நந்தராஜ் தெரிவித்தார். (இ-7)

# டில்லியில் உணவுப் பொருள் கண்காட்சியில் யாழ். இறக்குமதியாளர்களும் பங்குபற்றலாம்

(யாழ்ப்பாணம்)

2018 ஜனவரி 18ஆம் திகதிமுதல் 13ஆம் திகதி வரை இந்தியாவின் தலைநகரமான டில்லியில் நடைபெறவுள்ள மாபெரும் உணவுப் பொருள் கண்காட்சியில் பால் உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், கோழி மற்றும் இறைச்சி வகைகள், பழங்கள், மரக்கறி வகைகள் மற்றும் வாசனைத்திரவியங்கள், எண்ணெய் வகைகள், சேதன மற்றும் மருத்துவமூலிகைகள், திராட்சைப் பழகுடிவகைகள் போன்றவை காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும் நேரடியாக சந்திப்பதற்கும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்தவும் வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளதாக யாழ். இந்தியத் துணைத் தூதர் யாழ்.வணிகர் கழகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இக்கண்காட்சியில் பங்குபற்ற தகுதியுடையவராக இக் கண்காட்சியில் பங்கு பற்றினால் இலவசவிமானப்போக்குவரத்துப் பயணச்சீட்டும் தங்குமிட வசதிகளும் வழங்கப்படும் வாய்ப்பு உண்டு.

எனவே இவ் வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுமாறு மேற்படி உணவுப்பொருட்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் முகவர்களை யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொள்கின்றது. மேலதிக விபரங்களுக்கு 021 222 8593 என்ற இலக்க தொலைபேசி மூலம் யாழ். வணிகர் கழகத்துடன் தொடர்புகொள்ள முடியும் எனவும் வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (இ-7)

## தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அனைத்து தொண்டராசிரியர்களுக்குமான அவசர கலந்துரையாடல் நாளை 2 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக அமைந்துள்ள YMCA மண்டபத்தில் இடம்பெறும். இக்கலந்துரையாடலுக்கு வருகைதரும் அனைவரும் சேவைக்கால உறுதிப்படுத்தல்கடிதத்தையும் கொண்டு வருமாறு தொண்டராசிரியர் சங்கத் தலைவர் செ.சதீஸ்குமார் அறிவித்துள்ளார். (இ-7)

# பலசரக்கு வர்த்தகர்களுக்கு யாழ். வணிகர் கழகம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கமைவாக அரிசி உட்பட அத்தியாவசிய உப உணவுப் பொருட்களை சதொச மூலம் மலிவு விலைகளில் தனியார் வர்த்தகர்களும் பெற்று சாதாரண மக்களுக்கு நியாயமான விலைகளில் இவற்றை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை ஒன்றை சதொசவினர் யாழ். வணிகர் கழகத்திற்கு முன்வைத்துள்ளனர்.

இதுதொடர்பாக 06.11.2017 திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழக பணிமனையில் கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடலில் சதொச நிறுவன அதிகாரி யும் யாழ். வணிகர் கழக நிர் வாக சபை உறுப்பினர்களும்பங்குபற்றுவர்.

எனவே யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பலசரக்கு வர்த்தகர்களையும் இக்கலந் துரையாடலுக்கு வருகை தந்து தங்களது கருத்துக்களை முன்வைக்குமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொள்கின்றது. (இ-7)

# பாரதம்

## இரட்டை இலை விவகாரம் இன்றுவரை ஒத்திவைப்பு

(சென்னை)

இரட்டை இலைச்சின்னம் தொடர்பாக தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் நடத்திய விசாரணையில், இரு அணிகளும் காரசாரவாதங்களை முன் வைத்தன. அடுத்த விசாரணை இன்று நடக்கிறது. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அ.தி.மு.க 2 அணிகளாக பிளவுபட்டு சசிகலா தலைமையில் ஒரு அணியும், ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் மற்றொரு அணியாகவும் செயற்பட்டு வந்தன.

இந்நிலையில் இரண்டு அணிகளும்இரட்டை இலைக்கு உரிமை கோரியதால் இந்திய தேர்தல் ஆணையம் இரட்டை இலை மற்றும் கட்சியின் பெயரை முடக்கி வைத்துள்ளது: இந்நிலையில் ஓ.பி.எஸ். இ.பி.எஸ் அணியினர் இணைந்தனர்.

இதனால் எளிதாக தங்களுக்கு இரட்டை இலை சின்னம் கிடைக்கும் என்று எதிர்பார்த்த நேரத்தில் டிடிவி தினகரன் தடைபோட்டார். தங்களுக்கே கட்சிச் சின்னமான இரட்டை இலையை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

இந்நிலையில் இந்திய தேர்தல் ஆணையம் கடந்த 4 கட்டங்களாக இபிஎஸ்-ஓ.பிஎஸ்அணிமற்றும்டி.டி.வி. தினகரன் அணியிடம்யாருக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்குவது என்று விசாரணை நடத்தி வருகிறது. முன்னதாக இரண்டு தரப்பும் ஆவணங்களைத் தாக்கல் செய்தனர்.

இந்நிலையில், இரட்டை இலை சின்னம் யாருக்கென ஒக்டோபர் 31ஆம் திகதிக்குள் ஒதுக்கீடு வேண்டும் என்று மதுரை உயர் நீதிமன்றமும், நவம்பர் 10ஆம் திகதிக்குள் சின்னம் குறித்தான இறுதி முடிவை தேர்தல் ஆணையம் அறிவிக்க வேண்டும் எனவும் உச்ச நீதிமன்றமும் கடந்த சில வாரங்களுக்கு முன்பு உத்தரவிட்டன.

நான்காம்கட்ட விசாரணை ஒக்டோபர் 30 ஆம் திகதியான நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு ஆரம்பமானது. இதில் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் அக்சல் குமார் ஜோதி மற்றும் தேர்தல் அதிகாரிகள் தலைமையில் பங்கேற்றனர்.

ஆளுங்கட்சி தரப்பில் எடப்பாடிபழனிசாமி.ஓ.பன்னீர் செல்வம் அணி தரப்பில் அமைச்சர்கள் சி.வி.சண்முகம். ஜெயக்குமார், மக்களவை துணை சபாநாயகர் தம்பிதுரை, முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, நத்தம் விஸ்வநாதன், எம்.பி. மைத்ரேயன்மற்றும்மனோஜ் பாண்டியன் ஆகியோர்கலந்து கொண்டனர்.

மேலும் இவர்களது தரப்பில் சட்டத்தரணிகள், முகுல் ரோத்தகி, சி.எஸ்.வைத்திய நாதன், கே.வி.விஸ்வநாதன் மற்றும் குரு கிருஷ்ணக் குமார் ஆகியோரும், இதே போல் தினகரன் தரப்பில் சட்டத்தரணிகள் அபிஷேக் சிங்வி, விஜய் ஹனசாரியா, அஸ்வினிகுமார் ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

இதில் முதலாவதாக தினகரன் தரப்பு சட்டத்தரணி வாதத்தில், இரட்டை இலை சின்னம் விவகாரத்தில் ஆரம்பத்தில் இருந்து விசாரணை நடத்த வேண்டும். மேலும் பிரதான மனுவில் சசிகலா மற்றும் டி.டி.வி.தினகரன் தான் முக்கிய மனுதாரர்கள் என்று குறிப்பிட்டுள்ளது.

இதைத்தவிர தண்டனைக்குரிய ஒருவர் அரசியலில் இருந்து தடுக்கப்பட வேண்டும் என எந்த ஒரு சட்டத்திலும் கூறவில்லை. மேலும் அ.தி.மு.க. கட்சியின் விதிப்படி தான் பொதுச்செயலாளராக சசிகலா தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.

இரட்டை இலை சின்னத்தை முடக்கினாலும் ஆர்.கே.நகர் தேர்தலின் போது இரு அணிகளையும் தேர்தல் ஆணையம் அங்கீகரித்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் ஓ.பி.எஸ்.தரப்பின் சார்பாக கடந்த செப்டெம்பர் மாதம் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள்அனைத்தும் தவறான ஒன்றாகும். அதனால் அதுகுறித்து ஆணைய அதிகாரிகள் மீண்டும் ஒரு முறை தீர விசாரணை நடத்த வேண்டும்.

மேலும் எதிரணியினர் எங்களது தரப்பு உறுப்பினர் 6 பேரிடம் மிரட்டி ஆவணங்களை வாங்கியுள்ளனர். அவர்களையும் ஆணையத்திற்கு நேரடியாக அழைத்து வந்துள்ளோம். சந்தேகம் இருந்தால் அவர்களிடம் நேரில் குறுக்கு விசாரணை நடத்திக்கொள்ளலாம்.

மேலும்எங்களது அணிக்குதான் அதிகப்படியான உறுப்பினர்கள் பலம் அதிகம் உள்ளது. அதனால் சின்னத்தை எங்களுக்கே ஒதுக்க வேண்டும் என வாதிட்டார்.

அப்போது குறுக்கிட்ட மத்திய அரசின் முன்னாள் தலைமை சட்டத்தரணி முகுல் ரோத்தகி, சட்டத்தின் முன்னிலையில் தண்டனை பெற்றவர்களுக்குஎன்னென்ன விதிமுறைகள் உள்ளன என்பது தேர்தல் ஆணையத்திற்கு நன்றாகவே தெரியும். மேலும் ஆணையமே அப்படிப்பட்ட சட்டவிதிமுறைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இரட்டை இலை சின்னம் விவகாரத்தை பொறுத்தமட்டில் எங்களது தரப்பில் அனைத்து ஆவணங்களையும் ஆணையத்தில் ஏற்கனவே சமர்ப்பித்து விட்டோம்.

அதனால் அதிகப்படியான உறுப்பினர் பலம் கொண்ட எங்களது அணிக்கே சின்னம் கிடைக்கும் என காரசாரமான வாதம் தேர்தல் ஆணையர் முன்னிலையில் நடந்தது.

இதையடுத்து இருதரப்பு வாதங்களையும் கேட்ட தலைமை தேர்தல் ஆணையர் அக்சல் குமார் ஜோதி இரட்டை இலைச்சின்னம் தொடர்பான அடுத்தகட்ட விசாரணையை இன்று புதன்கிழமைக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார். (இ-7)

## இந்திய மாணவர்கள் மீது இத்தாலியில் தாக்குதல்!

### பயப்படவேண்டாமென சுஷ்மா டுவிட்



(டில்லி)

இத்தாலி தலைநகர் மிலனில் இந்திய மாணவர்கள் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டதாக அங்குள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்ததை அடுத்து நிலைமை கட்டுக்குள் உள்ளதாகவும், யாரும் பயப்பட வேண்டாம் எனவும் வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடான இத்தாலியில் நூற்றுக்கணக்கான இந்திய மாணவர்கள் உயர்கல்வி பயின்று வருகின்றனர்.

மிலன் பல்கலைக்கழகத்தில் படிக்கும் இந்திய மாணவர்கள் அங்கு தாக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

இதை உறுதி செய்துள்ள இந்தியத் தூதரகம் இந்திய மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் உண்மைதான் என்றும் இது தொடர்பாக இத்தாலி அரசிடம் முறையாக புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக விரிவான அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், யாரும் பயப்பட வேண்டாம், கவலை வேண்டாம் என மத்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (இ-7)

## பிரம்மபுத்திரா நதி நீரைத் திருட சுரங்கம் அமைக்கும் திட்டமா?

### சீனா முற்றாக நிராகரிப்பு

(பீஜிங்)

பிரம்மபுத்திரா ஆற்றிலிருந்து சீனாவின் ஜிங்ஜியாங் மாகாணத்துக்கு தண்ணீரை திருப்பிவிட ஆயிரம் கிலோ மீற்றர் நீளத்தில் புதிய சுரங்கப் பாதை அமைப்பதாக வந்த தகவல்களை சீனா மறுத்துள்ளது.

பிரம்மபுத்திரா ஆற்றிலிருந்து சீனாவின் வரட்சி பகுதியான ஜிங்ஜியாங் பகுதியில் உள்ள டக்லமக்கான் பாலைவனப்பகுதியில்வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் புதிய சுரங்கப்பாதை அமைக்கப்படவுள்ளதாக சமீபத்தில் தகவல்கள் வெளியாகின. திபெத் பகுதி வழியாக ஆயிரம் கிலோமீற்றர் நீளத்துக்கு சுரங்கம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை சீனப் பொறியாளர்கள் ஆய்வு செய்து வருவதாக கூறப்பட்டது.

தெற்கு திபெத்திலுள்ள புராங் பகுதியில் உருவாகி, இந்தியாவின் வடகிழக்கில் உள்ள அருணாச்சலப் பிரதேசம் மாநிலத்தின் வழியாக கடலில் கலப்பதற்கு முன்னர் பங்களாதேஷத்தில் உள்ள மக்களுக்கு இந்த ஆற்றின் தண்ணீர் பயன்படுகிறது. சீன அரசின் இந்த புதிய திட்டம் செயற்படுத்தப்பட்டால் பிரம்மபுத்திரா ஆற்றை நம்பி உள்ள நாடுகள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக கருதப்பட்டது.

மேலும், சுரங்கப்பாதை அமைக்கப்படும் போது மலைகள் வெட்டப்பட வேண்டும் என்பதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும். நீண்டகால உழைப்பு தேவைப்படும் இந்தத் திட்டத்திற்கு அதிகப்படியான நிதி தேவைப்படும் நிலை உள்ளது. சராசரியாக 150 பில்லியன் டொலர் செலவாகும் என நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர் என ஹொங்கொங்கில்இருந்து வெளியாகும் பிரபல பத்திரிகை சமீபத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.

அந்த செய்தியை சீன அரசு மறுத்துள்ளது. இது தொடர்பாக, சீன வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ஹுவா சுன்யிங் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "மேற்படி பத்திரிகை செய்தியில் உள்ள தகவல்கள் உண்மையல்ல. அந்த செய்தி முற்றிலும் தவறானது. எல்லைகளுக்கிடையிலான நதிப்பங்கீட்டு விவகாரங்களில் ஒத்துழைப்பு அளிப்பதற்கு சீனா எப்போதுமே முக்கியத்துவம் அளித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## ஜப்பானில் திகி…

### 2 தலைகள், 9 சட…

(டோக்கியோ)

ஜப்பானின் ஸாமா நகரிலுள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் 2 மனித தலைகள் உள்ளிட்ட 9 சடலங்களைப் பொலிஸார் கைப்பற்றியதுடன் வீட்டின் உரிமையாளரை கைது செய்துள்ளனர்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவின் தெற்கு பகுதியான ஸாமாவில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பின் வாசலில் நேற்று முன்தினம் குளிரூட்டப்பட்ட பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

அதைத்திறந்து பார்த்தவர்களுக்கு அதிர்ச்சியளிக்கும் விதமாக பெட்டிக்குள் 2 மனிதத் தலைகள் இருந்துள்ளன.

## போகோஹராம் தீ… தாக்குதலில் 16 பே…



(மைடுகுரி)

நைஜீரியா மற்றும் கேமரூனில் போகோஹராம் தீவிரவாதிகள் நடத்திய வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் 16 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கேமரூன் மற்றும் நைஜீரிய நாட்டின் எல்லைப்பகுதியில் போகோஹராம் தீவிரவாதிகள் அரசுக்கு எதிராக தீவிரவாதத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இவர்களை ஒடுக்குவதற்கான போரில் பன்னாட்டு இராணுவ வீரர்கள் அடங்கிய படை ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், வடக்கு கேமரூனின் கொலொஃபடா பகுதியில் உள்ள கவுடேரி கிராமத்தில் சில போகோஹராம் தீவிரவாதிகளை கடந்த சில நாட்களுக்கு முன்னர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அப்பகுதிக்குள் நுழைந்த தீவிரவாதிகள் 11 பேரை

## ஒற்றுமைக்கான ஓட்ட… ஆரம்பித்து வைத்தார் …



(டில்லி)

சர்தார் வல்லபாய் பட்டேலின் 142வது பிறந்த தினம் நேற்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.

இதனை முன்னிட்டு அவரை நினைவு கூரும் வகையில் பிரதமர் நரேந்திர மோடி ஒற்றுமைக்கான ஓட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். டில்லியிலுள்ள மேஜர் தியான் சந்த் தேசிய மைதானத்தில் ஆரம்பித்த இந்த ஓட்டத்தில் சர்தார் சிங், தீபா கர்மாகர், சுரேஷ் ரெய்னா மற்றும் கர்ணம் மல் லேஸ்வரி உள்ளிட்ட விளையாட்டு வீரர், வீராங்கனைகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஓட்டத்தினை ஆரம்பித்து வைத்து பேசிய பிரதமர் மோடி, சர்தார் பட்டேலின் பிறந்த தினத்தில் அவரை நாம் வணங்குவோம். இந்தியாவிற்கு அவர் ஆற்றிய சேவை மற்றும் பங்கு என்றும் மறக்க முடியாதது.

# வெளிநாடு

## ...திகில் சம்பவம்

### ...9 சடலங்கள் மீட்பு

இது தொடர்பாக தகவல் அறிந்து விரைந்து வந்த பொலிஸார் வீட்டின் கதவை உடைத்து சோதனையிட்ட போது நெஞ்சை உறைய வைக்கும் விதமாக அங்கு 7 சடலங்கள் இருந்துள்ளன.

சடலங்களைக் கைப்பற்றி பரிசோதனைக்கு அனுப்பியுள்ள பொலிஸார் அந்த வீட்டில் தங்கியிருந்த ஷிராய்ஷி என்பவரை கைது செய்தனர்.

எனினும், வீட்டில் இருந்த சடலங்கள் தொடர்பான தெளிவான காரணங்களை பொலிஸார் கூறவில்லை. மேலும், இச்சம்பவம் தொடர்பாக தலைமறைவான 23 வயது பெண் ஒருவரையும் பொலிஸார் தேடி வருகின்றனர். (இ-7)

## ...ாம் தீவிரவாதிகளின் ...16 பேர் உயிரிழப்பு



கொடூரமாக கொலை செய்துள்ளனர். இது முன்னர் நடத்தப்பட்ட கைது சம்பவத்திற்கு பழிவாங்குவதற்காக நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

நைஜீரியா நாட்டின் போர்னோ மாநில தலைநகரான மைடுகுரி நகரின் மத்திய பகுதியிலுள்ள அஜ்ரியாவா பகுதியில் பிரபலமான மசூதி ஒன்றுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் (உள்ளூர் நேரப்படி) இந்த மசூதிக்குள் ஒரு தீவிரவாதி உடல் முழுவதும் வெடிகுண்டை கட்டிக்கொண்டு புகுந்துள்ளான்.

அவன் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை திடீரென்று வெடிக்கச் செய்ததில் ஐந்து பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். படுகாயமடைந்த மூன்று பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் அருகாமையிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-7)

## ...ட்டத்தை ...ர் மோடி

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் மற்றும் நாடு விடுதலை அடைந்த தொடக்க வருடங்களில் நாட்டிற்கு அவர் ஆற்றிய பங்கு அனைவரையும் பெருமை கொள்ள செய்கிறது என்றும் கூறியுள்ளார்.

1.5 கிலோ மீற்றர் தொலைவு கொண்ட இந்த ஓட்டம் இந்தியா கேட் அருகே நிறைவடைந்தது. இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (இ-7)

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு குறித்து விசாரணையில் குற்றச்சாட்டு பதிவு



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியை சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் பின்னணியில் ரஷ்யாவின் தலையீடு குறித்த விசாரணையில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்த ஜனாதிபதித்தேர்தலில் குடியரசுக் கட்சியை சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் பின்னணியில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததாக புகார் எழுந்தது. டிரம்பை எதிர்த்து போட்டியிட்ட ஹிலாரி கிளின்டனை தோற்கடிப்பதற்காக சர்ச்சைக்குரிய மின்னஞ்சல்கள் வெளியிட்டும், சமூக ஊடகங்களில் ஊடுருவியும் ரஷ்யா சதி செய்ததாக கூறப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிப்பதற்காக அமெரிக்க புலனாய்வுத் துறை (எப்.பி.ஐ.) முன்னாள் இயக்குநர் ராபர்ட் முல்லர் தலைமையிலான சிறப்பு விசாரணைக் குழு ஒன்றை ட்ரம்ப் அரசு நியமித்தது. கடந்த மே மாதம் முதல் நடந்து வந்த இந்த சிறப்புக்குழுவின் விசாரணை தற்போது முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது.

அதன்படி இந்த விசாரணையில் தற்போது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

'சீல்' வைத்து நீதிபதியிடம் வழங்கப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டு குறித்த விபரங்கள் இந்த வாரத்தில் வெளியாகும் எனத் தெரிகிறது. அதைத் தொடர்ந்து உடனடியாக கைது நடவடிக்கைகளும் தொடங்கும்.

இதற்கிடையே தனது பிரசாரத்துக்கும், ரஷ்யாவுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டு போலியானது எனவும், இது ஒரு சூனிய வேட்டை என்றும் கூறியுள்ள ட்ரம்ப், ஹிலாரியையும், ஜனநாயக கட்சியினரையும் சாடியுள்ளார்.

தனக்கு பின்னால் குடியரசுக் கட்சியினர் அனைவரும் ஒன்றுபட்டு இருப்பதாக தெரிவித்துள்ள அவர், இந்த விவகாரத்தில் 'ஏதாவது செய்யுங்கள்' என்றும் தனது டுவிட்டர் தளத்தில் கூறியுள்ளார். (இ-7)

## ஐ.நா. பாதுகாப்பு சபையில் அசாருக்கு தடைவிதிக்க சீனா மீண்டும் முட்டுக்கட்டை



(பீஜிங்)

ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பின் தலைவன் மசூத் அசாரை சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்கும் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் மீண்டும் தடுக்க சீனா முடிவு செய்துள்ளது.

பஞ்சாப் மாநிலம் பதன்கோட்டில் உள்ள இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் நடத்திய பயங்கர தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவன் மசூத் அசார். இவன், பாகிஸ்தானில் செயற்படும், 'ஜெய்ஷ் இ முகமது' என்ற தீவிரவாத அமைப்பின் தலைவன்.

இவனை சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்க இந்தியா கடும் முயற்சி எடுத்து வருகிறது. இதற்காக ஐ.நா. பாதுகாப்பு சபை மூலம் கடந்தாண்டு மார்ச்சில் தீர்மானம் கொண்டு வந்தது. இதற்கு அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் உட்பட பாதுகாப்புச் சபையில் உறுப்பினர்களாக உள்ள 15 நாடுகளில் 14 நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

ஆனால், சீனா மட்டும் தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி, இந்தியாவின் தீர்மானத்தை நிறைவேற்ற விடாமல் தடுத்தது. இந்தாண்டு பெப்ரவரியிலும், அதன் பிறகு கடந்த ஓகஸ்டிலும் மீண்டும் இந்த தீர்மானம் பரிசீலிக்கப்பட்ட போதும் சீனா முட்டுக்கட்டை போட்டது.

கடந்த ஓகஸ்டில் தீர்மானம் வந்தபோது, சீனா 3 மாதங்கள் அவகாசம் கேட்டது. அந்த கெடு விரைவில் முடிகிறது. இந்நிலையில், அடுத்த முறையும் இந்த தீர்மானத்தை தடுக்க சீனா முடிவு செய்துள்ளது என சீன வெளியுறவுத் துறை தகவல் தொடர்பாளர் ஹுவ சங்யிங் நேற்று முன்தினம் இதை மறைமுகமாக தெரிவித்தார். (இ-7)

## ஹாலோவீன் தினத்தை குழந்தைகளுடன் கொண்டாடி மகிழ்ந்த அமெரிக்க ஜனாதிபதி



(வோஷிங்டன்)

ஹாலோவீன் தினத்தை முன்னிட்டு வெள்ளை மாளிகையில், விதவிதமான வேடமிட்ட குழந்தைகள் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்தனர். ட்ரம்பின் மனைவி மெலானியாவும் இதில் கலந்து கொண்டார்.

மெலனியாவுடன் வந்த ட்ரம்ப், கொலம்பியா, மேரிலாந்து மற்றும் வர்ஜீனியா மாவட்டங்களில் உள்ள 20க்கும் அதிகமான பாடசாலைகளிலிருந்து வந்த குழந்தைகளை சந்தித்தார். (இ-7)

# காஸா மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்

## 7 பேர் உயிரிழப்பு

(ஜெருசலேம்)

பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கிடையிலான காஸா முனையில்சுரங்கப்பாதையை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேல் நாட்டுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் உள்ள காஸா எல்லையில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஹமாஸ் போராளிகள் அவ்வப்போது இஸ்ரேல் பகுதிக்குள் ஏவுகணைகளை வீசி அதிரடியாக தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

மேலும், இஸ்ரேல் இராணுவத்தினரைக் கொல்லும் முயற்சியில் ஈடுபட்டதாக



ஹமாஸ் போராளிகள் இஸ்ரேல் எல்லையில் கொல்லப்பட்டதாக அடிக்கடி செய்திகள் வெளியாகி வருகின்றன.

இந்நிலையில், காஸா பகுதியிலுள்ள ஒரு சுரங்கப்பாதை அழிப்பதற்காக இஸ்ரேல் இராணுவத்தினர் குண்டுவீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். மேலும் சுமார் ஒன்பது பேர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. அந்தச் சுரங்கப்பாதை இஸ்ரேல் எல்லைக்குள் இருப்பதாக அந்நாட்டு இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. இந்தத் தாக்குதலில் மத்திய காஸா பகுதியை சேர்ந்த ஒரு முக்கிய ஹமாஸ் அமைப்புத் தலைவர் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

பாலஸ்தீனில் அமைதியை சீர்குலைப்பதற்காக இஸ்ரேல் இதுபோன்ற தாக்குதல்களை நடத்தி வருவதாக ஹமாஸ் போராளிகள் தெரிவித்துள்ளனர்.

சுரங்கப்பாதையில் பணியில் ஈடுபட்டிருந்த ஐந்து பொது மக்கள் இந்தத் தாக்குதலில் மரணமடைந்தனர்.

அவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் இரண்டு ஹமாஸ் வீரர்கள் உயிரிழந்தனர் எனவும் அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹமாஸ் இயக்கம், இஸ்ரேலை பாலஸ்தீனர்களுக்கு பெற்றுத்தந்து, இஸ்ரேல், மேற்குக்கரை, காஸா பகுதிகளை ஒருங்கிணைத்து இஸ்லாமிய குடியரசாக மாற்றும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெரிக்க கப்பல்களால் நாட்டுக்கு ஆபத்து!

## திஸ்ஸ விதாரண எச்சரிக்கை

(கொழும்பு)

அமெரிக்க போர்க்கப்பல்கள் நாட்டுக்கு வருவது பாரிய அச்சுறுத்தலாகும். அரசாங்கம் இது தொடர்பாக அமெரிக்காவுடன் செய்து கொண்டுள்ள இரகசிய ஒப்பந்தத்தை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.



சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார். (இ-7)

# திடீரென வீட்டுத்தோட்டத்துக்கு வந்த பாரிய முதலை - அச்சத்தில் மக்கள்

(கொழும்பு)

பொலநறுவை - கவுடுல்ல. பின்பார பிரதேசத்தில் உள்ள வீட்டுத் தோட்டம் ஒன்றுக்குள் திடீரென வந்த பாரிய முதலையினால் மக்கள் அச்சத்தில் உறைந்தனர்.

எனினும் குறித்த முதலையை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பிடித்துள்ளனர்.



சுமார் எட்டு அடி நீளமான இந்த முதலை கவுடுலு ஓயா ஆற்றில் இருந்து வந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிரிந்தலே வனஜீவராசிகள். கால்நடை மருத்துவப் பிரிவின் அதிகாரிகள் மற்றும் மெதிரிகிரிய நகர வனஜீவராசிகள். அலுவலக அதிகாரிகள் இணைந்து இந்த முதலையை பிடித்துள்ளனர்.

பிடிக்கப்பட்ட முதலை கவுடுல்ல தேசிய வனத்தில் விடுவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

# ஐரோப்பிய நாடாளுமன்றக்குழு இவ்வாரம் இலங்கை வருகிறது

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு இவ்வாரம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜீன் லைப்பர்ட் தலைமையிலான குழுவே இலங்கைக்கு வரவுள்ளது. அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட தரப்பினரைச் சந்தித்து இலங்கையின் நல்லிணக்க செயன்முறை மற்றும் ஜிஎஸ்.பி.பிளஸ் வரிச் சலுகைக்கு ஏற்ற சர்வதேச மரபுகள் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? என்பன குறித்து அந்தக் குழுவினர் ஆராயவுள்ளனர்.

அத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்தினால் வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களையும் அவர்கள் பார்வையிடவுள்ளதுடன், உரையாடல்களையும் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# கட்டார் நாட்டின் உயர்மட்ட தூதுக்குழு இலங்கை வருகை

(கொழும்பு)

கட்டார் நாட்டின் பொருளாதாரம் மற்றும் வர்த்தக அமைச்சர் அஷ்ஷெய்ஹ் அஹ்மத் பின் ஜாசிம் அல் தானி மற்றும் கட்டார் எயார் வேய்ஸ்பிரதம நிறைவேற்று அதிகாரி அக்பர் அல் பாகர் உள்ளிட்ட உயர்மட்ட தூதுக் குழுவினர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர்.



நேற்று முன்தினம் மாலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தந்த இவர்களை அமைச்சர்களான றிசாத் பதியுதீன் மற்றும் பைஸர் முஸ்தபா ஆகியோர் வரவேற்றனர். (இ-7)

# இரவு விடுதிக்குச் சென்ற அமெரிக்க கடற்படை அதிகாரி வீதியில் விழுந்து கிடந்த நிலையில் மீட்கப்பட்டார்

(கொழும்பு)

கொழும்பில் இரவு விடுதிக்குச் சென்ற அமெரிக்க கடற்படை அதிகாரி ஒருவர் வீதியில் வீழ்ந்து கிடந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். குறித்த அதிகாரி கொள்ளுப்பிட்டி மயில் போஸ்ட் எவினியில் விழுந்து கிடந்த நிலையில் மீட்கப்பட்டு, கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ள அமெரிக்க கடற்படைக் கப்பலின் அதிகாரி ஒருவரே இவ்வாறு விழுந்து கிடந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இரவு விடுதிக்குச் சென்ற அவர் அதிக மதுபானம் அருந்திய நிலையில் நேற்றுக்காலை வீதியில் விழுந்து கிடந்துள்ளார் என பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது தொடர்பான விசாரணை கொள்ளுப்பிட்டிப் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனினும் இந்த அதிகாரி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? அல்லது அவர் அதிக மதுபானம் அருந்தியுள்ளாரா? என்பது இன்னமும் உறுதி செய்யப் படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### கண்டும் காணாமல் போகிறவர்கள்!

''நேற்று நம்ம மணியை மார்க்கெட்ல பார்த்தேன். பார்த்தும் பார்க்காத மாதிரிப் போறான் அவன்''

இது ஒரு மனைவி தன் கணவரிடம் சொல்லும் புகார்.

''அவன் உன்னைச் சரியாகப் பார்த்திருக்க மாட்டான்'' என்பார் கணவர். இன்னும் எவ்வளவோ சமாதானம் சொல்வார். ஒன்றும் அந்தப் பெண்மணியிடம் எடுபடாது.

நம்மில் பலர் தினமும் இந்த அனுபவத்தைப் பெறுகிறோம். சிலபேர் இப்படி ஒருவர் கண்டு கொள்ளாமல் போனால் அந்தக் கணமே மறந்துவிடுவார்கள். சிலபேர் அப்படியில்லை. இவர்களுக்கு மனமே ஆறாது. அத்தனை வருஷம் அப்படிப் பழகிப் போயிட்டு இப்படி ஒரு மூன்றாம் மனுசனைப் பார்க்கிற மாதிப் பார்த்திட்டு போயிட்டே இருந்துட்டானே! எங்கிட்ட எவ்வளவு வாங்கித் தின்றான்! நான் எப்படியெல்லாம் அவனுக்கு உதவினேன். எல்லாம் காசு பணம் சேர்ந்துவிட்ட திமிரு. கொழுப்பு கண்ணை மறைக்கிறது என்றெல்லாம் விதவிதமாகப் புலம்புவார்கள். மனசே சரியில்லை என்பார்கள். ஆனால் இந்த மோசமான குற்றச்சாட்டுகளெல்லாம் அந்த நபருக்குத் தெரியவே தெரியாது.

ஒருவர் பார்த்தும் பாராமல் போவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஒவ்வொன்றாக உங்கள் முன் வைக்கிறேன்.

உண்மையில் அவர் கவனித்திருக்க மாட்டார். நம் பார்வையில் அவர் உறுதியாக சிக்கினாரே தவிர அவர் பார்வையில் நாம் நிச்சயமாகச் சிக்கியிருப்போம் என்கிற அவசியம் இல்லை. சில சமயம் பார்வை நம்மை நோக்கியிருந்தாலும் நினைப்பு எங்காவது இருந்தாலோ வேறு சிந்தனையில் மூழ்கி இருந்தாலும் நம் முகம் அவர்களது விழித்திரையில் பதியாது. அதை நம்பக் கடினமாக இருக்கும். ஆனால் உண்மை.

அவர் ஏதேனும் அவசர வேலையாகச் சென்று கொண்டிருக்கலாம். அல்லது எவரையும் சந்திக்கும் மன நிலையில் அவர் இல்லாமலிருக்கலாம். நம்மீது ஏதும் மனக்குறை, வருத்தம் இருக்கலாம். தன்னை அந்தக் கோலத்தில் அந்த இடத்தில் பார்ப்பதை அவர் விரும்பாமலிருக்கலாம். நம்மை அவர் மறந்து கூடப் போயிருக்கலாம். முதலில் அவர் கண்டுகொள்ளட்டும். பிறகு நாம் கண்டு கொள்ளலாம் என்று எதிராளி நினைக்கலாம்.

இவ்வளவு காரணங்களையும் மீறியல்லவா அந்தச் சந்திப்பு நிகழ முடியும்!

இத்தகையவர்களை மறுபடி காணும் போது நாமே கூட வலியப் போய்ப் பேசிப் பார்க்கலாம். அல்லது இரண்டு மூன்று வாய்ப்புப் பேசிப் பார்க்கலாம். அல்லது இரண்டு மூன்று வாய்ப்பிற்குப் பிறகு, கூடப் போய்ப் பார்த்து நாடி பிடித்தும் பார்க்கலாம். இந்தப் பெருந்தன்மை முதலில் நமக்கு வர வேண்டும். அப்படிச் செய்யும் போது தான் சேச்சே! எவ்வளவு நல்ல மனிதரை போய் எவ்வளவு தவறாக எடைபோட்டு விட்டோம் என்று உணர நேரிடும்.

**லேனா தமிழ்வாணன்**

# பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருடன் கனேடிய உயர்ஸ்தானிகர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கீனன் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது.

இலங்கை மற்றும் கனடாவுக்கிடையிலான இராஜதந்திர மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புகள் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததை அடுத்து மேலும் வலுப்பெற்றுள்ளதாகவும் இந்நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கனேடிய அரசு தரும் உதவிகளை தாம் மதிப்பதாகவும் குறித்த சந்திப்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கான உதவிகளை கனேடிய அரசு தொடர்ந்தும் வழங்கும் என குறித்த சந்திப்பில் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கீனன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# அரசியல் சுயலாபங்களை அடைவதற்காக பல்வேறு சதித்திட்டங்கள் முன்னெடுப்பு

## கிழக்கின் முன்னாள் முதல்வர் நஷீர் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

**கிழக்கில் வாழும் சிறுபான்மை சமூகங்களிடையே மோதல்களை உருவாக்கி தமது அரசியல் சுயலாபங்களை அடைந்து கொள்வதற்காக பல்வேறு சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் நஷீர் அஹமட் குற்றம் சாட்டியுள்ளார்.**



மட்டக்களப்பு மாவட்டத்தில் இனமுறுகல்களை ஏற்படுத்தும் விதமாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிரான் மற்றும் வாழைச்சேனை பகுதிகளில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களிடையே முறுகல்களை ஏற்படுத்தும் விதமான சில சம்பவங்கள் இடம்பெற்றன.

எனவே இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான யோசனையொன்றை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நான் முன்வைத்தேன்.

பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மாவட்டத்தின் ஒவ்வொரு பகுதிகளிலும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆன்மீகத் தலைவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் பங்குபற்றுதலோடு நல்லிணக்க ரீதியான உரையாடல்களை முன்னெடுத்து இன முறுகல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நான் பிரதிப் பொலிஸ்மா அதிபரை கேட்டுக் கொண்டேன்.

இதனூடாக இந்த நிலைமைகளின் யதார்த்தத்தை மக்களுக்கு உணர்த்தி இவ்வாறான சதிகளுக்கு பின்புலத்தில் உள்ளவர்களை மக்களின் துணையுடன் அடையாளங்காணுவதற்கு உதவியாக அமையும்.

அத்துடன் தற்போது முறுகல்கள் தொடர்ந்தும் வேறு இடங்களில் இடம்பெறா வண்ணம் பாதுகாப்புக்களை அதிகரிக்குமாறும் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

அத்துடன் தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகளிடமும் கதைத்துள்ளேன். நாமனைவரும் ஒன்றிணைந்து நீடித்த சுமுகநிலையை ஏற்படுத்துவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும்.

இந்த நாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற யுத்தத்தில் அதிகம் பாதிக்கப்பட்டது தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களே என்பது யதார்த்தம்.

கிழக்கில் இன்றும் எமது காணிகள் விடுவிக்கப்படாமல் படையினர் வசம் உள்ளன. இன்னும் மீள்குடியேற்றப்படாமல் எமது பல உறவுகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அத்துடன் எமக்கான அரசியல் ரீதியான தீர்வையும் இரு சமூகங்களும் இணைந்தே பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

ஆகவே நமக்கான தீர்வுகள் கிடைத்து விடக் கூடாது, நமக்கான பிரச்சினைகள் என்றும் முற்றுப் பெற்றுவிடக் கூடாது என எண்ணும் சில வஞ்சகர்களே இனங்களிடையே முறுகல்களை ஏற்படுத்தி குளிர்காய நினைக்கின்றனர் என அவர் மேலும் குற்றம் சாட்டினார். (இ-7)

# சைட்டத்தை கலைப்பதற்கு எடுத்துள்ள அரசாங்கத்தின் தீர்மானம் சிறந்தது



(கொழும்பு)

சைட்டம் நிறுவனத்தை கலைப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் மதிக்கத்தக்கது எனவும் இருப்பினும், பெயரை மாத்திரம் மாற்றம் செய்யாமல் அதனை தரத்தில் சிறந்த நிறுவனமாக மாற்றப்பட வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நெவில் பெர்னாந்து மற்றும் அவரது குடும்பத்துக்குள்ள உரிமையை நீக்குவதற்கு எடுத்துள்ள தீர்மானம் மதிக்கப்பட வேண்டும்.

மருத்துவ கல்வி தொடர்பில் குறைந்த பட்ச தகுதிகள் தொடர்பில் சட்ட ரீதியாக்கப்பட வேண்டும் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஹரித அளுத்கே தெரிவித்தார். (இ-7)

# இந்தோனேசியாவின் பாய்மரப்படகொன்று இலங்கை வந்துள்ளது



(கொழும்பு)

இந்தோனேசியக் கடற்படைக்குச் சொந்தமான பாய்மரப் படகொன்று நேற்று முன்தினம் மாலை கொழும்பு துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது. "பிமாசக்தி" என்றழைக்கப்படும் குறித்த பாய்மரப்படகை இலங்கை கடற்படையினர் சம்பிரதாயபூர்வமாக வரவேற்று மரியாதை அளித்துள்ளனர்.

உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கை வந்துள்ள குறித்த கப்பல் மூன்று நாட்கள் வரை இலங்கையில் தரித்து நிற்கவுள்ளது.

அக்காலப் பகுதியில் பாய்மரக்கப்பல் படைப்பிரிவினர் இலங்கைக் கடற்படையினருடன் சிநேகபூர்வ விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் நவம்பர் இரண்டாம் திகதி இந்தோனேசியப் பாய்மரக்கப்பல் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது. (இ-7)

# சாய்ந்தமருதில் நேற்றும் பூரண ஹர்த்தால்!

## போராட்டம் முன்னெடுப்பு பொலிஸார் குவிப்பு இயல்புநிலை பாதிப்பு

(கொழும்பு)

**சாய்ந்தமருதுக்கான தனியான பிரதேச சபையை வென்றெடுக்கும்முகமாக நேற்று இரண்டாவது நாளாகவும் பூரண ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் அங்கு இயல்பு நிலை முற்றாக பாதிப்படைந்துள்ளது. இதேவேளை பள்ளிவாசல் முன்னாலுள்ள அக்கரைப்பற்று, கல்முனை பிரதான வீதியை மறித்து வீதி மறியல் போராட்டமொன்றும் நடத்தப்பட்டுள்ளது.**

தமது சத்தியாக்கிரகத்தை நடத்தியதனால் வீதிப் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்த நிலையில் பெருமளவான பொலிஸாரும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஹர்த்தால் இன்று வரை மக்கள் எழுச்சிப்பொதுக்கூட்டத்துடன் இடம்பெறுமென பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் ஹனிபா மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

மேலும் பூரண ஹர்த்தால் காரணமாக நேற்றும் சாய்ந்தமருது - மாளிகைக் காடு பிரதேசத்திலுள்ள சகல கடைகளும் பூட்டப்பட்டுள்ளன.

அத்துடன் பாடசாலைகளில் மாணவர் வரவின்மையால் பாடசாலை நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடை











இதன்போது கறுப்புப் பட்டியணிந்த பெருந்திரளானோர் வீதியில் அமர்ந்து ந்ததுடன், வங்கிகளும் பூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சித்த மருத்துவத்தில் உடலின் ஆரோக்கியத்தை காக்கவும் நோய்களைத் தவிர்க்கவும் உங்கள் பிரக்ருதி/ யாக்கையின் இலக்கணத்தை எவ்வாறு அறிந்து கொள்வது?




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பிரக்ருதி/யாக்கையின் இலக்கணம் என்றால் மனிதனுடைய உடல், மனக்கூறு என்று பொருள் (mind-body type or personality). கர்ப்பத்திலிருக்கும் போதே ஒருவருடைய உடல், மனிதத் தன்மை இரண்டுமே personality எப்படி என்பது வாத, பித்த, கப அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றது. சிலர் வாதப்பிரக்ருதியாகவும் சிலர் பித்த பிரக்ருதியாகவும் சிலர் கபப்பிரக்ருதியாகவும் இருப்பார்கள். அதுமட்டுமல்ல இன்னும் சிலருக்கு வாத, பித்தம், பித்த கபம், வாத, கபம் என்றும் இணைந்தும் இருக்கலாம்.

இந்த மாதிரியான சேர்க்கை (combination) கர்ப்பத்தின் போதே உருவாகி விடும். ஒரு மனிதனின் வாழ்வியலில் இவ் அடிப்படைத் தன்மை (பிரக்ருதி) மாறவே மாறாது. இந்த பிரக்ருதி ஒவ்வொரு வருக்கும் இயற்கையாகவே அமைந்தது. அது நோயல்ல! உதாரணமாக வாதப் பிரக்ருதி என்றால் மூட்டுவாதம் இயற்கையிலேயே உள்ளது என்று நினைக்கக்கூடாது.

மூன்று தத்துவங்களில் ஒன்றான வாதம் மனித மனத்திலும் உடலிலும் மற்றைய இரண்டையும்விட அதிகமாக நிலைபெற்று அவனை இயக்கி வருகிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். இதுபோ




The Seven Chakras
Nadis or Nerve Currents and Sushumna

லவே மற்ற பிரக்ருதிகளும் மருத்துவப் பரிசோதனையின் போது எந்தவிதமான பிரக்ருதி என்பதைக் கண்டு கொள்ளலாம். இது நோய் வரும்போது கண்டு பிடிக்கப்படுவதல்ல. நோய் வந்தால் அது ''விக்ருதி'' (மாற்றம்) ஆகிவிடும்.

உடலின் ஆரோக்கியத்தைக் காக்கவும் நோய்களைத் தவிர்க்கவும் பிரக்ருதியை பற்றிய அறிவு உதவுகிறது. எந்த தோஷம் மிகுதியோ அது போல பிரக்ருதி அமைகிறது.

வாதப் பிரக்ருதி உடையவர்கள் மெலிந்த உருவம் கொண்டவராயிருப்பர். இவர்கள் பேச்சில் வரட்சியும் தளர்ச்சியும் காணப்படும். கண்கள் சிறியனவாக இருக்கும். ஆழ்ந்த உறக்கம் இவர்களுக்கு கிடையாது. சருமம் வரண்டிருக்கும். கால் வெடிப்பு அதிகமாக இருக்கும். அதிகம் வியர்க்காது. தலைமுடி சுருண்டு வரண்டதாக இருக்கும்.

வாதப்பிரக்ருதிகளின் உணவும் ஆசையும் ஒவ்வொரு நாளும் வேறுபடும். இவர்களின் பேச்சுக்கூட தடுமாற்றத்துடன் கடுமையாக இருக்கும். நடக்கும்போது சத்தம் கேட்கும். இனிப்பு பதார்த்தங்களில் விருப்பம் அதிகமாக இருக்கும். ஐம்புலன்களை கட்டுப்படுத்தும் திறன் குறைவாகவே இருக்கும். மனதில் விருப்பும் வெறுப்புமாக உணர்ச்சிகள் மாறி, மாறித் தோன்றி தளர்ச்சியை உருவாக்கிக் கொண்டிருக்கும்.

இவர்கள் வெப்பமான காலநிலையை விரும்புவர். சீரான வாழ்க்கையை மேற்கொள்ள முடியாததாலும் இவர்களது நிலையற்ற தன்மையினாலும் ரஜோ குணத்தைப் பிரதானமாகக் கொண்டவர்கள்.

வாதப் பிரக்ருதிகளுக்கு குளிர்ச்சியான காற்று, குளிர்ப் பிரதேசம் எதுவும் ஒத்துக் கொள்ளாது. அதிகமான குளிர்ச்சி சேர்ந்து விட்டால் உடலில் வலி, விறைப்பு ஏற்படலாம். பொதுவாக இவர்கள் மலச்சிக்கல் பிரச்சினையுடையவராக இருப்பர். வலியைத் தாங்கும் சக்தியும் குறைவாகவே இருக்கும்.

வாதப் பிரக்ருதி உள்ளவர்கள் இனிப்பு, புளிப்பு, உப்பு சுவையுள்ள ஆகாரம் எடுக்கலாம். அரிசி, கோதுமை, பாசிப்பயறு எடுக்கலாம். மஞ்சள், கொத்தமல்லி, சீரகம், இஞ்சி, காயம், சோம்பு, மிளகு போன்றவற்றை தாராளமாகச் சேர்க்கலாம். நல்லெண்ணெய், நெய், பால், வெண்ணெய் அளவோடு பயன்படுத்த வேண்டும். கரட், தக்காளி, வெண்டை, வெள்ளரி, முள்ளங்கி, பூசணி, வாழைப்பழம், பேரீச்சம்பழம், திராட்சை, எலுமிச்சை, மாதுளை, பப்பாளி, அத்திப்பழம் ஆகியவற்றை தாராளமாகப் பயன்படுத்தலாம்.

வாதப் பிரக்ருதி உடையவர்கள் துவர்ப்பு, கசப்பு, கார உணவுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அதிக உடற்பயிற்சி, அதிகமான பேச்சு, குளிர்பானம், இரவு நெடுநேரம் விழித்திருத்தல் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும்.

ஆனாலும் வாதப் பிரக்ருதி உடையவர்களுக்கு நரம்புத் தளர்ச்சி, மூட்டுவாதம், இருதயக் கோளாறு, மூச்சு முட்டு, மலச்சிக்கல், மனத்தளர்ச்சி, உடல்நடுக்கம், சரும உலர்வு போன்றவை வர வாய்ப்புண்டு. வாதப் பிரக்ருதிகளின் நாடித் துடிப்பும் வேகமாக இருக்கும்.

### என்ன செய்தால் நோய்களைத் தவிர்க்கலாம்?

வாயுவைக் கட்டுப்படுத்தும் பொருட்களில் எண்ணெய் சிறந்தது. இவர்களால் அதிக வீரியமுள்ள மருந்துகளை உட்கொள்ள முடியாது. எண்ணெய் மசாஜ் இவர்களுக்குச் சிறந்தது. ஆசனமும் தியானமும் செய்வது மன அமைதியைக் கொடுக்கும்.

வாதப் பிரக்ருதிகளுக்கு சொல்லப்படும். குணங்கள் அனைத்தும் ஒருவரிடம் அப்படியே இருக்கும் என்று சொல்ல முடியாது. எல் லோரிடமும் மற்ற இரு தோஷங்களும் (பித்த, கப) கலந்தே இருக்கும் என்பதால் உடற்கூறு, மன இயல்பு செய்திறன் அந்தச் சேர்க்கையில் தங்கியிருக்கும்.

Type A personality என்று நவீன மருத்துவத்தில் கூறுகிறார்கள். இவர்களுக்குச் சலனத்தன்மை (restle ssness) அதிகம் உண்டு. இருதய நோய்வர வாய்ப் புண்டு. இது வாதப் பிரக் ருதியே.

இதேபோன்று பித்த, கபப் பிரக்ருதிகளின் குணங்களும் இங்கு குறிப்பிடப் பட்ட பின்பு உங்களுக்கு பொருந் தும் காரணிகளை மட்டும் தெரிவு செய்து நீங்கள் எந்த வகையென அறிந்து கொள் ளலாம்.

மதிப்பெண் 0 எனக்கு பொருந்தாது

1எப்போதாவது பொருந் தும்

2 சில சமயம் பொருந் தும்

3 அதிகமாகப் பொருந் தும்

(தொடரும்)

# நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் புதிய யாப்பு தீர்வாக அமையாது

## ஜே.வி.பி.எம்.பி. பிமல் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு நாட்டைத் துண்டாடும் பொறி அல்ல என்பதை உணர்ந்தும் அரசியல் இலாபத்திற்காகவே அதனை ஒன்றிணைந்த எதிரணி எதிர்ப்பதாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர்,

வடக்கு வாக்குகளால் மட்டுமன்றி சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளையும் பெற்றே, புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்பதை சம்பந்தன் உணர்ந்துள்ளதாலே அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கோரியுள்ளார். மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் போன்று சி.வி.விக்னேஸ்வரன் நடந்தாலும் நாட்டிற்கு புதிய யாப்பு அவசியம். புதிய யாப்பு தொடர்பில் மக்களின் கருத்து பெறப்பட்டது முக்கியமாகும். இலங்கையில் ஒருபோதும் சகல மக்களின் கருத்துக்களைப் பெற்று சட்டம் உருவாக்கப்படவில்லை.

இலங்கை பழைய ஜனநாயக முறையுள்ள நாடாக குறிப்பிட்டாலும் மக்களின் பங்களிப்பில்லாத சட்டத்தை செயற்படுத்தும் ஒரு நாடு இலங்கையாகும்.

நாட்டிற்கு புதிய யாப்பு அவசியமாகும். இதனை சர்வஜன வாக்கெடுப்பினூடாக நிறைவேற்ற வேண்டும். நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் புதிய யாப்பு தீர்வாக அமையாது. நிறைவேற்று. ஜனாதிபதி முறையினூடாக சர்வாதிகாரி உருவாக்கப்பட்டார். இதற்கு கட்சிக்குள்ளே கூட எதிர்ப்பு வந்தது.

1994 முதல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சகல ஜனாதிபதி வேட்பாளர்களும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக வாக்களித்தனர். ஆனால் ஒருவரும் அதனை நிறைவேற்றவில்லை. 115 எம்.பிகளின் ஆதரவு இருந்தால் மைத்திரிபால சிறிசேன இன்னொரு மகிந்த ராஜபக்ஷவாகவா? சந்திரிகாவா என்பது புரியும். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இல்லாததாலே அவர் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை.

மோசடிக்கு பாதுகாப்பு



வழங்கும், நீதித்துறையில் தலையீடு செய்யும் சர்வாதிகார போக்குள்ள ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்பது பெரும்பான்மையானவர்களின் கோரிக்கையாகும். எந்த யாப்பை கொண்டு வந்தாலும் தூய ஐஸ்கிறீமில் நஞ்சு கொடுத்து கொல்லும் நிலைமையை தடுக்க முடியாது. நிறைவேற்று ஜனாதிபதி ஊடாக நாடு வெளிநாடுகளுக்கு மண்டியிட செய்யப்பட்டுள்ளது. நிறைவேற்று பிரதமர் முறை யோசனையொன்றை ஐ.தே.க. முன்வைத்துள்ளது. இதனை நாம் எதிர்க்கின்றோம்.


நிறைவேற்று அதிகாரம் காரணமாக ராஜபக்ஷ ஆட்சியில் மோசடி செய்தவர்கள் அமைச்சுப் பதவி வகிக்கின்றனர். நாட்டின் அரச தலைவராக ஜனாதிபதியிருக்க வேண்டும். அவருக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை ஏற்கிறோம். ஆனால் தேர்தல் ஊடாக அன்றி மக்கள் பிரதிநிதிகளினூடாகவோ அல்லது பாராளுமன்றத்தினூடாகவோ தான் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டும்.

எமது பிரச்சினைகளை நியாயமாகத் தீர்க்காவிடின் சர்வதேச சமூகம் அந்தப் பிரச்சினையை பெரிதுபடுத்தி தலையீடு செய்யும். யுத்தத்தின் பின் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய வசதிகளை வழங்கவில்லை.

நாட்டில் "சைற்றம்" பிரச்சினை, பொருட்களின் விலை உயர்வு பிரச்சினை என பாரிய பிரச்சினைகள் இருக்கையில் அரசியலமைப்பு குறித்து பேசுகின்றனர். எமது கட்சி புலிகளுக்காக சீமெந்தோ, ஆயுதமோ வழங்கிய கட்சியல்ல. உத்தேச அரசியலமைப்பு சர்வஜன வாக்கெடுப்புடனே நிறைவேற்றப்படவேண்டுமென சம்பந்தன் கூறியுள்ளார். வடக்கு வாக்குகளால் மட்டுமன்றி சிங்கள மக்களின் வாக்குகளும் இதற்கு தேவை என்பது அவருக்குத் தெரியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# "நான் குற்றமற்றவன்" நீதித்துறையை நம்புகிறேன்

## கருணா கூறுகிறார்



(கொழும்பு)

அரச சொத்துக்களை நான் துஷ்பிரயோகம் செய்யவில்லை என முன்னாள் பிரதி அமைச்சர் கருணா தெரிவித்துள்ளார்.

அரச வாகனத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட வழக்கிலிருந்து நேற்று முன்தினம் கருணா விடுவிக்கப்பட்டிருந்தார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"நான் குற்றமற்றவன் என்பதை முன்னதாகவே தெரிவித்தேன். நான் இந்த நாட்டின் நீதித்துறையை நம்புகின்றேன். இன்றுடன் எனது வழக்கு முடிவடைந்துவிட்டது.

மேலும், இனி எந்தப் பிரச்சினையும் இல்லை. குறித்த வாகனம் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது என்றும் கருணா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட 9 கோடி ரூபாய் பெறுமதியான குண்டு துளைக்காத ஜீப் வண்டியொன்றை மீள கையளிக்காத காரணத்தினால் கருணா கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இதையடுத்து குறித்த வாகனம் அரசினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதால், அவருக்கு எதிரான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்க விரும்பவில்லை என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளதாக பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

இதனை அடுத்து கருணா குறித்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1236

Search for people, places and things   Nagendram   Home

### அனந்திதா




### ஆருத்ரா





### சரித்ரன்





### அஜந்தா




### அபிராம்




### லக்சனா





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் பரிதாபநிலை தொடர்பாக சந்திரிகாவுக்கு விக்னேஸ்வரன் அனுப்பிய கடிதத்திற்கு பதிலில்லை

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதமிருக்கும் கைதிகளின் பரிதாபகரமான நிலையானது எந்தளவுக்கு வடக்கு- கிழக்கு மக்களின் மனங்களைப் பாதித்திருக்கின்றதென்பதை உணர்ந்து கைதிகள் விடயத்தில் உதவுமாறு தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான திணைக்களத்தின் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், கைதிகள் தொடர்பாக அவருக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு இதுவரை பதில் எதுவும் அனுப்பப்படவில்லை என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



அநுராதபுர சிறையில் உண்ணாவிரதமிருக்கும் சிறைக்கைதிகள் தொடர்பாக தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான திணைக்களத்தின் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கவுக்கு வடக்கு மாகாண முதலமைச்சரால் கடந்த 16 ஆம் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில்,

தாங்கள் எமது நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் பாரிய பணியை ஏற்றிருக்கின்றீர்கள். அதனால் தாங்கள் அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் சிறைக்கைதிகளின் பரிதாபகரமான நிலையை விரைவில் கவனத்தில் கொள்வது பொருத்தமானதே.

அரசாங்கம் இம் மூவரின் வழக்கை வவுனியாவிலிருந்து அநுராதபுரத்திற்கு மாற்றியது வழக்கின் சாட்சிகளுக்கு பாதுகாப்பளிப்பதற்கல்ல என்பது போல் தெரிகிறது. சாட்சியாளர்கள் வெளிநாடு சென்றுவிட்டார்கள் என்றும் அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பது தெரியவில்லையென்பதே உண்மையென அறிய வருகின்றது.

அவர்கள் இருக்குமிடம் தெரிந்திருந்தால்கூட அரசு அவர்களை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிகிறது. ஆகவே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அவர்களின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் மட்டுமே அவர்களைக் குற்றவாளிகளாகக் காண்பதே அரச தரப்பாரின் நோக்கமெனத் தெரிகிறது.

நான் உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருக்கையில் "நாகமணி" வழக்கில் கொடுத்த தீர்ப்பு எல்லோரும் அறிந்ததே. அதனை உதாரணமாக வைத்து பல நீதிமன்றங்கள் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தில் குறிப்பிடப்பட்ட சம்பவம் இடம்பெற்றதை உறுதிப்படுத்துவதற்கு ஆதரவாக இன்னொரு அனுசரணைச் சாட்சியத்தை வலியுறுத்தியிருந்தார்கள். நான் அந்த வழக்கில் குறிப்பிட்டதாவது, தனியே ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் வேறு ஒரு அனுசரணைச் சாட்சியமின்றி ஒருவரைக் குற்றவாளியாகக் காண்பது சரியான தீர்ப்பாக இருக்க முடியாதென்பதே.

அரசுக்கு இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருப்போரை அரசியல் காரணங்களுக்காக குற்றவாளிகளாகக் காண வேண்டிய தேவை இருப்பது போல் தெரிகிறது. விசாரணை ஆரம்பமாக முன்னரே ருவான் விஜயவர்த்தன உண்ணாவிரதமிருக்கும் சிறைக்கைதிகளை விடுதலைப்புலிகள் என முத்திரை குத்திவிட்டார். சிறைக் கைதிகள் தாங்கள் விடுதலைப் புலிகளுடன் எந்த விதமான தொடர்புகளும் அற்றவர்கள் எனக் கூறியதாக எனக்கு சொல்லப்பட்டது.



ஆனபடியால் அவர்களை யாரென அடையாளப்படுத்த முன் நாங்கள் பொறுமையுடன் நீதிமன்ற விசாரணையை எதிர்பார்த்திருத்தல் வேண்டும். விசாரணைக்கு முன்னரே ருவான் விஜயவர்த்தன விடுதலைப்புலிகள் என அவர்களைக் குறிப்பிட்டமை அவருடைய கண்ணியமற்ற பொறுப்பற்ற தனத்தையே காட்டுகிறது.

எப்படியிருப்பினும் சாட்சிகளின் நன்மைக்காக மட்டும் வழக்குகளை ஒரு நீதிமன்றிலிருந்து இன்னொன்றுக்கு மாற்றுதல் நியாயமானதல்ல. சாட்சிகளை பாதுகாப்பது அரசின் கடமை. வடமாகாணத்தில் 150,000 இராணுவத்தினர் உள்ளனர்.

இவ் வழக்கின் சாட்சிகளை அவர்களின் பாதுகாப்பிற்காக வவுனியாவிலிருந்து அநுராதபுரத்திற்கு மாற்றுவதென்பது வேடிக்கையானது. இவ்வளவு எண்ணிக்கையான இராணுவத்தாலும் பொலிஸினாலும் இவர்களுக்கு போதுமான பாதுகாப்பை அளித்திருக்க முடியும்.

நான் அறிந்த அளவில் மூன்று சாட்சியாளர்களில் எவரும் பாதுகாப்பு வழங்கும்படி கேட்டதாகவோ அல்லது அவர்கள் இலங்கையில் இப்பொழுது இருப்பதாகவோ தெரியவில்லை.

சாட்சியாளர்கள் சட்டமா அதிபரிடமிருந்து பாதுகாப்புக் கோரியிருந்தால் அப்படியாகப் பெற்றுக் கொண்ட ஆவணத்தின் வகையை "சட்டமா அதிபர் பகிரங்கமாக வெளியிட வேண்டும்.

ஆகவே வழக்கை அநுராதபுரத்திற்கு மாற்றியமையானது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டும் குற்றவாளிகளாகக் காணும் அரசியல் நோக்கமேயன்றி வேறெதுவும் இல்லை என்று தெரிகிறது. அநுராதபுர மேல் நீதிமன்றம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் வைத்தே பலரைக் குற்றவாளிகளாகக் கண்டிருக்கிறது.

உண்ணாவிரதமிருக்கும் கைதிகளின் பரிதாபகரமான நிலையானது எந்தளவுக்கு வடக்கு- கிழக்கு மக்களின் மனங்களைப் பாதித்திருக்கின்றதென்பதை தாங்கள் இதுவரையில் உணர்ந்திருப்பீர்களென நினைக்கிறேன். ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்திற்கு முதல் நாள எவ்வாறு வடபகுதியின் அன்றாட வாழ்க்கை ஸ்தம்பிதமடைந்திருந்ததென்பதை அறிந்திருப்பீர்களென நினைக்கிறேன். இவ்வாறான சூழ்நிலையில் தாங்கள் இவ்விடயத்தில் இவர்களின் வழக்குகளை கைதிகளை வவுனியாவிற்குத் திருப்பி அனுப்புவதற்கு அல்லது யாழ்ப்பாண மேல் நீதிமன்றிற்கு மாற்றுவதற்கு உதவுவீர்களென நம்புகிறேன். இக்கஷ்டமான காலகட்டத்தில் உண்ணா விரதமிருக்கும் கைதிகளின் அவலநிலையை உணர்ந்து தாங்கள் தலையிடுதல் மூலம் எங்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் கட்டியெழுப்ப உதவுவீர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)





வேலணை மத்திய கல்லூரியின் பெற்றோர் தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கூடைப் பந்தாட்ட மைதானத்தினையும் திறந்து வைத்தார். நேற்று முற்பகல் 10 மணியளவில் பாடசாலையின் அதிபர் சிவகாமி கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண கல்விப்பணிப்பாளர் உதயகுமார், ஆளுநரின் உதவிசெயலாளர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் ஊர்காவற்றுறை கஜபா படைத் தள கட்டளை அதிகாரி கப்டன் எல்.ஏ.ஆர்.டி. ஹெட்டியாராச்சி, பிரதேச செயலாளர் வேலணை செந்தில்நாதன், பழைய மாணவி திருமதி ஸ்கந்தகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்: மகாலிங்கம்)



நேற்றுக்காலை கடும் மழை பெய்து கொண்டிருந்த போது நெல்லியடி நகரப் பகுதியில் பழைய சந்தைக்கு அருகாமையில் வடிவாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டது. இதில் மோட்டார் சைக்கிளுக்கு கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்தவரை போக்குவரத்து பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர். (இ-60)

# ரோசிக்கு புதிய பதவி



(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனநாயக்கவுக்கு புதிய பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு கிழக்கு தேர்தல் தொகுதியின் அமைப்பாளராக ரோசி சேனநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் இவருக்கான நியமனக் கடிதம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.


இது தொடர்பான தகவலை ரோசி சேனநாயக்க தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவேற்றியுள்ளார். (இ-7)

# நவாஸின் மகன்களின் சொத்துக்களை முடக்க நீதிமன்றம் அதிரடி உத்தரவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் அவரது குடும்பத்தினர் மீதான ஊழல் வழக்கில் நவாஸின் இரு மகன்கள் முதலீடு செய்துள்ள சொத்துக்களை முடக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.





பாகிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 'பனாமா கேட்' ஊழல் வழக்கில், நவாஸ் ஷெரீப்பை தகுதி நீக்கம் செய்து அந்த நாட்டின் உச்ச நீதிமன்றம் கடந்த ஜூலை மாதம் 28 ஆம் திகதி அதிரடி தீர்ப்பு வழங்கியது. இதன் காரணமாக அவர் பிரதமர் பதவியில் இருந்து விலகினார்.

மேலும், நவாஸ் ஷெரீப், அவரது மகன்கள் உசேன் நவாஸ், ஹசன் நவாஸ், மகள் மரியம் நவாஸ், மருமகன் கப்டன் முகமது சப்தார் ஆகியோர் மீது ஊழல் தடுப்பு நீதிமன்றமான தேசிய பொறுப்புடைமை நீதிமன்றில் ஊழல் வழக்கு தாக்கல் செய்து 6 மாதங்களில் விசாரணையை முடிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்று உத்தரவிட்டது.

நவாஸ் ஷெரீப்பின் இரு மகன்களான ஹசன் மற்றும் ஹுசைன் ஆகியோர் 6 நிறுவனங்களில் செய்துள்ள முதலீடு குறித்து நேற்று விசாரிக்கப்பட்டது.

தேசிய கணக்கியல் பீரோ சார்பில் ஆஜரான சட்டத்தரணி இது தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்தார்.

இதனையடுத்து, அவர்கள் இருவரும் முதலீடு செய்துள்ள பங்கு மதிப்புக்களை முடக்க பாகிஸ்தானின் பங்குச் சந்தை ஆணையத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டதோடு, இவ்வழக்கை இம்மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. (இ-7)

# அரசியலமைப்புச் சபை அரசியல் யாப்புக்கு முரண்

## முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ எதிர்ப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பு சபை அரசியல் யாப்புக்கு முரணானது என்பதோடு, அதிகாரமற்றதொன்று என முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.



ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு தற்போது வரை நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பிற்கு இணங்க, பாராளுமன்றத்தில் அரசியலமைப்புச் சபையை நியமிக்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், தற்போது நியமிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு வழிகாட்டல் சபை மற்றும் அரசியலமைப்பு சபை என்பன அரசியல் யாப்புக்கு முரணானது என்பதோடு அதிகாரமற்றது எனவும் அவர் கூறியுள்ளார். (இ-7)

## 'அல்லல் போக்கும் அகண்டதீப பெருவிழா'

(யாழ்ப்பாணம்)

மேல் மருவத்தூர் சுயம்பு ஆதிபராசக்தி வார வழிபாடு மன்ற அல்லல் போக்கும் அகண்டதீபபெருவிழாநாளை மறுதினம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் இடம்பெறும்.

உலகத்திற்கு பயன் உண்டாகவும் உலகிற்கு ஒளிதேவை என்பதற்காகவும் மழை தேவை என்பதற்காகவும் ஆன்மீகம் வளர வேண்டும் என்பதற்காகவும் நவராத்திரி அகண்டம் ஏற்றி வைக்கப் படுகிறது. இதில் கலந்து கொண்டு அகண்டத்தை தரிசிப்பதால் பில்லி, சூனியத் தொல்லைகள் அகலும். அகந்தையை அடக்கி அமைதியைக் கொடுக்கும்.

இவ் அகண்ட தீபமானது வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை ஏற்றி வைக்கப்பட்டு 4.30 மணிக்கு முறைப்படி குளிர வைக்கப்படும்.

அதன்பின்னர் அன்னதானமும் வழங்கப்படும் என யாழ்.மேல் மருவத்தூர் ஆதி பராசகத்தி வார வழிபாட்டு மன்ற நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (இ-7)

## மூதாட்டியின் தங்கச் சங்கிலியின் அரைவாசி திருடர்களால் அறுப்பு


(கரணவாய்)

கடைக்குச் சென்ற மூதாட்டி ஒருவரின் தங்கச் சங்கிலியின் அரைவாசிப் பகுதி திருடர்களால் அறுத்துச் செல்லப்பட்ட சம்பவம் வடமராட்சி சாரையடிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மூதாட்டி கடைக்குச்சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இருவர் மூதாட்டியின் கழுத்தைப் பிடித்து நெரித்து தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்டனர். மூதாட்டியும் எவ்வளவோ போராடிய போதிலும் இறுதியில் மூதாட்டியின் இரண்டு பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியில் அரைவாசியை அறுத்துக் கொண்டு திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர். (இ-60)

## மரணத்தில் சந்தேகம்

## கிராம உத்தியோகத்தரின் சடலம் தோண்டியெடுப்பு



மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒந்தாச்சிமடம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடமையாற்றிவந்த நிலையில் மர்மமான முறையில் உயிரிழந்த கிராம உத்தியோகத்தரின் சடலம் நேற்று நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைவாக மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மகிழூரைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தரான சோமசுந்தரம் விக்னேஸ்வரனின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணைகள் களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்த நிலையில், ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி மரணமடைந்தவரின் உறவினர்களால் மரணம் தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக ஆட்சேபனை மனுத் தாக்கல் செய்ததனை தொடர்ந்து களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற நீதவான் எம்.ஐ.எம். றிஸ்வான் குறித்த சடலத்தினை தோண்டி எடுத்து விசேட பிரேத பரிசோதனைகளுக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

குறித்த நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக நேற்று நீதவான் எம்.ஐ.எம்.றிஸ்வான் முன்னிலையில் எருவில் மயானத்திலிருந்து சடலம் தோண்டி எடுக்கப்பட்டதுடன், சம்பவ இடத்திற்கு களுவாஞ்சிக்குடி பொலிஸார் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி இரவு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர் மகிழூர்முனையில் உள்ள குறுக்கு வீதியில் மின்சார தூண் ஒன்றில் மோதிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில் இந்த மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அமெரிக்காவின் சுப்பர் ஹீரோஸ் இலங்கையில்

### அமெரிக்கத் தூதுவர் மகிழ்ச்சி








(கொழும்பு)

இலங்கையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்க பெண் படை சிப்பாய்கள் தமது கூந்தலை அன்பளிப்புச் செய்துள்ளதை நினைத்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் சில கருத்துக்களைப் பதிவேற்றியுள்ளார்.

"இந்த அர்ப்பணிப்பு மற்றும் தன்னலமற்ற அமெரிக்க பெண் படை சிப்பாய்களை நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன், அவர்களே உண்மையான சுப்பர் ஹீரோக்கள்!" என பதிவிட்டுள்ளார்.

இலங்கை வந்துள்ள அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான பிரின்ஸ்டோன் கப்பலில் பணிப்புரியும் பெண் கடற்படை சிப்பாய்கள் இலங்கையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமது கூந்தலை அன்பளிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## பொதுநோக்கு மண்டபமும் கலை அரங்கத் திறப்பும்

(யாழ்ப்பாணம்)

சுவினை தெற்கு கலைமகள் பொது நோக்கு மண்டபமும் கலைமகள் கலை அரங்கமும் திறப்பு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுவினை தெற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் தலைவர் செ.ரவியன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு (உடுவில்) பிரதேச செயலர் திருமதி வமநுமதி கலந்து கொள்வார். (இ-10-78)

## மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இல. 80, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கி வந்த மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் 30.10.2017 ஆம் திகதி முதல் இல. 59, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என காணி ஆணையாளர் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ)

## விமல் வீரவன்சவை விமர்சித்த பியசிறிக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

விமல் வீரவன்சவின் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பியசிறி விஜேநாயக்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளது.

புதிய அரசியலமைப்பை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதன் காரணமாக நாடாளுமன்றத்திற்கு வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்று அண்மையில் விமல் வீரவன்ச எச்சரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் குறித்த கருத்து விமல் வீரவன்சவின் சொந்தக் கருத்து என்றும் அதற்கும் கட்சிக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றும் கட்சியின் தேசிய அமைப்பாளர் பியசிறி விஜேநாயக்க செய்தியாளர் மாநாடொன்றில் விமர்சித்திருந்தார்.


விமல் வீரவன்ச சொல்ல வந்ததை சரிவரப் புரிந்து கொள்ளாத காரணத்தினாலேயே பியசிறி விஜேநாயக்க அதனை விமர்சித்துள்ளதாக கட்சியின் பிரதித் தலைவர் ஜயந்த சமரவீர கண்டனம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கட்சித் தலைவரின் கருத்தை விமர்சித்த காரணத்துக்காக பியசிறி விஜேநாயக்கவுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சிறுவர் அரங்கம்



# பலன் நோக்காத பக்தி



பஞ்சபாண்டவர்கள் ஐந்து பேர். தருமன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் என்று அவர்களுக்குப் பெயர். இவர்களுள் அர்ஜுனன் கண்ணனிடம் மிகவும் அன்பும் பக்தியும் கொண்டவன். தினமும் ஒரு வண்டி அளவு பூக்களைப் பறித்து வந்து கிருஷ்ணனைப் பூசிப்பான். அதனால் தானே மிகவும் பக்திமான் என்ற கர்வம் அவனிடம் குடி கொண்டது. தன்னை விட கண்ணனை நேசிப்பவர் இவ்வுலகில் யாருமில்லை என்று இறுமாந்திருந்தான். உறவு முறையில் கண்ணன் அர்ஜுனனுக்கு மைத்துனன். கண்ணனின் சகோதரி சுபத்திரையை அர்ஜுனன் மணந்திருந்தான்.

பாரதப் போர் முடிந்து தருமன் பட்டமேற்று பல ஆண்டுகள் ஆட்சி செய்தான். காலம் ஓடியது. பாண்டவரின் காலம் முடிந்தது. அனைவரும் சொர்க்கம் செல்ல விண் வழியே பயணப்பட்டனர். தருமன் முன்னே செல்ல அவனைத் தொடர்ந்து கண்ணன் செல்ல அவனருகே பீமன் சென்றான். அவன் பின்னே அர்ஜுனன் சென்றான். அர்ஜுனன் எவ்வளவு முயற்சித்தும் பீமனைத் தாண்டி கண்ணனின் அருகே செல்ல இயலவில்லை.

அப்போது அர்ஜுனன் கண்ணனிடம் கேட்டான் "கண்ணா! ஏன் உன்னிடம் என்னால் நெருங்க முடியவில்லை? என் பக்தியில் ஏதேனும் குறை உண்டா? பீமனால் மட்டும் உன்னருகே நெருங்க முடிகிறதே?

கண்ணன் புன்னகைத்தான். "அர்ஜுனா! என்னைப் பூஜித்ததால் அதுவும் வண்டி அளவு பூக்களைப் போட்டுப் பூஜித்ததால் நீயே மிகவும் பக்தி கொண்டவன் என்று எண்ணிக்கொண்டாயல்லவா?" என்று கூறியபோது அர்ஜுனன் திகைத்தான்.

"ஆம் கண்ணா! அதிலென்ன சந்தேகம்? எண்ணற்ற மலர்களைக் கொண்டு உன்னைப் பூஜித்தவனல்லவா நான்?"

"அப்படியானால் உன்னிலும் அதிக மலர்களைக் கொண்டு என்னைப் பூஜித்தவனை உன்னை விட அதிக பக்தியுள்ளவன் என்று கூறலாமல்லவா?"

"அப்படிப் பூஜித்தவன் உள்ளானா கிருஷ்ணா?"

"ஆம். அவன்தான் பீமன். உன் அண்ணன்" அர்ஜுனன் திகைத்தான்.

"கண்ணா! பீமன் ஒருநாள் கூட உன்னைப் பூஜித்ததை நான் பார்க்கவில்லையே?"

"உண்மைதான். பீமன் பூஜித்தது யாருக்கும் தெரியாது. எனக்கும் பீமனுக்கும் மட்டுமே தெரியும்"

அர்ஜுனன் துக்கத்தில் ஆழ்ந்தான். அவன் உள்ளம் துயரத்தில் மூழ்கியது. கண்ணனைக் கண்ணீர் மல்கப் பார்த்தான்.

"அர்ஜுனா! துயரப்படாதே. உன் உள்ளத்தில் நீயே பக்திமான் என்றும் உனக்கே நான் உரிமையானவன் என்றும் நீ கர்வம் கொண்டிருந்தாய். அது சரியல்ல வென்பதை புரிய வைக்கவே இந் நிகழ்ச்சி நடந்தது"

"பீமன் யாரும் அறியாதவாறு எவ்வாறு பூஜை செய்தான்?"

"அர்ஜுனா! நீங்கள் வனவாசத்தின் போதும் அஞ்ஞாத வாசத்தின் போதும் காடுகளிலும் பல ஊர்களிலும் அலைந்து திரிந்தீர்கள் அல்லவா?

அப்போது பீமன் தன் கண்ணில் கண்ட மலர்கள் அத்தனையையும் கிருஷ்ணார்ப்பணம் என்று எனக்கு அர்ச்சித்து விடுவான். நானும் அவனது உள்ளத்தின் அன்பைப் புரிந்து கொண்டு அனைத்தையும் ஏற்றுக்கொண்டேன். அப்படி அவன் அர்ச்சித்த மலர்கள்தான் அதோ பார். மலை போல் குவிந்துள்ளன. நீ அர்ச்சித்தவை இதோ இச் சிறு குன்று போல் உள்ளது. உள்ளத்தின் தன்னலமில்லாத அன்பே உண்மையான பக்தி. நீ மலர் பறித்து பூஜை செய்ததை விட மனதளவில் பூஜித்த பீமனின் பக்தியே சிறந்தது. ஒப்புக் கொள்கிறாயா?"

அர்ஜுனனின் கண்கள் திறந்தன. அவனது கர்வம் அகன்றது. பரிசுத்தமான மனதோடு கண்ணனை தியானித்தான். தூய்மையான அர்ஜுனனை இப்போது கண்ணன் கைகளைப் பற்றி அழைத்துச் சென்றான். அனைவரும் வைகுண்டம் சேர்ந்தனர்.



## 01 11.2017 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1520-தென்னமெரிக்காவில் மகலன் நீரிணை மகலனால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1592-கொரியக் கடற்படையினர் பூசான் என்ற இடத்தில் மிகப்பெரும் ஜப்பானியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1604-ஷேக்ஸ்பியரின் ஒதெல்லோ நாடகம் முதற் தடவையாக லண்டனில் அரங்கேறியது.
- 1805- முதலாம் நெப்போலியன் ஆஸ்திரியாவை முற்றுகையிட்டான்.
- 1814- நெப்போலியனின் பிரான்ஸ் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஐரோப்பாவின் எல்லைகளை மீளவரையும் பொருட்டு வியென்னா காங்கிரஸ் கூடியது.
- 1894-ரஷ்யாவின் மூன்றாம் அலெக்சாண்டர் இறந்ததை அடுத்து இரண்டாம் நிக்கலாஸ் மன்னனானான்.
- 1904- இலங்கையின் வட மாகாணத்துக்கான தொடரூந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது. இது அநுராதபுரம் வரை சேவையில் ஈடுபட்டது.
- 1911- இத்தாலிக்கும் துருக்கிக்கும் இடையில் இடம்பெற்ற போரில் முதற்தடவையாக விமானத்தில் இருந்து குண்டுகள் வீசப்பட்டன.
- 1918- மேற்கு உக்ரேன் ஆஸ்திரிய-ஹங்கேரிப் பேரரசிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1956-இந்தியாவில் மைசூர், கேரளம், மதராஸ் ஆகிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டன.
- 1957-அக்காலத்தில் உலகின் மிக நீளமான தொங்கு பாலமான மக்கினா பாலம் மிச்சிகன் மாநிலத்தில் அமைக்கப்பட்டது.
- 1973- மைசூர் மாநிலம் கர்நாடகா என மாற்றப்பட்டது.
- 1998-மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் அமைக்கப்பட்டது.
- 1999-ஓயாத அலைகள் மூன்று இராணுவ நடவடிக்கையின் முதலாவது கட்டம் புலிகளால் தொடங்கப்பட்டது.

பிறப்புகள்

- 1762- ஸ்பென்சர் பேர்சிவல், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் (இ. 1812)
- 1858- உலூத்விக் சுத்ருவ, ரஷ்ய வானியலாளர் (இ. 1920)
- 1871- ஸ்டீபன் கிரேன், அமெரிக்கக் கவிஞர் (இ. 1900)
- 1935-எட்வர்டு செயித், பாலத்தீன-அமெரிக்க எழுத்தாளர், கல்வியாளர் (இ. 2003)
- 1945- நரேந்திர தபோல்கர், இந்திய எழுத்தாளர், செயற்பாட்டாளர் (இ. 2013)
- 1970- கப்டன் மயூரன், விடுதலைப் புலிப் போராளி (இ. 1993)
- 1973- ஐஸ்வர்யா ராய், இந்திய நடிகை
- 1974- வி. வி. எஸ். லக்ஷ்மண், இந்தியத் துடுப்பாளர்
- 1978- மஞ்சு வாரியர், இந்திய நடிகை

இறப்புகள்

- 1894- உருசியாவின் மூன்றாம் அலெக்சாந்தர் (பி. 1845)
- 1955- டேல் கார்னெகி, அமெரிக்க எழுத்தாளர் (பி. 1888)
- 1959- தியாகராஜ பாகவதர், தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர் (பி. 1910)
- 1996- ஜே. ஆர். ஜெயவர்தனா, இலங்கையின் 1வது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி (பி. 1906)
- 2015- ஆ. வேலுப்பிள்ளை, ஈழத்துத் தமிழறிஞர், பேராசிரியர் (பி. 1936)

சிறப்பு நாள்

- புனிதர் அனைவர் பெருவிழா (கத்தோலிக்கம்)
- மாசில்லா குழந்தைகள் படுகொலை, (இறந்தோர் நாளின் முதல் நாள்
- விடுதலை நாள் (அன்டிகுவா பர்புடா, 1981)
- கர்நாடக மாநில நாள் (கர்நாடகம்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 200 | 180 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 150 | 120 | 120 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 600 | 480 | 600 | 700 |
| தக்காளி | 180 | 200 | 200 | 270 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 70 | 60 | 70 |
| கோவா | 100 | 200 | 100 | 160 | 150 | 120 |
| கரட் | 100 | 250 | 200 | 200 | 200 | 90 |
| பூசணி | 60 | 100 | 80 | 60 | 60 | 40 |
| புடோல் | 100 | 120 | 100 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 120 | 100 | 90 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 320 | 400 | 300 | 280 | 400 | 250 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 200 | 180 | 200 | 140 |
| பாகற்காய் | 200 | 600 | 400 | 270 | 400 | 350 |
| வெண்டிக்காய் | 80 | 200 | 100 | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 200 | 80 | 100 | 100 | 80 |
| புடலங்காய் | 120 | 200 | 140 | 100 | 160 | 250 |
| லீக்ஸ் | 150 | 280 | 200 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 150 | 100 | 100 | 120 | 80 |
| கறிமிளகாய் | 300 | 200 | 300 | 200 | 400 | 250 |
| முருங்கைக்காய் | 450 | 200 | 200 | 150 | 200 | 500 |
| போஞ்சி | 150 | 250 | 200 | 170 | 200 | 200 |
| கத்தரிதம்பளை | 130 | 100 | 160 | 140 | 140 | 140 |
| கீரை - 1பிடி | 20 | 50 | 40 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 150 | 120 | 200 | 180 | 300 | 260 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 90 | 85 | 60-80 | 90 |
| இராசவள்ளி | — | 500 | — | 250 | — | — |
| வாழைப்பூ | 250 | — | — | — | 200 | — |
| முள்ளங்கி | 80 | — | 80 | 80 | 160 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | — | — | 60 | 60 | 80 | — |

தவறைத் திருத்திக் கொள்பவன் தரணியில் உயர்வான். - யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பௌத்தத்துக்கு முன்னுரிமை! யாருக்குப் பிரச்சினை இல்லை

இடைக்கால வரைபு தொடர்பில் பாராளுமன்றத்தில் இடம்பெறும் விவாதத்தின் மீது நேற்று முன்தினம் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன், பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுப்பதில் பிரச்சினையில்லை என்று கூறியுள்ளார்.

இலங்கையில் எது பிரச்சினையாக இருக்கிறதோ அதனைப் பிரச்சினையில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியிருப்பது தமிழ் மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் சிங்களம், தமிழ் என்ற மொழிகளால் பிரச்சினை உருவாகிறது என்பது ஒரு குறிப்பிட்ட அளவைக் கொண்டது.

மாறாக இலங்கை பௌத்த நாடு என்பது தான் இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு மூலகாரணமாகும்.

யாழ்ப்பாணத்தில் சிங்கள மொழியை தமிழ் மக்களுக்குக் கற்பித்தால் அதுபற்றி எவரும் எதிர்ப்புக் காட்டமாட்டார்கள் என்பதுடன் அதனை ஆதரிப்பர்.

இதேபோன்று சிங்களப் பிரதேசங்களில் தமிழ் மொழியை கற்பித்தால் மொழியை அறிந்து வைத்திருப்பது தொடர்பாடலுக்கு சிறந்தது என்ற அடிப்படையில் சிங்கள மாணவர்களும் தமிழ் மொழியைக் கற்பதில் ஆர்வம் காட்டுவர்.

ஆனால் பௌத்த விகாரை ஒன்றை யாழ்ப்பாணத்தில் கட்டும்போது அல்லது சைவாலயத்தை சிங்களக் கிராமங்களில் நிர்மாணிக்கும்போது பிரச்சினை ஆரம்பித்து விடுகின்றது.

ஆக, சிங்கள மொழியைத் தமிழ் மக்கள் கற்பதற்கும் தமிழ் மொழியை சிங்கள மக்கள் கற்பதற்கும் தயாராக இருக்கின்றனர். இதுவே யதார்த்தம்.

ஆனால் சமயம் என்று வந்துவிட்டால் அங்கு பிரச்சினை தொடங்கி விடுகிறது.

ஆகையால் இலங்கையின் இனப்பிரச்சினை என்பது பௌத்த மதவாதத்தில் இருந்து தான் எழுகை பெறுகிறது.

எனவே பிரச்சினைக்கு அடிநாதமாக இருக்கக்கூடிய பௌத்த மதத்தை சிங்களவர்கள் தமக்கு முன்னுரிமைப்படுத்திக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை.

அதேவேளை பௌத்த மதத்துக்கு இலங்கையில் முன்னுரிமை எனும்போது, இந்த நாட்டின் ஆதிச் சமயமாகவும் ஆட்சிச் சமயமாகவும் இருந்த இந்து சமயத்தின் நிலை என்னவாகிறது என்ற குழப்பம் ஏற்படுகிறது.

எனவே ஒன்றில் இலங்கை மதசார்பற்ற நாடாக இருக்க வேண்டும். அல்லது சிங்கள பிரதேசங்களில் பௌத்தத்துக்கு முன்னுரிமை என்றால் தமிழர் தாயகத்தில் இந்து சமயத்துக்கு முன்னுரிமை என்ற நியமம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இதைவிடுத்து பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுப்பதில் எங்களுக்குப் பிரச்சினையில்லை என்றால் வட மாகாணத்தில் எங்கெல்லாம் அரச மரங்கள் நிற்கின்றனவோ அங்கெல்லாம் பௌத்த விகாரைகளை அமைக்கலாமா?

இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவிக்கிறதா என்ற கேள்வி எழும்.

எது எவ்வாறாயினும் பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்கலாம் என்று கூறிவிட்டு பின்னர் வடக்கு கிழக்கில் விகாரை அமைப்பதை எதிர்ப்பதென்பது சட்டத்துக்கு முரணான செயலாகும் என்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் நிதானமாக நடந்து கொள்வது அவசியம்.

# பிரிந்திருந்து வாதங்களை நடத்தினால் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது!

## ஜனாதிபதி மைத்திரி அட்வைஸ்

(கொழும்பு)

பிரிந்திருந்து தனித் தனியாக வாதங்களை நடத்துவதன் மூலம் எந்தப் பிரச்சினைகும் தீர்வு காண முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர இதனைத் தெரிவித்தார்.

முன்மொழியப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பு தொடர்பாக காணப்படும் சில தவறான அபிப்பிராயங்களை நீக்கும் பொருட்டு எதிர்காலத்தில் 3 படிமுறைகளை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், அரசியல் யாப்பு குறித்து ஆர்வம் கொண்டுள்ள கல்விமான்கள் மற்றும் புத்திஜீவிகள் கொண்ட மாநாட்டையும் முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் அரசியலமைப்பு தொடர்பாக தற்போதுள்ள பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

## அரியாலை துப்பாக்கிச் சூடு

# விசாரணையை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரியிடம் கோரிக்கை

யாழ். அரியாலை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணையொன்றை மேற்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென சம்பவத்தில் பலியான இளைஞனின் உறவினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முக்கிய கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர்.

யாழ். அரியாலை, உதயபுரம், முதலாம் குறுக்குத் தெரு பகுதியில் சக நண்பனின் மோட்டார் சைக்கிளின் பின்புறமாக அமர்ந்து பயணித்த மணியம்தோட்டப் பகுதியைச் சேர்ந்த 24 வயதான இளைஞரொருவர் மீது அடையாளம் தெரியாத இரு நபர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி கடந்த 22ஆம் திகதி உயிரிழந்திருந்தார்.

சமபவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையப் பொலிஸார் தொடர் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில் மண்டைதீவு கடறபடை முகாமிலும் பணணையில் அமைந்துள்ள விசேட அதிரடிப்படையினர் முகாமிலும் பொலிஸார் தீவிர விசாரணைகள் மேற்கொண்டனர்.

விசாரணையின் அடிப்படையில் சம்பவத்தின் போது கொலையாளிகள் பயன்படுத்தியதாகக் கருதப்படும் முச்சக்கர வண்டி பண்ணையிலுள்ள விசேட அதிரடிப்படை முகாமில் காணப்படுவது கண்டறியப்பட்டது.

பொலிஸாரின் விசாரணைகளின் அடிப்படையில் குற்றவாளிகளை நெருங்கிய சந்தர்ப்பத்தில் கொழும்பு பொலிஸ் தலைமையகத்தால் குறித்த விசாரணைகள் மேற்கொண்டு தொடர முடியாதவாறு தடுத்து நிறுத்தப்பட்டது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான பொறுப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே, மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் இடம்பெற்று எட்டு நாட்கள் கடந்தும் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படாமை தொடர்பிலும் சம்பவத்தில் பலியான இளைஞனின் உறவினர்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். (ம-4)

## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

130



காஞ்சனத்தால் வேயப்பட்ட கதவுகள் கண்களைப் பறிக்கின்றன.

உச்சியிலிருந்து குளிர்ந்த காற்று சில்லென்று இறங்கி உதிரம் வரை குளிர்விக்கிறது.

பொன் வாயிலின் இருபுறங்களிலும் பொன் வேய்ந்த பெருமான்களாய் ஜெயன், விஜயன் காட்சி அளிக்கிறார்கள்.

ஆண்டவனைத் தரிசிக்க அடுத்த அடி எடுத்து வைக்குமுன் மனதாலும் உடலாலும் தூய்மையாக இருக்கவேண்டும் என்று நினைவுபடுத்துவதற்காகவே இந்தத் துவார பாலகர்கள். (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வளைகாப்புக்குரிய சுப நாட்கள் எது?**

நட்சத்திரம்: ரோகினி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், அத்தம், உத்தரட்டாதி, திருவோணம், ரேவதி

திதி: துதியை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி, திரயோதசி.

கிழமை: புதன், வெள்ளி.

நாள்: பெண் கருவுற்ற ஏழு, ஒன்பதாம் மாதம்

(தொடரும்)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### தற்பெருமை அழிவைத் தரும்



✦ மருத்துவர்கள் நோயாளிகளிடம் "எனக்கு வியாதியே இல்லை" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்கும்படி அறிவுரை கூறுகின்றனர். நோயாளிகள் அப்படிச் சொல் வதனால் வியாதிகள் அகலுவதற்கான சாதகமான நிலை உண்டாகிறது. அதுபோல, இவ்வுலகில் நீ தாழ்ந்த வன் என்று எண்ணிக் கொண்டால், சீக்கிரத்தில் தாழ்ந்தவனாகவே ஆகிவிடுவாய். அளவிட முடியாத அளவிற்குத் திறமை உன்னிடம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டால், அவ்வாறே திறமைகள் மிகுந்தவனாய் ஆகிவிடுவாய்.

✦ கல்லானது தண்ணீருக்குள் வருடக்கணக்கில் கிடந்தாலும் அதனுள் தண்ணீர் நுழையாது. ஆனால், களிமண் தண்ணீருக்குள் கிடந்தால் கரைந்து விடும். அதுபோல திடமான நம்பிக்கையுள்ள மனமுள்ளவர்கள், சோதனையால் தடுமாற்றம் அடைவதில்லை. நம்பிக்கை இல்லாதவருடைய மனம் சிறு காரணத்திற்கு கூட சலனமடையும்.

✦ குருவின் சக்தியின்மீது திடமான நம்பிக்கை கொண்ட ஒரு சிஷ்யன், குருவின் பெயரைச் சொல்லிக் கொண்டே ஆற்றின் மீது நடந்து போனான். இதைக் கண்ட குரு "என் பெயருக்கே இவ்வளவு மகிமை இருக்கிறதென்றால், எனக்கு எவ்வளவு சக்தி இருக்க வேண்டும். இது எனக்கு இவ்வளவு நாள் தெரியாமல் போய்விட்டதே என்று நினைத்தபடியே, அவரும் தண்ணீரின் மீது நடக்க ஆரம்பித்தார். ஆனால், கால் வைத்தவுடன் மூழ்கிவிட்டார். நம்பிக்கையால் அபூர்வமான காரியங்களைச் சாதிக்கலாம். ஆனால், தற்பெருமை அழிவைத் தரும்.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்க ங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ். பிரதேசத்தில காங்கேசன் துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன துறை சீமெந்து ஆலைப் பகுதி, பெற்றோலியக் கூட்டுத்தாபன அலுவலகம் மற்றும் எணணெய் தாங்கிகள் ஆகிய பிரதேசங்களிலும் நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வவுனியா பிரதேசத்தில சாளம்பைக் குளம் பிரதேசம், சாளம் பைக்குளம புதிய வீட்டுத்திட்டம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில முருங்கன் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

## உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

இலங்கையில் மார்பக கதிர்ப்படப் பரிசோதனை செய்யக்கூடிய நிலையங்கள்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை
பொலநறுவை மாவட்ட வைத்தியசாலை
கண்டி போதனா வைத்தியசாலை
கராபிட்டிய போதனா வைத்தியசாலை
கொழும்பு தேசிய வைத்தியசாலை
நாரஹேன்பிட்டி தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு மையம்
மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலை
களுபோவில போதனா வைத்தியசாலை

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்ப்பாணம் மாநகர சபை

# மைலோ கிண்ண கால்பந்தாட்ட முடிவுகள்



மைலோ கிண்ண கால் பந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் லீக்கிலிருந்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் மற்றும் ஆனைக்கோட்டை யூனியன் அணிகள் மாவட்டச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும் யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகங்கள் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கால்பந்தாட்ட கழகங்கள் மற்றும் பாடசாலை அணிகளுக்கிடையில் கால் பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தி வருகின்றன.

கிளிநொச்சி- யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 11 இடங்களில் இந்தச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் யாழ்ப்பாண லீக் அணிகளுக்கிடையிலான போட்டி அரியாலை கால் பந்தாட்ட பயிற்சிமைதானத்தில் நடைபெற்று வந்தன.

முதற்சுற்று ஆட்டங்களில் யாழ்.பாரதி அணி 01:00 என்ற கோல்கள் கணக்கில் சென். மைக்கல் விளையாட்டுக் கழகத்தையும் ஆனைக் கோட்டை யூனியன் அணி பனால்ட்டி உதையில் 5:4 என்ற கோல் கணக்கில் ஒலிம்பியா அணியையும் திருக்குமரன் அணி 04:00 என்ற கோல் கணக்கில் புத்தூர் சரஸ்வதி அணியையும் பொற்பதி அணி பனால்ட்டி உதையில் 04:02 என்ற கோல் கணக்கில் முத்தமிழ் அணியையும் வளர்மதி அணி. 01:00 என்ற கோல் கணக்கில் உரும்பிராய் சரஸ்வதி அணியையும் ஊரெழு பாரதி அணி 01:00 என்ற கோல் கணக்கில் எல்லாளன் அணியையும் அண்ணா ஸ்ரார் அணி 01:00 என்ற கோல் கணக்கில் அரியாலை ஐக்கியம் அணியையும் யாழ்ப்பாணம் ஐக்கியம் அணி பனால்ட்டி உதையில் 05:04 என்ற கோல் கணக்கில் ஞானகலா அணியையும் வென்றன.

மணியந்தோட்டம் வீனஸ், சென்.றொக்ஸ் அணிகள் எதிரணிகள் வருகை தராமையால் வெற்றிபெற்று இரண்டாம் சுற்றுக்கு தகுதி பெற்றன. கலைவாணி. ஞானமுருகன், சென்.நீக்கிலஸ், றோயல் அணிகள் நேரடியாக இரண்டாம் சுற்றில் இருந்து தகுதி பெற்றன.

இரண்டாம் சுற்றில் கலைவாணி அணி 01:00 என்ற கோல் கணக்கில் வீனஸ் அணியையும் ஆனைக் கோட்டை யூனியன் அணி 04:01 என்ற கோல் கணக்கில் யாழ்.பாரதி அணியையும் திருக்குமரன் அணி 02:00 என்ற கோல் கணக்கில் பொற்பதி அணியையும் மயிலங்காடு ஞானமுருகன் அணி 03:00 என்ற கோல் கணக்கில் சென்.றொக்ஸ் அணியையும் சென். நீக்கிலஸ் அணி 02:00 என்ற கோல் கணக்கில் வளர்மதி அணியையும் ஊரெழு பாரதி அணி 01:00 என்ற கோல் கணக்கில் அரியாலை ஐக்கியம் அணியையும் அன்னை அணி 03:01 என்ற கோல் கணக்கில் யாழ்.ஐக்கியம் அணியையும் ஊரெழு றோயல் அணி 05:00 என்ற கோல் கணக்கில் மணியந் தோட்டம் அணியையும் வென்றன.

மூன்றாம் சுற்றில் ஆனைக்கோட்டை யூனியன் அணி 02:00 என்ற கோல் கணக்கில் கலைவாணி அணியையும் மயிலங்காடு ஞானமுருகன் அணி 02:01 என்ற கோல் கணக்கில் திருக்குமரன் அணியையும் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி 01:00 என்ற கோல் கணக்கில் ஊரெழு பாரதி அணியையும் ஊரெழு றோயல் அணி 01:00 என்ற கோல் கணக்கில் அன்னை அணியையும் வென்றன.

நான்காவது சுற்றில் ஆனைக்கோட்டை யூனியன் அணி பனால்ட்டி உதையில் 4:3 என்ற கோல் கணக்கில் மயிலங்காடு ஞானமுருகன் அணியையும் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி 01:00 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் அணியையும் வென்றன.

நான்காவது சுற்றில்வெற்றி பெற்ற இரண்டு அணிகளும் கிளிநொச்சி - யாழ்ப்பாணம் மாவட்ட சுப்பர் - 20 அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள மாவட்டமட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ளன. (க-26)

# குருநகர் பாடும்மீன் கழகம் காலிறுதி போட்டிக்கு தகுதி



மைலோ கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் குருநகர் பாடும்மீன் கழகத்தை எதிர் த்து கிளிநொச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழகம் மோதியது. இப் போட்டியில் குரு நகர் பாடும் மீன் கழகம் கிளிநொச்சி இளந்த ளிர் விளையாட்டுக் கழகத்தை 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி காலிறுதி போட்டிக்கு தகுதி பெற்றது. (க)

SPORTS

# ஜெகமீட்பர் வெற்றி

மைலோகிண்ண மாவட்ட மட்ட போட்டியில் கடந்த 29 ஆம் திகதி அன்று நடைபெற்ற போட்டியில் திக்கம் இளைஞர் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து கிளிநொச்சி ஜெக மீட்பர் அணி மோதியது.

போட்டியில் கிளிநொச்சி ஜெகமீட்பர் விளையாட்டுக்கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# மாவட்டமட்ட சுற்றுப்போட்டிகள் ஆரம்பம்

மைலோ கிண்ண கால் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மாவட்டமட்டச் சுற்றுப் போட்டிகள் அரியாலை கால் பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும் யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகங்கள் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கால்பந்தாட்ட கழகங்கள் மற்றும் பாடசாலை அணிகளுக்கிடையில் கால் பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றைநடத்திவருகின்றன.

கிளிநொச்சி-யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 11 இடங்களில் இந்தச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள லீக்குகளின் அணிகளுக்கிடையில் அந்தந்த லீக்குகளின் ஊடாக போட்டிகள் நடைபெற்று மாவட்டமட்டச் சுற்றுப் போட்டிக்கான அணிகள் வழங்கப்பட்டன.

அதனடிப்படையில், உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம், வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழகம், வட்டக்கச்சி லக்கிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம், திருநகர் விளையாட்டுக்கழகம், வலைப்பாடு சென்.ஆன்ஸ், வலைப்பாடு ஜெகமீட்பர், நாச்சிக்குடா சென். மேரிஸ், நாச்சிக்குடா சென். ஜேம்ஸ், உடுத்துறை பாரதி, கட்டைக்காடு சென்.மேரிஸ், குப்பிளான் குறிஞ்சிக்குமரன், இளவாலை யங்ஹென்றிஸ், பலாலி விண்மீன், திக்கம் இளைஞர்கள், ஆனைக் கோட்டை யூனியன், நாவாந்துறை சென்.நீக்கிலஸ், வேலணை துறையூர் ஐயனார், மெலிஞ்சிமுனை இருதயராசா, வடமராட்சி பொம்மர்ஸ், வதிரி டயமன்ஸ் ஆகிய 20 அணிகள் மாவட்ட மட்டச் சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

அதனைவிட கடந்த வருட மைலோ கிண்ணப் போட்டியில் சம்பியனாகியது குருநகர் பாடும்மீன். இரண்டாவது இடம்பெற்ற பாசையூர் சென். அன்ரனீஸ் மற்றும் நான்காவது இடம்பெற்ற வல்வெட்டித் துறையங்கம்பன்ஸ் அணிகள் லீக் அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றாமல் நேரடியாக மாவட்ட மட்டச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன. கடந்தமுறை 3 ஆம் இடம்பெற்றிருந்த நாவாந்துறை சென். மேரிஸ் அணிக்கு யாழ்ப்பாண லீக்கினால் இடைக்காலதடை விதிக்கப்பட்டமையால் அவ்வணி மைலோச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றவில்லை.

பாடசாலை அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் 14 மற்றும் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் சுற்றுப் போட்டியானது நடைபெற்றது. இதில் ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளிலிருந்து 8 அணிகளும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளிலிருந்து 2 அணிகளும் சுப்பர் 10 அணிகளுக்கு தெரிவு செய்யப்பட்டன.

அதனடிப்படையில் 14 வயதுப்பிரிவு சுப்பர் 10 அணிகளுக்குள் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வட்டக்கச்சி மகா வித்தியாலயம், வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆகிய அணிகளும்யாழ்ப்பாணமாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, சென்.ஜோண்ஸ் கல்லூரி, அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம், கொற்றாவத்தை அமெரிக்கமிசன், சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய அணிகள் தெரிவாகியுள்ளன.

16 வயதுப்பிரிவு சுப்பர் 10 அணிகளுக்குள் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, முழங்காவில் மகா வித்தியாலயம் ஆகிய அணிகளும் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து கொற்றாவத்தை அமெரிக்கமிசன் கல் லூரி, மாதகல் சென்.தோமஸ் கல்லூரி, இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, மணற்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய அணிகள் தெரிவாகியுள்ளன.(க-26)

## வடமராட்சி லீக்கில் குழப்பம்

# டயமன்ஸ்,வதிரி பொம்மர்ஸ் மாவட்ட சுற்றுக்குத் தெரிவாகியது

வடமராட்சி லீக் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் குழப்பம் ஏற்பட்டமையால் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகனின் அறிவுறுத்தலுக்கமைய, பிரதேச செயலகத்தின் மூலம் வதிரி டயமன்ஸ். பொம்மர்ஸ் அணிகள் மாவட்டமட்டச் சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும். யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகங்கள் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கால்பந்தாட்ட கழகங்கள் மற்றும் பாடசாலை அணிகளுக்கிடையில் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தி வருகின்றன.

கிளிநொச்சி- யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 11 இடங்களில் இந்தச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. வடமராட்சி லீக் அணிகளுக்கிடையிலான போட்டிகளின் போது. வடமராட்சி லீக்கினால். சரியான நடுவர்களைப் பயன் படுத்தாமல். பயிற்சியிலுள்ள நடுவர்கள் பயன்படுத்தப்பட்டதாக முறைப்பாடுகள் எழுந்தன.

இது உறுதி செய்யப்பட்டு. மாவட்டச்செயலர் இதில் தலையிட்டு. வடமராட்சிலீக்கிலிருந்து தெரிவாகிய அணிகளை தவிர்த்து. கரவெட்டி பிரதேசெயலகத்தினூடாக வதிரி டயமன்ஸ் மற்றும் வதிரி பொம்மர்ஸ் அணிகளை மாவட்டச் சுற்றுக்குத் தெரிவு செய்தனர். (க-26)

## காண்டீபன் அதிரடி

# காலிறுதிக்கு நுழைந்தது பலாலி விண்மீன் வி.கழகம்



மைலோ கிண்ண கால் பந்து சுற்றுப் போட்டியில் கடந்த 29 ஆம் திகதி ஞாயிறுக் கிழமை நடைபெற்ற காலிறுதிக்கு தகுதி பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீனை எதிர்த்து கிளிநொச்சி திருநகர் அணி மோதியது.

ஆரம்ப முதல் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகத்தின் முன்கள வீரர்களின் மின்னல் வேக ஆட்டத்தால் திக்கு முக்காடிப் போனது திருநகர் விளையாட்டுக்கழகம். இறுதியில் காண்டீபனின் அதிரடிக்கோல்களின் உதவியுடன் 06:01 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது பலாலி விண்மீன். இப் போட்டியில் காண்டீபனால் 6 கோல்கள் போடப்பட்டமை சிறப்பாகும். (க)

## 11 நாட்களேயான...

கும் தாய் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 9.30 மணிக்கு தாய்ப்பால் கொடுத்துவிட்டு நித்திரையாகியுள்ளார். அதிகாலை எழுந்து பார்த்தபோது குழந்தை பேச்சு மூச்சின்றி இருந்துள்ளது .

உடனடியாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு குழந்தையை கொண்டு சென்ற பொழுது, குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள், குழந்தை இறந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-9.30)

## வாள்களுடன் நின்ற...

பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட போது, சந்தேகத்திற்கு இடமான முறையில் 4 இளைஞர்கள் வாள்களுடன் வீதியில் நின்றுள்ளனர்.

குறித்த நான்கு இளைஞர்களையும் சுற்றி வளைத்த பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். இதன்பின்னர் குறித்த நான்கு இளைஞர்களையும் கைதுசெய்த பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரும் யாழ்.மடத்தடி மற்றும் இராசாவின் தோட்டம் வீதிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் நால்வரையும் விசாரணைகளின் பின்னர் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றதாகவும் யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலமாக வாள்வெட்டு மற்றும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடும் நபர்களை கைதுசெய்யும் தீவிர நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும். (ம-4)

## கடும் காற்று வீசும்...

படும் என்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மணிக்கு சுமார் 70 முதல் 80 மைல் வேகத்துக்கு காற்று வீசலாம் என்றும் இதனால் குறிப்பாக, காலி முதல் புத்தளம் மற்றும் மன்னார் வழியாக காங்கேசன்துறை வரையான கரையோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் ஏனைய கரையோரப் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய மழையை எதிர்பார்க்கலாம் என்பதால், மீனவர்கள், கடற்படையினர் உட்பட அனைவரும் விழிப்புணர்வுடன் செயலாற்றுமாறும் வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் கடந்த மூன்று தினங்களில் 93.3 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இன்று கடற்கரை பகுதிகளில் பலத்த காற்று வீசும் எனவும் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என திருநெல்வேலி, வானிலை அவதானிப்பு நிலையப் பொறுப்பதிகாரி த.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் பல்வேறு பகுதிகளில் கடந்த 3 நாட்களாக மழை நீடித்துள்ளது, கடந்த 29 ஆம் திகதி காலை 8.30 தொடக்கம் 30 ஆம் திகதி காலை 8.30 மணி வரை 33.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 30ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் 31ஆம் திகதி நேற்று காலை 8.30 மணி வரை 22.1 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று காலை 8.30 தொடக்கம் மாலை 5.30 மணி வரை 37.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது

நேற்று அதி கூடிய மழை வீழ்ச்சியாக முல்லைத்தீவு வல்லிபுரம் பகுதியில் 103.1 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று ஆனையிறவில் 85.3 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், மந்திகையில் 58.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு, நயினாதீவு பகுதிகளில் அதிகளவு மழைவீழ்ச்சி கிடைக்கவில்லை. நேற்று 4.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது. இன்னும் சில தினங்கள் இந்த மழை வீழ்ச்சி தொடரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

## சினிமாப் பாணியில்...

யில் கொள்ளைச் சம்பவத்தை கச்சிதமாக முடித்துச் சென்றுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 1.00 மணியளவில் துன்னாலை குமரன் குளம் பகுதியில் உள்ள பொன்னையா விஸ்னுராஜ் என்பவரது வீட்டில் புகைக் கூடு வழியாக இறங்கிய கொள்ளைக் கோஷ்டியின் ஒருவன் கதவினை திறக்க சுமார் பத்து பேர் கொண்ட கொள்ளைக் கோஷ்டியினர் வீட்டிற்குள் புகுந்தனர்.

கறுப்பு துணிகளால் முகங்களை கட்டியவாறு கூரிய ஆயுதங்கள், கொட்டன்கள், பொல்லுகளுடன் புகுந்தவர்கள் சிறுவர் ஒருவரை தூக்கி கழுத்தில் கத்தி வைத்துக் கொண்டு யாரும் சத்தம் போட்டால் கொலை செய்து விடுவதாக மிரட்டி வீட்டில் இருந்த ஒருசோடி காப்பு, ஒரு மோதிரம், சங்கிலி, தாலிக் கொடி எனபவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இதன்பின்னர் அதிகாலை 2.00 மணியளவில் கரவெட்டி மத்தி புதுக்குளம் பகுதியில் உள்ள கந்தசாமி சுவீந்திரன் என்பவரின் வீட்டிற்கு சென்ற கொள்ளையர்கள் தாம் பொலிஸார் என தமிழிலும், சிங்களத்திலும் கூறியதுடன் சோதனை செய்ய வேண்டும் வீட்டை திறக்குமாறு கோரினர்.

இதற்கு வீட்டார் மறுப்பு தெரிவிக்க வீட்டு கதவை உடைத்து உள்நுழைந்த கொள்ளையர்கள் தாம் கொண்டு வந்த கத்திகள், பொல்லுகளைக் காட்டி அச்சுறுத்தியதுடன் ஒருவர் சிறுபிள்ளைக்கு பக்கத்திலும் கத்தியுடன் நின்றுள்ளார். இதனால் அச்சமடைந்த அவர்கள் எவ்வித கூக்குரலையும் எழுப்ப முடியாத நிலையில் வீட்டை சல்லடை போட்ட கொள்ளையர்கள் 6 மோதிரம், ஒரு சங்கிலி 20,000 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இக் கொள்ளைகள் இடம்பெற்ற இரண்டு வீடுகளும் ஒரு கிலோ மீற்றர் தூரவித்தியாசத்தைக் கொண்டதாகும். முதல் வீட்டில் கொளளையிடப்பட்ட போது அங்கிருந்த சேமிப்பு உண்டியல் ஒன்றை கொள்ளையிட்டு வந்தவர்கள் அதனை இரண்டாவது வீட்டில் கைவிட்டு சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப்பொலிஸில் நேற்று காலையில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் தடயவியல் பொலிஸாரையும் அழைத்து தடயங்களையும் பெற்றுள்ளனர்.

வட மாராட்சிப் பகுதியில் நீண்ட இடை வெளிக்குப் பிறகு கொள்ளைச் சம்பவம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளமையினால் பொதுமக்கள் பெரும் பீதிக்குள்ளாகியுள்ளனர். (ம-60)

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

## மின்சாரம் தாக்கியதில்...

று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் தும்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த குணராசா அம்பிகை (வயது 50) என்ற குடும்பப்பெண்ணே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தமது வீட்டில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிக்கு கேபிள் வழங்குநர் மூலமே இணைப்பினைப் பெற்றுவந்துள்ளனர். இவ் இணைப்பினை மழை, இடி, மின்னல் காரணமாக இரவு துண்டித்து விட்டு நேற்று அதிகாலையில் இணைப்பு கொடுக்கப்பட்டது.

உயிரிழந்த குடும்பப் பெண்ணின் மகள் இணைப்பினை வழங்க முற்பட்ட போது தொலைக்காட்சி கேபிள் இணைப்பின் மூலம் பாய்ந்ததாக தெரிவிக்கப்படும் மின்சாரம் மகளைத் தாக்கியதைக் கண்ட தாய் மகளைக் காப்பாற்றுவதற்காக ஓடிச்சென்று அவரைப் பிடித்துள்ளார்.

இதற்கிடையில் மின் தாக்குதலில் இருந்து மகள் தூக்கியெறியப்பட்ட தாயார் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அவர் மரணமடைந்துள்ளார்.

கைப் பகுதியில் மின்சாரத் தாக்கம் ஏற்பட்டிருப்பதாக வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பிலான மரண விசாரணையினை பருத்தித்துறை பதில் நீதவான பா.சுப்பிரமணியம் மேற்கொண்டார். மேலதிக விசாரணைகளைப் பருத்தித் துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.(ம-60)

## பெற்றோல், டீசல்...

இந்தக் கூட்டத்தின்போதே மேற்படி விலைக் குறைப்பு தொடர்பாக ஆராயப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

விசேடமாக எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல், அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விலைக்குறைப்பு தீர்மானம் விரைவில் எட்டப்படும் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

தற்போதைய நிலையில் பெற்றோல் லீற்றரின் விலை 117 ரூபாயாகவும், டீசல் லீற்றரின் விலை 95 ரூபாயாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## கைக்குண்டொன்று...

முறைப்பாட்டை தொடர்ந்து கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நீதிமன்றின் அனுமதியைப் பெற்ற பொலிஸார் சிறப்பு அதிரடிப்படையினரின் உதவியுடன் அந்தக் கைக்குண்டை மீட்டு செயலிழக்கச்செய்தனர். (ம-4)

## வடக்கில் மாவீரர்...

ங்களில் பயன்படுத்த இடமளிக்கக்கூடாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

27ஆம் திகதி மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்காக மாவீரர் துயிலும் இல்லங்களை துப்புரவு செய்யும் சிரமதானப் பணிகள் நேற்றைய தினம் முதல் ஆரம்பமாகியிருக்கின்றன.

2015ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து தமிழர் தாயகப் பகுதிகளில் மாவீரர் தின அனுஷ்டிப்பு நடவடிக்கைகள் ஓரளவு சுதந்திரமாக மேற்கொள்ளக்கூடிய நிலை உருவாகியிருக்கின்றது எனத் தெரிவித்தார். (ம-4)

## கொட்டும் மழையில்...

க்கழக மாணவர்கள் நேற்றைய தினம் கொட்டும் மழையிலும் போராடியிருந்தார்கள்.

இந்த போராட்டம் இன்றும் தொடரும் என மாணவர்கள் அறிவித்துள்ளனர். பல்கலைக்கழகத்தின் வாயிலை மூடி நேற்று முன்தினம் முதல் போராடி வந்த மாணவர்கள் நேற்றையதினம் பூட்டிய கதவுகளை திறந்து பல்கலை பிரதான வாயிலிலும் வீதிகளிலும் கொட்டகை அமைத்து போராடி வருகின்றார்கள். இப் போராட்டம் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போது பிற்பகல் ஒரு மணியளவில், பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைமையால் மூன்று பீடங்களினதும் கற்றல் செயற்பாடுகளை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படுவதாகவும், மாணவர்களை விடுதிகளில் இருந்து வெளியே வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டது.(ம-4)

## தமிழ்த் தலைவர்...

செய்த தவறு என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

இலங்கை வரலாற்றில் இனப்பிரச்சினை என்பது மேலும், மேலும் எண்ணெய் ஊற்றி வளர்த்தெடுக்கப்பட்டது. அந்த காலத்தில் சிங்கள தலைவர்கள் இலங்கைக்கு சமஷ்டி ஆட்சியே பொருத்தமானது என கூறியிருந்தனர்.

அப்போது ஐக்கிய இலங்கைக்குள் ஒற்றுமையாக வாழ முடியும் என தெரிவித்து தமிழ்த் தலைவர்கள் சமஷ்டியை கைவிட்டனர். இது தான் அவர்கள் செய்த பெரிய தவறு.

இருப்பினும் சிங்கள மற்றும் முஸ்லிம் இனத்தவர்களுடன் இணைந்து வாழ முடியும் என தெரிவித்தே அவர்கள் சமஷ்டியை கைவிட்டிருந்தனர். எனினும், தமிழர்களை சகோதர இனமாக கருதி சமத்துவத்தை வழங்க சிங்களவர்கள் தவறிவிட்டார்கள் என சுட்டிக் காட்டியுள்ளார். (ம-4)

## வழுக்கி விழுந்த...

சாலைக்கு மாதாந்த கிளினிக்குக்காக மருந்து பெறச் சென்ற குறித்த குடும்பஸ்தருக்கு வைத்தியப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அவரை வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுமாறும் அறிவுறுத்தியுள்ளனர். இதற்கமைய வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் குறித்த குடும்பஸ்தர் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று காலை வைத்தியசாலையின் கழிப்பறைக்குச் சென்ற போது வழுக்கி விழுந்துள்ளார். அவரை மீட்டு நோயாளர் விடுதியிலுள்ள கட்டிலில் கொண்டு சென்று சேர்ப்பித்த போது திடீரென மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியைச் சேர்ந்த குணரத்தினம் வாகீசன் (வயது-42) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-4)

## வடக்கு, கிழக்கு...

மேலும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுடைய போராட்டம் தொடர்பில் நாடாளுமன்றில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தின் இரண்டாம் நாளான நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

4 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்கள் சரித்திர ரீதியாக தாங்கள் வாழ்ந்து வந்த மண்ணில் தமிழர்களின் தனித்துவமான இறைமையின் அடிப்படையில், வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி தீர்வு கிடைக்கும் என தமிழர்கள் நம்புகின்றார்கள். 1950களிலும், 1960களிலும், தொடர்ச்சியாக நடைபெற்ற தமிழர்கள் மீதான வன்முறைகளால் பல இலட்சம் மக்கள் புலம்பெயர்ந்து சென்றிருந்தார்கள். இவ்வாறான ஒரு நிலையில் தான் தமிழர்கள் தமக்கு உரித்தான தேசிய வாழ்வு அடிப்படையில், பகிரப்பட்ட இறைமையின் அடிப்படையில் தயாரப்படுத்தி வந்துள்ளார்கள். இந்த நாட்டில் புரையோடிப் போயிருந்த இன வன்முறை, சிங்கள குடியேற்றம், மற்றும் தமிழர்கள் மீதான வன்முறை காலத்தால் வளர்ந்திருந்தது.

பல ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், அவை கிடப்பில் போடப்பட்டன. இவ்வாறான நிலையில்தான் சமஷ்டி என்ற பதம் முன்வைக்கப்பட்டது. இதனை இனவாதிகள் பிழையாக கையாண்டமையால் தான் இந்த நாடு தவறான வழியில் சென்றிருந்தது. இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னதாகவே இடது சாரிகள் சமஷ்டியை தீர்வாக முன்வைத்திருந்தார்கள். இதே போன்று தான் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆரும் சமஷ்டியை தீர்வாக முன்மொழிந்திருந்தார். தந்தை செல்வநாயகமும் சமஷ்டியையே தீர்வாக கோரியிருந்தார். இந்த வரலாற்றை எல்லாம் நாங்கள் கடந்து வந்த போதிலும் சமஷ்டியை சரியாக புரிந்து கொள்ளாத ஏற்றுக்கொள்ளாத அடிப்படையில் தான் இந்த நாட்டில் தற்போதும் பலர் உள்ளனர்.

இது நாட்டின் ஆரோக்கியத்துக்கு உகந்ததல்ல. இவ்வாறு தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட இன ரீதியான முரண்பாடுகள் 1980 களிற்கு பின்னர் அதிகரித்திருந்தது. அப்போது தான் இந்தியா இந்த பிரச்சினையில் தலையிட்டிருந்தது.

எனினும் 13-வது திருத்தம் இந்த நாட்டுக்கு சரியான தீர்வாக எடுத்துக்கொள்ள முடியாது. இதனை தமிழீழ விடுதலைப்புலிகள் நிராகரித்திருந்தார்கள். இதே போன்று அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகியோரும் இந்த சட்டமூலத்தை நிராகரிப்பதாக இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியிடம் எழுத்துமூலம் சமர்ப்பித்திருந்தார்கள். இதன் தொடர்ச்சியாக தான் நாட்டில் புதிய தீர்வுகள் முன்வைக்கப்பட்டன. எனினும் அவை எவையும் சரியாக கொண்டு செல்லப்படவில்லை. இலங்கை -இந்திய ஒப்பந்தம் அமுலுக்கு வந்த போது கூட இந்த நாடு துண்டாடப்பட போகின்றது. பிளவுபட போகின்றது என தென்னிலங்கையில் பிரசாரம் செய்யப்பட்டிருந்தது.

ஆனால் இது ஒரு நிரந்தர தீர்வாக அந்த நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், இதனை சரியான முறையில் நடைமுறைப்படுத்தியிருந்தால், இன்று புதிய அரசியலமைப்பு பற்றி சிந்திக்க வேண்டிய தேவை இல்லை. அதற்கு பின்னரும் பல வாய்ப்புக்கள் வந்திருந்தன. ஆனால் மக்களுக்கு தீர்வை முன்வைக்கும் விடயங்களாக இவை முன்வைக்கப்படவில்லை. இதற்கு அப்பால் இன்று வரை தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் எதோ ஒரு வகையில் தொடர்ந்த வண்ணமே உள்ளன. யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வீதிகளின் முன்பாக போராடிக்கொண்டு உள்ளார்கள். அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்ட அரசியல் கைதிகள் மூவருடைய வழக்குகளை மீளவும் வவுனியா நீதிமன்றுக்கு மாற்றுமாறு கோரியே அவர்கள் போராடி கொண்டுள்ளார்கள். இந்த கோரிக்கையை கூட நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியால் நிறைவேற்ற முடியவில்லை.

ஆகவே இவர்களால் இந்த விடயத்தினை ஏன்கையாள முடியாமல் உள்ளது இதே போன்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், நிலங்களை இழந்தோர் தொடர்ந்தும் போராடி வருகின்றார்கள். ஆகவே புதிய அரசியலமைப்பில் மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. அதனால் தான் மக்கள் போராடுகின்றார்கள் என தெரிவித்தார். (ம-4)

## எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(C-223)



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us cnrworldwideexpress


## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## காணி தேவை

வடமராட்சி பருத்தித்துறை, யாழ்ப்பாண வீதி, மந்திகைச் சந்தியில் இருந்து கரவெட்டி மூத்த விநாயகர் கோவிலுக்கு இடைப்பட்ட பகுதிக்குள் 15 பரப்பு காணி விலைக்கு தேவை.
**தொடர்புகளுக்கு : 077 016 8444** (C-224)

## புதிதாக மெருகூட்டப்பட்ட கடைத் திறப்புவிழா



Ranba
DSI, V.K.C, BATA

01.11.2017 புதன்கிழமை 8 மணி தொடக்கம் 10 மணிக்கு இடைப்பட்ட சுப வேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

உரிமையாளர் - செல்வ விக்னேஸ்வரராஜா
விக்கி சூ பலஸ் 34, 36,
Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
077 943 5552

(1189)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-221)

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## வவுனியாவில்.......

**CDC கல்லூரி (CBA)**

கம் ஒழுங்கை, வைரவர்கோவில் வீதி, வைரவபுளியங்குளம்

பேராதனைப் பல்கலைக்கழகம்
**BA** பழைய பாடத்திட்டம்
சகல பாடங்களுக்குமான துரித மீட்டல் வகுப்புக்கள்
**ஆரம்பம் : 04 - 11 - 2017**
சனி காலை 9.00

தொடர்புகளுக்கு:
S.தேவதாஸ் B.com
077-3211233, 0242223228

(1192)

## உயர் கலைக் கல்லூரி

(கொக்குவில், குளப்பிட்டிச்சந்தி)
**A/L 2019, 2018, Day Class**
அனைத்துதுறை மாணவர்களுக்குமான
யாழ்.பிரபல ஆசிரியர்
சித்திரம் Mr.ஜெயந்தன்
**ஆரம்பம் : 01.11.2017 (3.00 - 5.00)**
**077 017 5346**

(C-209)

## திருமண வாழ்த்துக்கள்

இன்று 01.11.2017 புதன்கிழமை செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருமண பந்தத்தில் இனிதே இணைந்து கொள்ளும் எமது அன்புச் செல்வங்கள் லோகேந்திரன் ஆதிசக்தி தம்பதிகள் வாழ்வில் இன்புற்று வாழ வாழ்த்தி அவர்கள் பல்லாண்டு காலம் பதினாறும் பெற்று பெருவாழ்வு காண சந்நிதி முருகப் பெருமானை வேண்டுகின்றோம்.

(1186)




அன்புடன் வாழ்த்துவோர்:
கங்காதரன் - பகீரதி தம்பதிகள் (அண்ணா, அண்ணி)
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

## அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

**0768226243**

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

யாழ்ப்பாணத்தில் இருந்த வேலையற்ற யுவதிகளில் நானும் ஒருத்தி V2TRAVELS இல் பதிந்து விசா கிடைத்ததும் எனக்கு பதிவுத்திருமணம் நடந்து கணவரையும் நிரந்தர விசாவில் அமெரிக்காவிற்கு கூட்டிச்சென்றேன். மிகத்துல்லியமாக வழிநடத்திய V2TRAVELS க்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



திருச்செல்வம்-மரியரோகினி
அமெரிக்க விசா வெற்றியாளர்

(C-221)

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

**V2 TRAVELS**

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி, | 10,பேருந்து நிலையம் | முடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |



# தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

**அனுமதி இலவசம்**

தொழில் தேடுபவர்கள், இளைஞர், யுவதிகள், மேலதிக வருமானம் தேவைப்படுபவர்கள்

- நேர்முகப் பரீட்சைக்கு எவ்வாறு தயார் செய்வது!
- நவீன தொழிற்சந்தையில் தொழில் வாய்ப்பினை பெற தங்களை எவ்வாறு தயார் செய்தல்!
- மாதாந்தம் ரூ. 100,000.00 வருமானம் எவ்வாறு பெறுவது!
- சவால்களுக்கு மத்தியில் உயர் வருமானம் ஒன்றை எவ்வாறு பெறுவது!

இடம் : யாழ்/ மத்திய கல்லூரி மண்டபம்
திகதி : 04 நவம்பர் 2017
நேரம் : காலை 09 மணி

குறிப்பிட்டளவு ஆசனங்களே உள்ளதால் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு 02 ஆம் திகதிக்கு முன்னர் அழைப்பினை மேற்கொண்டு உங்கள் வரவினை உறுதி செய்யவும்.

யாழ்ப்பாணம் : 075 041 8528
சுன்னாகம் : 071 877 7478

இத்துறையில் பல வருட அனுபவமும் சிறப்புத் தேர்ச்சியும் பெற்ற வடமாகாணத்தின் முன்னணி வளவாளருடன்

(C-225)

இப்பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் பெறுமதி மிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.